நவம்பர், 1958

விளம்பி - கார்த்திகை

40 நயா பைசா

மஞ்சரி

கலியாண விளம்பரங்கள்

மலையாள இசை

ஆச்சரியமான யந்திரங்கள்

மாயக்காரி
(கன்னடக் கதை)

நேபால யாத்திரை
(தமிழ்ப் புத்தகம்)

அன்பே எல்லாம்

'கடவுளின் இயல்பு என்ன? அவருடைய வடிவம் யாது? அவருடைய கருத்து என்ன? அவருடைய வண்ணம் யாது?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி அக்பர்.

''கடவுளின் இயல்பு அன்பு. அவருடைய வடிவம் அன்பு. அவருடைய கருத்து அன்பு. அவருடைய வண்ணம் அன்பு'' என்று சொன்னார் தாதூ என்னும் பக்தர்.

—டீ. எல். வாஸ்வானி

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர் :
என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர் :
தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்
கி. தாமோதரன்

ஓவியர்கள்:
ஸாமி, மகான், சுசி, சுப்பு

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணா). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். 'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 11] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: நவம்பர் 1958 [இதழ் 11

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

ராணுவ ஆட்சி அலை: முதலில் பர்மா, அப்புறம் பாகிஸ்தான், இப்போது தாய்லந்து இந்த மூன்றிலும் சாதாரண ஆட்சி போய், ராணுவ சர்வாதிகார ஆட்சி தோன்றியிருக்கிறது. அபிவிருத்தி அடையாத கீழ்நாடுகளில், இந்த ராணுவ ஆதிக்கம் ஏன் அலைபோல் பரவி வருகிறது? ஜனநாயகத்துக்கே சோதனைக்காலம் வந்திருக்கிறதா? ஒன்றுக்குப்பின் ஒன்றாக அடுத்தடுத்து இந்த நாடுகள் ஏன் இப்படி ராணுவ ஆட்சிக்கு இரையாக வேண்டும்? யாரோ திட்டமிட்டு நடத்துவது போல், இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றனவே; காரணம் என்ன? உள் நாட்டிலே ஏற்ற சூழ்நிலை இல்லாவிட்டால், வெளிநாட்டினர் என்னதான் சூழ்ச்சி செய்தாலும் இத்தகைய நிகழ்ச்சிகள் தோன்ற மாட்டா. முக்கியமாகப் பாகிஸ்தானை எடுத்துக்கொள்வோம். அங்கே ராணுவ ஆட்சியை மேற்கொண்ட தளபதி அயூப் கானும் ஜனாதிபதி இஸ்கந்தர் மிர்ஸாவும் இதற்குச் சொல்லும் காரணங்களை நாம் கவனிக்க வேண்டும். என்னதான் அவர்கள் காரணம் சொன்னாலும் ராணுவ ஆட்சி ஏற்படுத்தியது நியாயமில்லை என்று நாம் கட்சி பேசிப் பயனில்லை. நாட்டிலே அரசியல் சக்திகள் ஒழுங்காய், முறையாய்ச் செயலாற்றி வந்திருக்குமானால், ராணுவ ஆட்சி இவ்வளவு அமைதியாய்ச் சுலபமாய் ஏற்பட்டிருக்க முடியாது. அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கும் சம்பந்தமே இல்லை; அரசாங்க யந்திரம் அடியிலிருந்து நுனிவரையில் லஞ்சமும் ஊழலும் மலிந்து உளுத்துப் போய்விட்டது; மக்களுக்கு நிர்க்கதியான ஓர் உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது; தலைவர்கள் தங்கள் சுயநலத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறார்கள்-இந்த நிலையில் ஜனநாயகம் எப்படிச் சாத்தியம்? ஆட்சியிலே ஜனங்களுக்கு என்ன அக்கறை இருக்க முடியும்? 'ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன?' என்ற அலட்சியமும் மனச்சோர்வுந்தான் அவர்களுக்கு உண்டாகும். மக்களுக்கு அரசியல் பிரக்ஞையை உண்டாக்குவதுமட்டும் போதாது; 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்று பாரதி பாடியது போல, 'இந்த நாட்டின் அரசியலில் எனக்கும் பங்கு உண்டு; பொறுப்பு உண்டு' என்று ஒவ்வொரு மனிதரும் உணர்ச்சி கொள்ளச் செய்ய வேண்டும்-இதுதான் அரசியல்வாதிகளின் கடமை. இந்தக் கடமையைப் புரியாத அரசியல்வாதிகளைப் படைத்த நாட்டில் ஒரு நாளும் ஜனநாயகம் நிலைக்காது. குறிப்பிட்ட மூன்று நாடுகளிலும் ராணுவ ஆதிக்கம் ஏற்பட்டதற்கு அரசியல்வாதிகள் தங்களைத் தாங்களே தான் நொந்துகொள்ள வேண்டும். இந்த ராணுவ ஆட்சி அலைக்கு மிஞ்சியிருக்கிறதே பாரதம் என்று நாம் மகிழ்ந்துவிடக் கூடாது. இங்கேயும் நிலைமை மோசமாய்த்தான் இருக்கிறது என்று பலர் எண்ணுகிறார்கள். எனவே, நம் அரசியல் தலைவர்களும் நிர்வாகத்

தலைவர்களும் சற்று எச்சரிக்கை கொண்டு சிந்தித்துப் பார்த்துத் தங்களிடமுள்ள குற்றங் குறைகளைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும். மக்களிடம் அதிக உறவும் தொடர்பும் கொண்டு, ராஜ்யம் அவர்களுடையது என்ற உணர்ச்சியை உண்டாக்க வேண்டும். பொதுக் காரியங்களில் பயபக்தியோடு நடந்துகொள்ள வேண்டும். அப்போதுதான், ஜன நாயகப் பயிர் இங்கே வேர் விட்டுத் தழைத்தோங்கும்.

கேரளப் போலீஸ் சுட்டது: கேரளத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சி நடக்கிறது. அந்த ஆட்சியின் கீழே மறுபடியும் தொழிலாளர்மீது போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்திருக்கிறது. அதுவும் வேலை நிறுத்தத்துக்குத் தலைமை வகித்து நடத்தியவர்கள் கம்யூனிஸ்டுகள். அந்த வேலை நிறுத்தக்காரர்கள் கட்டுக்கடங்காமல் போகவே அவர்களைப் போலீஸார் சுட்டுக் கலைத்ததாகச் சர்க்கார் அறிக்கையிலிருந்து தெரிகிறது. இரண்டு பேர் மாண்டு விட்டார்கள். பலருக்குக் காயம். ஸப் இன்ஸ்பெக்டரின் கழுத்திலே கடுமையான கத்திக் குத்துக் காயம். குட்ராலி என்ற இடத்தில் வேலை நிறுத்தக்காரர்கள் வேலைக்குச் சென்ற தொழிலாளரைத் தாக்கியதன் விளைவாக இந்தக் கலவரம் நடந்ததாம்.

எதிர்க்கட்சியார்மீதே சகல பழிகளையும் சுமத்திக்கொண் டிருந்த கேரளத்துக் கம்யூனிஸ்ட் சர்க்கார், இந்த விளைவுக்கு என்ன சமாதானம் சொல்லுவார்களோ தெரியவில்லை. அது எப்படியானாலும் சரி; இந்தத் துப்பாக்கிப் பிரயோகம்பற்றி விரிவான பகிரங்க விசாரணைக்கு உடனே கேரள சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதன் முடிவை நாடு முழுவதுமே ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது நிச்சயம்.

பெயர் மாற்றும் விபரீதம்: 'நான் மாத்திரம் இப்படிச் செய்யவில்லை என்றால், என் பெயரை மாற்றி அழை' என்று சிலர் வீறு கூறுவதுண்டு. ஆனால், அப்பாவியான இடமும் தெருவும் என்ன செய்யும்? நினைத்தபோதெல்லாம் நினைத்தவர் அதை மாற்றுவது இப்போது ஒரு மவுசாயிருக்கிறது.

இந்த விபரீதத்தை யூனியன் சர்க்கார் நடத்தும் 'யோஜனா' என்ற பத்திரிகையின் ஒரு குறிப்பு விளக்கி யிருக்கிறது. கல்கத்தாவில் கிளைவ் ஸ்ட்ரீட், நேதாஜி போஸ் ஸ்ட்ரீட் ஆயிற்று; ஆனால், அது நிலைக்கவில்லை. ஸெண்ட்ரல் அவென்யூவுக்கு ஜதீந்திரமோஹன் அவென்யூ என்று நாமம் சூட்டினாலும், டாக்ஸி டிரைவர்கள் தலையைத்தான் சொறிகிறார்கள். பௌபஜார், பிபின் பிஹாரி காங்குலி ரோடு ஆகியும் அதை அப்படிக் குறிப்பிடுவோர் இல்லை. பம்பாயில் ஹார்ன்பி ரோடின் புதுப் பெயரான தாதாபாய் நௌரோஜி ரோடு பேர் வாயில் நுழையவேயில்லை. சர்ச்கேட் ரோடு, வீர நரிமான் ரோடு ஆகி, வியாபாரிகளின் விளம்பரங்களில் மட்டும் இடம் பெற்றிருக்கிறது. மாரின் ட்ரைவ், ஸர்தார் வல்லபபாய் படேல் ரோடு ஆகி, மிகவும் சிக்கனமாய் வழங்குகிறது. சென்னையில் சைனா பஜார் ரோடு, எழுத்திலே மட்டும் சுபாஷ் சந்திர போஸ் ரோடு ஆகியிருக்கிறது. பேச்சிலே பழைய சைனா பஜாராகத்தான் இருந்து வருகிறது. டில்லியில் க்வீன்ஸ் வே மட்டும் இதற்கு விலக்கு. அது ஜன் பத் என்று சகஜமாக ஜனங்களிடையே புழங்குகிறது. அமெரிக்காவில் தான் ஒரு வால் ஸ்ட்ரீட் இருக்கிறது என்று நினைக்காதீர்கள். டில்லியிலும் ஒன்று இருக்கிறது. ஆனால் அதற்கு வால் மார்க் என்று பெயர். இறுதியாக ஒன்று சொல்லலாம்: நெடுங்காலமாய்ப் புழங்கிவரும் பெயர்களைத் திடீரென்று மாற்றுவதைப் போன்ற அசட்டுத்தனம் வேறில்லை. ஆயினும் இந்த மோகம் பிடித்தவர்களை யார் தடுத்து நிறுத்த முடியும்?

எங்கள் கிருஷ்ணு



ஜாக்கி அண்டு ஹெரால்டு
ஏ. லிட்டில்டேல்

இந்தக் கட்டுரையின் ஆசிரியர்களான இளந்தம்பதிகள், இப்போது ஐரோப்பாவில் பிரயாணம் செய்துகொண்டு, நாவல் எழுதி வருவதோடு, தங்கள் குழந்தை கிருஷ்ணுவுக்கு ஐரோப்பாவைக் காட்டி வருகிறார்கள். 'பேரெண்ட்ஸ் மகஸீன்' பத்திரிகையின் முந்திய ஆசிரியை க்ளாரா லாவேஜ் லிட்டில்டேல் என்பவளின் மகன் ஹெரால்டு. பிரெஞ்சு நாட்டில் பிறந்த ஜாக்கி, பத்திரிகைக்குக் கட்டுரைகளும் கதைகளும் எழுதிவந்தவள்.

பின்னாலே 'வீல்' என்று ஓர் அலறல் கேட்கிறதே, அது நாலு மாதமான எங்கள் முதல் குழந்தை கிருஷ்ணுவின் குரல்தான். அவனுக்குக் காய்ச்சல் இல்லை; நோய் ஒன்றும் இல்லை. தாயாதிப் பையன் டிமதி எங்கள் குழந்தைக்கு வர்ணக் காகிதச் சங்கிலி ஒன்று கொடுத்தான். அதன் அடிக் கரணையைக் குழந்தை கிழித்து விட்டான். அதிலிருந்து ஒரே வெறி வந்துவிட்டது அவனுக்கு.

இதோ ஒரு நிமிஷத்தில் அந்தக் கரணையை நாங்கள் ஒட்டி விடுவோம். க்ரிஸ் (கிருஷ்ணு) வெறி தணிந்து விடுவான். நாங்கள் திரும்பி எங்கள் வேலையைக் கவனிக்கலாம். சில மாதங்களுக்கு முன் என்றால், இது அவ்வளவு சுலபமாக இருந்திராது. சில மாதங்களுக்கு முன்னே இந்த மாதிரி நிலைமையில் ஒரேயடியாய்ப் பீதி அடைந்திருப்போம்.

இந்தக் காலத்திலே பல புதிய பெற்றோர்களைப் போல்தான் நாங்களும், எங்கள் முதல் குழந்தை பிறக்குமுன், எங்கள் நண்பர்களின் குழந்தைகளைக் கண்டு ஏதோ சொற்ப 'ஸெகிண்ட்-ஹாண்ட்' அநுபவம் பெற்றிருந்தோம்; தப்பும் தவறுமான கருத்துக்கள் கொண்டிருந்தோம்.

'சொற்ப அநுபவம் இருந்தால் போதும்; குழந்தையைச் சமாளித்து விடலாம்' என்ற நிச்சயத்தோடிருந்தோம். எங்கள் வாழ்க்

காப்பிரைட்: பேரெண்டஸ் மகஸீன் (ஆங்கிலம்: ஜூன் (58),
4600-டைவெர்ஸி அவென்யூ, சிக்காகோ 39, யூ. எஸ். ஏ.

கையை ஒரு மூன்றாவது நபரோடு பகிர்ந்துகொள்ளும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். கிருஷ்ணு என்ற சிறு பையனைச் சமாளிப்பதில் உள்ள சிரமத்தையோ, மிகச் சுலபமாய்க் குழந்தையைச் சமாதானப்படுத்தி விடக்கூடிய ஒரு காரியத்தை முதல் குழந்தை பெற்ற பெற்றோர்கள் எவ்வளவு சிக்கலாக்கிவிட முடியும் என்பதையோ நாங்கள் அறியவில்லை. உணவு புகட்டும் ஒரு சின்னக் காரியத்திலேயே அப்படி அடியோடு தோற்றுப் போவோம் என்று நாங்கள் நினைக்கவேயில்லை.

கிருஷ்ணுவுக்கு உணவு பிடித்தது. வழக்கமான எந்த உணவையும் அருந்த அவன் சித்தமா யிருந்தான். ஆனால், ஒரு வேளைக்கும் மறு வேளைக்கும் நடுவே இரண்டு மணி நேர இடைவெளியாவது இருக்க வேண்டும் என்று சொன்னார்களே; 'இன்னும் கொண்டு வா, கொண்டு வா' என்று நடுநடுவே கிருஷ்ணு உணவு கேட்கிறானே! நாங்கள் என்ன செய்வது?

இதற்கு ஒரு வழி சொல்லும்படி ஜில்லா நர்ஸைக் கேட்டோம். ''தண்ணீரைக் கொடுத்துப் பாருங்கள்'' என்று அவள் சொன்னாள். ஆனால், க்ரிஸ்ஸுக்குத் தண்ணீர் பிடிக்கவில்லை. தண்ணீரைக் காய வைத்துப் பார்த்தோம்; அதில் சீனி போட்டுப் பார்த்தோம்; சுத்தோதகமாய்ச் செய்து பார்த்தோம். ஊஹூம்! க்ரிஸ் முகத்தைத் திருப்பிக்கொண்டு ஓலந்தான் இட்டான். 'க்ரிஸ் தண்ணீர் குடிக்காவிட்டால், அவனுக்குத் தண்ணீர் தேவையில்லை என்றே அர்த்தம்' என்று எங்கள் டாக்டர் சொன்னார். முதல் குழந்தை பெற்ற முற்றும் புதிய பெற்றோர்களுக்கு உண்டாகக் கூடிய கவலைகளைப்பற்றி எங்கள் டாக்டருக்கு என்ன தெரியும்? தண்ணீர் பாட்டிலை அப்பாலே வைத்தோம். மஞ்சள் காமாலையோ, வறட்சிக் காய்ச்சலோ - இப்படி என்னவாவது சின்னங்கள் தென்படுகின்றனவா என்று கவனிக்கத் தொடங்கினோம்.

காய்ச்சல்! ஒரு நாள் மாலை க்ரிஸ் பெரிசாய் ஓலமிட்டு ஓய்ந்தபின் அவனுடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்தோம். அது ஒரே உஷ்ணமாக இருக்கக் கண்டோம். 'சரிதான்; என்னவோ வந்து விட்டது' என்று எண்ணி, தெர்மாமீட்டரைத் தேடி எடுத்தோம். அதை வைத்துப் பார்த்ததில், சகஜமான நிலையைவிட முழுக்க முழுக்க இரண்டு டிகிரி கூட! குழந்தை வளர்ப்புப்பற்றி எங்களிடமிருந்த புஸ்தகங்களைப் புரட்டினோம். பூர்ண ஆரோக்கியமான குழந்தைகளின் தேக உஷ்ணம் அநேக சமயம் நூறு டிகிரி உயரங்கூட எழுவதுண்டு என்று அவை கூறின. ஆனாலும், நாங்கள் எப்படி இதை நம்ப முடியும்? க்ரிஸ்ஸின் தேக உஷ்ணம் தொண்ணூற்றொன்பது டிகிரி இருந்தது. கைக்குழந்தைகளின் கண்களில் பார்வை இராது என்பது உண்மைதான். ஆனால், க்ரிஸ்ஸின் புதிய கண்கள் பாராதது மட்டும் அல்ல, அவற்றில் என்னவோ ஜொலிப்பு இருந்தது. அவனுடைய கன்னங்களில் ஆரோக்கியத்தின் சின்னமான ரோஜா நிறத்தைக் காணவில்லை. நோயுற்றவை போல் அவை உப்பி விட்டன. அவன் கோபத்தால் புலம்பவில்லை; வேதனையோடு புலம்புகிறான். நாங்கள் டாக்டருக்கு டெலிபோன் செய்தோம். அவர் ஏதும் காது கொடுக்காமலே போனை மாட்டிவிட்டார்.

உணவு, காய்ச்சல் இவைபற்றி நாங்கள் கவலைப்படாத சமயத்தில், மாந்தம் வந்துவிட்டதாக அஞ்சினோம். க்ரிஸ்ஸிடம் மழலைக் குழறலைக் காணவில்லை. அவனுடைய உடம்பைத் தேய்த்தோம்; குலுக்கினோம்; தடவிக் கொடுத்தோம். அவனுக்கு விக்கல்தான் எடுத்தது- குழறலைக் காணவில்லை; இல்லவேயில்லை. இது மாந்தத்தில்தான் போய் முடியும் என்று எங்களுக்கு நிச்சயமாய்த் தோன்றியது. காற்றை விழுங்கினால், கதவைப் படீர் என்று சாத்தினால், குழந்தையின் குடலிலே கோளாறு ஏற்படும்; பச்சையாய் மலங் கழியும். மேலும், மாந்தத்திலே குழந்தை கண்டிப்பாய் அழும். க்ரிஸ் அழு

தான். அவனுக்கு மாந்தந்தான் வந்துவிட்டது.

நாங்கள் மாத்திரம் தொல்லைப் பட உண்மையிலே முயன்ருல், வேறு எத்தனையோ தொல்லைகள் எங்களை வந்தடைந்தன. பரு ஒன்று தோன்றினுல், அதை இடுப் புப்படை என்றும், ஒரு தும்மல் தும்மினுல் அதை நிமோனியாக் காய்ச்சல் என்றும் எண்ணிப் பயந் தோம். ஸ்வெட்டர், போர்வை, ஜோடு இவைபற்றி அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஓயாத மல்லுக் கட்டுத்தான். சீதளம் கண்டுவிடப் போகிறதே என்று அம்மா அவற் றைக் குழந்தைக்கு அணிந்து விடுவாள்; புழுக்கம் கண்டு புண் ணுகிவிடப் போகிறதே என்று அவற்றை யெல்லாம் அப்பா பிய்த்தெறிந்து விடுவார். க்ரிஸ் ஸின் சின்னஞ் சிறு நிமிர்ந்த மூக்கு மூச்சுவிட மிக ஏற்றதாய் அமைந் திருந்தது. அவன் பிரமாதமாய்ப் புரண்டு புரண்டு போர்வையை அப்பாலே தள்ளினுனே தவிர, ஒரு போதும் முகத்துக்கு மேலே அதை இழுத்துக் கொள்ளவில்லை. என் ருலும், பருந்துக் கண்ணேடு அவ னைக் காவல் செய்துகொண் டிரா விட்டால், க்ரிஸ் மூச்சுத் திணறிப் போவான் என்று நாங்கள் என்னவோ நிச்சயமாய்-மிகமிக நிச்சயமாய்-நம்பினேம். பாஸ்டன் ஆஸ்பத்திரியிலே ஏதோ சோதனை நடத்தினுர்களாம். குழந்தைகளை மட்டும் நாம் ஒன்றும் தலையிடாமல் விட்டுவிட்டால், அவை இறகு மெத்தையிலே படுத் திருந்தால்கூட மூச்சுத் திணருமல் தங்கள் சுய யுக்தியாலேயே தப்பித் துக்கொள்ளும் என்று அந்தச் சோதனையிலே நிரூபித்துவிட்டார்க ளாம். ஆனுல், பாஸ்டன் ஆஸ்பத் திரிக்காரர்கள் தவறி யிருக்கக் கூடாதா என்ன? க்ரிஸ் மற்றக் குழந்தைகளைப் போல் அல்ல; அவன் ஓர் அலாதிப் பிறவி.

அப்புறம், பல சில்லறைப் பிரச்னைகள்; க்ரிஸ்ஸின் தொப்புள் ஒருபோதும் குணமே ஆகாதோ? பூனை ஏதாவது நோய்க் கிருமி களையோ விஷ ஜந்துக்களையோ கொண்டுவந்து சேர்த்துவிடுமோ? தவிர, சில பெரிய பிரச்னைகளும் உண்டு: க்ரிஸ்ஸைத் தூக்கித் தூக்கி வைத்துக்கொண் டிருந் தால், எதற்கும் எங்கள் கையையே மித மிஞ்சி எதிர்பார்த்து விடு வானே? இப்படி ஓயாமல் தூக்கிக் கொண் டிருந்தால், தன்னிடம் எங் களுக்கு அன்பில்லை என்ற உணர்ச்சி கொண்டு விடுவானே? குழந்தை அழாதபடி அவனைச் சமா தானப்படுத்துவது, அவனுக்கு உண்மையிலே சுகம் அளிக்குமா? அல்லது குழந்தையை அன்போடு பராமரிப்பதற்குப் பதிலாகச் சோம்பேறிப் பெற்றேர்கள் கைக் கொள்ளும் ஒரு யுக்தியா?

'குழந்தை வளர்ப்புப்பற்றிப் பெற்றேர்களின் கலைக்களஞ்சியம்' ஒன்றை நாங்கள் புரட்டினேம். காகித அட்டைப் புத்தகங்களைப் புரட்டினேம். எங்கள் டாக்டரை யும் ஜில்லா நர்ஸையும் கலந் தாலோசித்தோம். ஒருவருடன் ஒருவர் கலந்தாலோசித்தோம். இறுதியாக, குழந்தை குட்டிகளைப் பெற்ற எங்கள் நண்பர்களைக் கலந் தாலோசித்தோம். க்ரிஸ்ஸை எப் படிப் பராமரிப்பது என்று எங் களுக்குப் புரியவே யில்லை. நாங்கள் புலம்பினேம். அவனிடம் எங் களுக்கு அன்பு உண்டோ என்பது கூட எங்களுக்குச் சந்தேகமா யிருந்தது. எங்களிடம் என்ன கோளாறு?

நண்பர்கள் உதடு நலுங்காமல் சமாதானம் சொன்னுர்கள். ''குழந்தையோடு ஒட்டிக்கொள் ளக் கொஞ்ச காலம் ஆகத்தான் ஆகும். அமரிக்கையா யிருங்கள். க்ரிஸ் எவ்வளவு அற்புதமா யிருக் கிறன்! பாருங்கள் அவனை'' என்ருர்கள்.

கிருஷ்ணுவை நாங்கள் பார்த் தோம். அவனுடைய மேனி தெளிவாயிருந்தது. அப்படி ஒன் றும் அவன் அதிகமாய் அழவில்லை. அவனைப் பார்த்துக்கொண்டே யிருந்தோம். சற்று நேரத்தில் எங்களுக்கு விஷயம் விளங்கி விட்டது. நல்ல பெற்றேராயிருக்க வேண்டுமே என்ற ஆத்திரத்தில் நாங்களாகவே என்ன என்னவோ கற்பனை செய்துகொண்டு விட்

டோம். ஆனால், க்ரிஸ் முற்றும் சுகமாய்த்தான் இருக்கிறான்.

உணவைப்பற்றி நாங்கள் ஏன் கவலைப்பட்டோம்; ஓர் ஒழுங்கும் இல்லாதபடி உணவு கொண்டான் என்றே தோன்றியது. என்றாலும், க்ரிஸ் எடையில் தினம் ஓர் அவுன்ஸ் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறான். இன்று நிறுத்ததில் அவன் வயசுக்கேற்ற சரியான எடைதான் இருக்கிறான். தண்ணீர்? தனக்குத் தண்ணீர் வேண்டுமா வேண்டாமா என்பதெல்லாம் அவனுக்குத்தான் தெரியும். தண்ணீர் குடிக்க அவன் மறுத்ததால் ஒரு தீங்கும் விளைந்து விடவில்லை.

நாங்கள் பார்த்தோம்; காத்தோம். க்ரிஸ் நன்றாகவே மூச்சு விடுகிறான். அவனுடைய தொப்புள் குணம் அடைந்து வருகிறது. நோய்க்கிருமிகள் ஒன்றும் அவனை நெருங்கவில்லை. மிகச் சொற்பமாய்த் துணி உடுத்து விட்டபோது தான், க்ரிஸ் பெருங்களிப்போடிருந்தான். இப்போது அவனுக்கு எவ்வளவு குறைவாய்த் துணி போதும் என்கிறானே அதோடு நாங்கள் நிறுத்திக்கொண்டோம். நிப்பிள் வைத்துச் சூப்ப அவன் விரும்பினால் சூப்பட்டும் என்று விட்டுவிட்டோம். தன்னிடம் நாங்கள் போதிய அளவு அன்பு செலுத்தவில்லையென்றால், அதை அவனே முதலில் எங்களுக்கு அறிவித்துவிடுவான்.

க்ரிஸ் விஷயத்தில் நாங்கள் சகஜமாக நடந்துகொண்டோம். இப்படி நடந்துவர நடந்துவர, அவனைப் புரிந்துகொள்வது எங்களுக்கு மிகவும் எளிதாயிற்று. எல்லாரையும் போலவே அவனுக்கும் போது போகாமல் கஷ்டமாயிருக்கிறது என்று கண்டோம். பொம்மை ராட்டினம், தாயாதிப் பையன் தந்த காகிதச் சங்கிலி இரண்டையும் பிடித்துக்கொண்டு க்ரிஸ் விளையாடினான். சில சமயம் தன்னை யாராவது தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்ச வேண்டும் என்று விரும்பத்தான் விரும்புகிறான் என்பதையும் அறிந்தோம். இரவிலே அவன் படுக்கப் போகு முன் அழுகிற அழுகைக்குக் காரணம் இவ்வளவு குஷியான பகல்போது போய்விடுகிறதே என்ற வருத்தந்தான் என்று நாங்கள் புரிந்துகொண்டோம். எனவே, அவனருகே சற்று உட்கார்ந்து நிம்மதியாக இருக்கச் செய்து சீராட்டிவிட்டு அவனைப் படுக்கவிட்டால் அவன் சுகமாய்த் தூங்கலானான். அப்படியும் அவன் சற்று அழத்தான் அழுவான். பத்து நிமிஷம் சென்றதும் கொஞ்சம் தட்டிக் கொடுத்தால், அழுகை நின்று தூங்கிவிடுவான்.

சிறிது சிறிதாக எங்களுக்கு நம்பிக்கை உண்டாயிற்று. சாப்பிடுவது, தூங்குவது, விளையாடுவது இந்த எல்லாப் பழக்கங்களும் எல்லாக் குழந்தைகளையும் போலவேதான் அவனுக்கும் பெரும்பாலும் ஏற்பட்டன. ஆயினும், மொத்தமாக இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தால், அலாதிச் சிறப்பு வாய்ந்த அலாதியான ஒரு பையனாகவே அவன் இருந்தான். தனித்த மனிதன் ஒருவன் உருவாகி வருவதை நாங்கள் கண்டோம். எவ்வளவுக் கெவ்வளவு அவனை நாங்கள் புரிந்துகொண்டோமோ அவ்வளவுக் கவ்வளவு அவன் எங்களோடு இருந்து எங்கள் வாழ்விலே பங்கு கொள்ள வேண்டும் என்று ஆசை கொண்டோம்.

எங்கள் அண்டை வீட்டுக்காரி பார்பாரா நல்ல அநுபவசாலி. அவளுடைய ஆசியுடன் பரீட்சார்த்தமாக ஒரு காரியம் செய்தோம். அப்போது க்ரிஸ் நாலு வாரக் குழந்தை. அவனைக் கடற்கரைக்கு எடுத்துச் சென்றோம். வலைப்பின்னல் போட்டு மூடிய நல்ல பாதுகாப்பான தொட்டிலில் அவன் தூங்கிக் கொண்டிருக்க, நாங்கள் நீரிலே நீந்தி விளையாடினோம். காரிலே உட்கார்ந்தபடியே பார்க்கக்கூடிய சினிமா (ட்ரைவ்-இன்-மூவி) காட்சிக்கு, அடுத்தபடி அவனை எடுத்துச் சென்றோம். திரையிலே ஆயரும் இந்தியரும் மாரிலின் மன்ரோ என்ற நடிகையும் ஆடிய ஆட்டத்தையெல்லாம் சட்டை செய்யாமல் அவன் நிம்மதியாய்த் தூங்கிக்கொண்டிருந்தான், சில

சமயம் அக்கம் பக்கத்து நண்பர்களின் வீடுகளுக்கு நாங்கள் போகும்போது அவனையும் எடுத்துச் சென்ருேம். மாலையில் ஆறு மணிக்குக் கொடுக்க வேண்டிய பாலை, பாட்டிலிலே ஊற்றிக் கொடுத்ததும் குடிப்பான். உடனே அவனுடைய தொட்டி வண்டியில் விட்டால், தூங்கி விடுவான். அப்படியே அதைத் தள்ளிக்கொண்டு போய், நண்பர்களின் வீட்டு நிம்மதியான தனியறையிலே விட்டுவிடுவோம். மாலையில் இப்படி நாங்கள் போய்த் தங்கியிருக்கும்போது, அவனுக ஒரு போதும் எழுந்திருப்பதே யில்லை. பத்து மணிககு மறுபடியும் பால் கொடுத்தால், அரைத்தூக்கத்தோடு அதைக் குடித்து, அது முழுவதும் காலியாவதற்குள்ளேயே மீண்டும்நன்ருய்த் தூங்கிவிடுவான்.

அவனுக்கு ஆறு வாரம் ஆகும் போது, அதிகப்படியாக ஐந்தாறு இடைக்கச்சு (டயாப்பர்ஸ்), அவை சிறுநீரால் நனைந்தால் அப்படியே போட்டு வைக்க அதிகப்படியான ஒரு தகர டப்பா இவற்றை வாங்கிக் கொண்டு, அவனை எடுத்துக் கொண்டு நியூ யார்க் நகருக்குப் போய் ஒரு வார காலம் தங்கிவிட்டு வந்தோம். அங்கே இருந்த நேரமெல்லாம் அவன் ஆனந்தமாய்த் தூங்கிக்கொண்டே இருந்தான்.

மூன்று மாதக் குழந்தையான போது, அவனுடைய மூன்று தாயாதிப் பையன்களைக் காண்பதற்காக வெர்மாண்ட் நகருக்கு அவனைக் கொண்டு சென்ருேம். அந்தப் பிரயாணத்தில் அவன் அதிகமாய்த் தூங்கவில்லை. பெரும்பாலும் கையில் வைத்துக்கொண்டுதான் அவனுக்கு விளையாட்டுக் காட்ட வேண்டியிருந்தது. ஆனல், இதற்குப் பதிலாக எங்களுக்கு ஒரு பரிசு கிடைத்தது. காரைக் கண்டும் அதை ஓட்டிய டிரைவரைக் கண்டும் க்ரிஸ் வியந்த வியப்பு, இளந்தாயாதிப் பையன்களைக் கண்டதும் அவன் குலவிய உற்சாகம் இவையே நாங்கள் அடைந்த பரிசு.

இன்று நாங்கள் எங்கே போனுலும், க்ரிஸ்ஸையும் கூடவே எடுத்துச் செல்கிருேம். இவ்வளவு சின்னப் பையனை, இவ்வளவு விழிப்பாயிருந்து இவ்வளவு விவரம் தெரிந்துவிட்டவனை, இனித்தனியே வீட்டில் விட்டுச் செல்ல முடியாது.

நாங்கள் க்ரிஸ்ஸை நன்ருய்ப் புரிந்துகொண்டோம் - எங்களையும் உலகத்தையுமே நன்ருய்ப் புரிந்து கொள்ளத் தொடங்கினேம். க்ரிஸ்ஸுக்கு எல்லாம் புதுமையாயிருந்தன. ஒவ்வொரு நாளும், பெரும்பாலானவை மீண்டும் புதுமையாயிருந்தன. ஒரு பொருளை முதல்முதலாக அவன் பார்க்கும் போது, நாங்களும் அந்தப் பொருளில் ஒரு புதுமையைக் கண்டோம். அவன் வாழ்விலே முதல்முதலாகப் பருவகாலம் மாறியபோது சுற்றிலும் தோன்றிய வர்ணவிசித்திரங்கள், மாறி மாறி அவனைப் பித்துப் பிடிக்கவும் உற்சாகம் கொள்ளவும் செய்த காலநிலை மாறுதல்கள், அவன் உணவு கொள்ள விழித்தெழும்போது தோன்றும் உதய சூரியன், இரவிலே அவனை நாங்கள் படுக்க விடும்போது மலைவாயில் விழும் செங்கதிரோன்-இந்த அத்தனையையும் இந்தப் புதிய மானிட ஜீவனின் வாதுமை நீலக்கண் கொண்டே நாங்களும் பார்த்தோம்; அப்போது இவையெல்லாம் ஒரு புதுப் பொருள் பெற்றன.

க்ரிஸ்ஸைப் புரிந்துகொள்ள நாங்கள் முயன்ற முயற்சி யெல்லாம் எங்களையே புரிந்துகொள்ளும் முயற்சியாயிற்று. கண்டதும் காதல் உண்டாகாது; அநுபவம் என்பது பிறர் தர வாராது-இந்த உண்மையை உணர்ந்து கொண்டோம். ஒரு மனிதரை மற்ருெரு மனிதர் பாதுகாப்பதாக எண்ணக் கூடாது; கனிவும் உண்மையான அன்புமே செலுத்த வேண்டும். பரஸ்பரம் அநுபவங்களைப் பகிர்ந்து கொண்டால்தான் இது சாத்தியமாகும். அன்பும் நமக்கிருந்ததோ என்று நீங்கள் ஆச்சரியப்படும்படியாக, உங்களை அறியாமலே அன்பு வளரும்.

போகட்டும். க்ரிஸ் வைத்திருந்த காகிதச் சங்கிலியின் அடிக்கரணையைக் காணவில்லையே; இப்போது அதைக் கவனிப்போம். அந்தக் கரணையை அவனேதான் தின்றிருப்பானே ஒரு வேளை?

இணையற்ற விசுவாசம்

நபிகள்பிரான் காலத்துக்குப் பின் நிகழ்ந்தது இது.

உமர் (ரலி) அவர்களின் கிலாபத்துக் காலம். சிறுவர்களான ஹுஸைன் (ரலி) அவர்களும் ஹலரத் உமர் அவர்களின் புதல்வரும் விளையாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். விளையாட்டினூடே சிறுவர்களுக்குள் சச்சரவு தோன்றியது. விளையாட்டுப் பிள்ளையான ஹுஸைன் கோபம் அடைந்து தம் தோழரை நோக்கி, ''நீ என்ன நினைத்துக்கொண் டிருக்கிறாய்! உன் தகப்பனார் எல்லோருக்கும் கலீபாவாக இருந்தாலும், நீ என் பாட்டனாருடைய அடிமையின் மகன்தானே!'' என்று இகழ்ச்சியாகப் பேசிவிட்டார். அவமான உணர்ச்சி தாங்காமல் உமர் (ரலி) அவர்களின் மகன் தம் தந்தையாரிடம் ஓடி ஹுஸைன் கூறியதை அழாக் குறையாக எடுத்துச் சொன்னார்.

''ஹுஸைன் அப்படிக் கூறினாரா!'' என்று கேட்டார்கள் கலீபா. அவர்களுடைய கண்களில் நீர் துளும்பியது. மகனுடைய கையைப் பற்றி அழைத்துக் கொண்டு ஹுஸைனிடம் சென்றார்கள்.

''ஹுஸைன், சற்று என்னோடு வாரும்!'' என்று அவரை மற்றொரு கையில் பிடித்துக்கொண்டு நேராக நாயகம் (ஸல்) அவர்களின் அடக்கத் தலத்துக்கு அழைத்துச் சென்றார்கள் கலீபா.

பெருமானார் அவர்களின் 'ரவுலா'வின் முன்னால் நின்றுகொண்டு உமர் (ரலி), ஹுஸைனைப் பார்த்து,''நீர் சற்று முன்பாக என் மகனிடம் கூறிய சொல்லை இப்போது மீண்டும் சொல்லும்!'' என்றார்கள்.

ஹுஸைன் (ரலி) இன்னது செய்வதென்று அறியாமல் விழித்தவராக வாயடைத்து நின்றார்.

''பேச மாட்டீரா? தயை செய்து, அல்லாவுக்காக, மீண்டும் ஒரு முறை உம்முடைய பாட்டனார் அவர்களின் முன்பாக அந்த வார்த்தையைச் சொல்லும்!''

இப்போதும் ஹுஸைன் மௌனமாகவே நின்றார். ஹலரத் உமரின் கன்னங்களிலே கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

''நாயகமே! இதோ என் மகன் சாட்சி. உங்கள் அன்புப் பேரர், நான் தங்களுடைய அடிமை என்று கூறியிருக்கிறார். அந்தச் சொல்லுக்காகவாவது என்னைத் தங்களுடைய உண்மையான அடிமையாக ஏற்றுக்கொள்ளுங்கள். தங்கள் அடிமை என்ற தகுதிக்காகவாவது எனக்கு ஈடேற்றம் கிடைக்கட்டும்'' என்று கூறி, குழந்தைபோலத் தேம்பித் தேம்பி அழுது, சிறுவர் ஹுஸைனைத் தழுவி மோந்துகொண்டார்கள் கலீபா. —'பிறை', சென்னை.

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

இராமசாமி, இராமபுரம்புதூர்.

கேள்வி: என்னை எலி கடித்து ஏழு ஆண்டுகளாயின. இது ஏதாவது கேடு விளைக்குமா?

விடை: எலி கடித்து உண்டாகும் கேடுகள் ஒரு மாதத்திலேயே ஏற்பட்டுவிடும். கடித்த இடத்தில் தடிப்பு அல்லது சீழ்க்கட்டி உண்டாகலாம். ஜுரம் தோன்றலாம். எலி கடித்து ஒரு மாதம்வரை ஒன்றும் ஏற்படவில்லையானல், பிறகு இதனல் ஒன்றும் கேடு ஏற்படாது என்று உறுதியாய்ச் சொல்லலாம்.

சங்கரநாராயணன், சென்னை.

கே: என்னுடைய மூன்று வயசுக் குழந்தை இன்னமும் நன்றாகப் பேசவில்லை. இவளுடைய தமக்கை இரண்டு வயசிலேயே நன்றாய்ப் பேசினள். தங்கைக்குப் பேச வராததற்கு என்ன காரணம்? என்ன பரிகாரம்?

வி: முதல் குழந்தையிடம் வீட்டில் எல்லாரும் பேசிக் கொஞ்சிக் குலாவியிருக்க வேண்டும். இரண்டாவது குழந்தைக்கு எல்லாப் பண்டமும் அது கேட்காமலே கிடைத்திருக்க வேண்டும். இப்படித்தான் ஒரு வீட்டில் முதல் குழந்தை பெற்றோரிடம் தனியாக இருந்தது. இரண்டாவது குழந்தை

பாட்டி வீட்டில் வளர்ந்து வந்தது. குழந்தையின் தேவைகளை அது கேட்கு முன்னேயே பாட்டி பூர்த்தி செய்துவிடுவாள்; இப்படி ஒழுங்காய் எல்லாத் தேவைகளும் பூர்த்தியானதால் குழந்தை பேசக் கற்றுக்கொள்ளத் தாமதம் ஆயிற்று.

மு. இராமசாமி, வல்லம்.

கே-1: என் வயசு 17. நான் இரவில் படுத்து உறங்கும்போது, திடீரென்று விழித்துக்கொள்கிறேன். விழித்து எல்லாப் பொருள்களையும் ஓரளவு பார்த்துக் கொள்கிறேன். ஆனல் பேச முயன்றல், முடியவில்லை; உடம்பைக்கூட அசைக்க முடியவில்லை. ஓர் ஐந்து நிமிஷமாவது இப்படியே இருந்த பிறகு சுயநினைவு வருகிறது. சில

வேளை கனவு காணும்போது, யாரோ தூக்கியெறிவது போல் இருக்கிறது. தினம் சுமார் 8 மைல் சைக்கிள் சவாரி செய்கிறேன். சிலர் இந்த நிகழ்ச்சிகளைக் காட்டேறிப் பிசாசின் குணம் என்கிறார்கள்.

வி: இப்படித் தூங்கும்போது, திடீரென்று விழித்துக்கொள்வதும் எழுந்துகொள்ள முடியாததும் பேச முடியாததும் கனவு நிலையைச் சேர்ந்தவையே. பிசாசுமல்ல; காட்டேறியுமல்ல. விழித்திருக்கும்போது செய்யத் தகாத தென்று நினைக்கும் ஏதோ காரியத்தைக் கனவில் செய்து முடிக்க முயன்று அதற்குத் தடை ஏற்பட விழித்துக்கொள்வதே இந்த நிகழ்ச்சி. பெரும்பாலோருக்கு வாலிப காலத்தில் இந்த வகைக் கனவுக் கோளாறுகள் ஏற்படுவது இயல்பே. நண்பர் இராமசாமி மிகவும் ஒழுக்க உணர்ச்சி உடையவர் என்று தெரிகிறது.

கே-2: என் பிள்ளைக் குழந்தைக்கு ஐந்து வயசாகிறது. பள்ளிக்கூடம் போகிறான். ஆனால் எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொள்ளவில்லை. செவியால் கேட்டுப் பாடங்களை ஒப்பித்து விடுகிறான். இது திருந்துமா? என்ன செய்ய வேண்டும்?

வி: ஒவ்வொரு குழந்தையின் திறமையும் ஒவ்வொரு விதம். குழந்தைகளே சாதாரணமாய்க் கேள்வி ஞானம் உடையவர்கள். பேச்சுக்களின் ஒலிதான் முதலில் குழந்தைகளைக் கவரும். பிறகு பேச்சு ஒலிக்குக் கருத்து விளங்கும். கண்காணும் காட்சிகளையும் பேச்சுக் கருத்துக்களையும் தொடுத்து அறிவது அடுத்தபடி. ஆகவே, எழுத்தும் வாசிப்பும் மெதுவாக வருவதற்கு வியப்பு அடைய வேண்டாம். இந்தக் குழந்தை நன்றாய்ப் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டு விடுவான்.

அன்பரசன்.

கே: வயசு 16. இயற்கையில் சிறிது கறுப்புத்தான். ஆனால் சென்ற 10 ஆண்டுகளாக உடம்பு முழுவதும் தோல் மிகக் கறுப்பாயும், கிழவர்களுடைய தோலைப் போல் சுருங்கியும் வெடித்தும் இருக்கிறது. முகத்தில் பருக்களும் தோன்றி யிருக்கின்றன. லைஃப் பாய் சோப்பும் முகப்பவுடரும் உபயோகிக்கிறேன். இந்தச் சரும வியாதியைப் போக்க என்ன வழி?

வி: பொதுவில் நண்பர் அன்பரசனுக்குப் போஷணை காணாது. டி-வைட்டமின் இருக்கும் எண்ணெய்களை அருந்தலாம். இவற்றோடு பாலையும் அதிகம் அருந்தினால் குணம் அடையலாம். மீனெண்ணெயில் ஏ-வைட்டமினும் டி-வைட்டமினும் கிடைப்பதால், அதை அருந்தி விரைவில் குணம் அடையலாம்.

துரை முருகேசன், காரமடை.

கே: கண்ணில் வெள்ளை (பூ) விழுவது ஏன்? இதைக் குணமாக்குவது எப்படி?

வி: கருவிழியில் புண் ஏற்பட்டு ஆறும்போது, பூ விழுந்து விடுகிறது. வைசூரி நோய் இதற்கு முக்கியமான காரணம். கருவிழியினுள்ளே ஐரிஸ் (பாப்பா) என்னும் திரை இருக்கிறது. இதை அறுத்துப் பாப்பாவை அகலப் படுத்தினால், பார்வை விருத்தி அடையலாம். கருவிழியைப் பூ விழுந்த இடத்திலிருந்து அறுத்து நீக்கி அதோடு புதிய கருவிழியை ஒட்டுவது நவீனச் சிகிச்சை. இறந்தவரின் சடலங்களிலிருந்து இறந்த

வுடனேயே கருவிழியை அறுத்து எடுத்து விசேஷ முறையில் இதற்காக இந்தக் காலத்தில் சேமித்துக் காத்து வைக்கிறார்கள்.

பெ. பொன்னம்பலம்.

கே: கல்லூரியில் படிக்கும் போது என் சகாவான மாணவன் ஒருவனுக்குச் சிறிது க்ஷயநோய் இருப்பதாக எனக்குத் தோன்றியது. அந்த வருஷ முடிவில் அந்தப் பாடசாலையை விட்டுச் சென்றேன். வேறொரு பாடசாலைக்குச் சென்றபோது அங்கேயும் ஒரு மாணவனுக்கு க்ஷயநோய் இருப்பதாய்த் தோன்றிப் படிப்பை முடிக்காமல் நின்றுவிட்டேன். காலில் செருப்புப் போட்டுக் கொண்டு வந்தவர்கள் அதன் மூலம் க்ஷயநோயைத் தந்துவிடுவார்கள் என்று அச்சப்படுவேன். யாராவது எச்சில் துப்பினாலோ, இருமினாலோ, தும்மினாலோ, க்ஷயநோய் என்னைப் பற்றிக் கொள்ளுமோ என்ற பயம் உண்டாகிறது. துடைப்பத் தூசியோ கழிவு நீரோ என்மீது தெறித்தால். உடனே போய்த் துணிகளைக் கசக்கிக் குளித்துவிடுகிறேன்.

வி: கேள்வியின் விவரங்கள் முழுவதையும் இங்கே எழுத இடம் இல்லை. க்ஷய ரோகம் ஒரு காலத்தில் பயங்கரமான நோயாக இருந்தது. இந்தக் காலத்தில் தக்க மருந்துகளைக் கொண்டு விரைவில் இந்த நோயைக் குணப்படுத்திக் கொள்ளலாம். நோய்கள் பற்றிக் கொள்ள எத்தனையோ காரணங்கள் இருந்தும், நல்ல காற்று, நல்ல போஷாக்கான உணவு, தேகப் பயிற்சி முதலியவை நம்மை நோய் பற்றிக்கொள்ளாமல் காத்து வருகின்றன. வாக்சினேஷன் முறைகளைக் கையாண்டு தொத்து நோய்களைத் தடுத்துக் கொள்கிறோம். க்ஷய நோய்க்குத் தடுப்பு முறையாக, பி. சி. ஜி. வாக்சின் குத்திக்கொள்ளலாம். அச்சத்தாலேயே உடலின் வலிமை குன்றிப் போகும்; நோய்கள் பற்றிக் கொள்ளக்கூடும். நம் சருமம், இரைப் பையில் சுரக்கும் அமிலச்

சுரப்பு, ரத்தத்தில் உள்ள வெள்ளை வடிகங்கள், சில ரசாயனப்பொருள்கள் இவையெல்லாம் நம்மை நோய்க் கிருமிகள் பற்றிக் கொள்ளாமல் தடுத்து விடுகின்றன. நண்பர் பொன்னம்பலம் உளவைத்திய நிபுணரை அணுகி இந்த அச்சத்தை நீக்கிக்கொண்டு வாழ்க்கைக் காரியங்களைத் தடையின்றிச் செய்து முடித்துக்கொள்ள வேண்டும்.

ரகுநாதன், சென்னை.

கே: ஏ-வைட்டமின் அதிகம் சாப்பிடுவதால், உடலுக்கு நன்மையா, கெடுதலா?

வி: இந்த வைட்டமினை அதிகம் அருந்துவதால், ஆயுள் நீடிக்கும் என்று சில ஆராய்ச்சி நிபுணர்கள் நம்புகிறார்கள். எலிகளின் ஆயுள் இந்த வைட்டமினால் நீடித்திருக்கிறதாம். அவை குட்டி போடுங் காலமும் இதனால் நீடித்திருந்ததாம்.

குப்பு ராவ், கோவை.

கே: ஆண் பீஜ உறுப்பிலிருந்து சுரக்கும் டெஸ்டொடிரோன் என்னும் சுரப்பைக் குத்திக்கொள்வதால் ஆண்மை அதிகமாகுமா?

வி: பீஜ உறுப்பை நீக்கிய ஆண்களுக்கு டெஸ்டொடிரோன் ஆண்மையை எழுப்பும். 'ஆனால் சாதாரண ஆண்களுக்கு டெஸ்டொடிரோன் புகுத்துவதால், விபரீதம் ஏற்படும். கருத் தரிக்கச் செய்யும் திறமை போய்விடும்' என்று பேராசிரியர் ஹால்டேன் கூறியிருக்கிறார்.

வெங்கட்ராமன், மதுரை.

கே: போதை மருந்துகளை முதல் முதல் கண்டு பிடித்தவர் யார்?

வி: டேவி என்பவர் நைட்ரஸ் ஆக்சைஸடு என்னும் வாயுவைக் கொண்டு போதை நிலையை ஏற்படுத்திப் பல்லைப் பிடுங்கலாம் என்று விளக்கினார். வெல்ஸ் என்பவர் முதல்முதல் ஈதர் என்னும் திராவகக் காற்றைச் சுவாசித்துப் போதை நிலை உண்டு பண்ணிச் சஸ்திர வைத்தியம் நடத்தலாம் என்று விளக்கினார். இங்கிலாந்தில் ஸிம்ப்ஸன் என்பவர் குளோரொஃபார்ம் என்னும் திராவகக் காற்று ஈதரைக் காட்டிலும் நல்ல போதை மருந்து என்றும், சஸ்திர வைத்தியத்துக்கு உதவும் என்றும் முதல்முதல் விளக்கினார்; முதலில் பிரசவ வேதனையை இதனால் நீக்கினார்.

சந்திரசேகரன், சென்னை.

கே: இப்போது நடமாடும் இன்ஃப்ளூவென்சா ஜுரத்துக்குப் பிறகு கடுமையான இருமலும் அயர்வும் ஏற்படுகின்றனவே; இதற்குப் பரிகாரம் என்ன?

வி: இன்ஃப்ளூவென்சா ஜுரம் அதிகக் கடுமையாயிருப்பதில்லை. ஆனால் அயர்வும் இருமலும் வெகு நாள் நீடித்திருக்கின்றன. இந்த ஜுரம் ருசியையும் கெடுத்து விடுகிறது. சல்ஃபானமைடு மருந்துகளாலும் பெனிசிலினாலும் பலன் அதிகம் கிடைப்பதில்லையென்றாலும் இருமல் சற்றுக் குறைகிறது. புளி சேர்க்காது கறிகாய்களை உபயோகிக்கலாம். சாதத்தோடு தக்காளி ரசம் சேர்த்தால் ருசியாயிருக்கும். ஒரு வாரம் இப்படிச் சாப்பிட்டுவிட்டு, முட்டை, பால் வகைகளைக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்த்துப் போஷாக்கை விருத்தி செய்து கொள்ளலாம். வைட்டமின் மாத்திரைகளும் வெகு உபயோகமாயிருக்கும். குழந்தைகளுக்கு மீனெண்ணெய் வெகு நாள் கொடுத்து வரவேண்டும்.

கடவுள் இருக்கிறார்

இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு மர்மமான சக்தி, சகல பொருள்களிலும் வியாபித்திருக்கிறது. அதை நான் காணவில்லை; என்றாலும் உணர்கிறேன். கண்ணுக்குப் புலனாகாத இந்தச் சக்தியை நமது உணர்ச்சி உணரும்படி செய்கிறது. எனினும், இது நிரூபணம் செய்ய முடியாததாய் இருக்கிறது. ஏனெனில், என் புலன்களால் உணரும் மற்ற எல்லாப் பொருள்களையும் போல் இல்லை இது; புலன்களைக் கடந்து நிற்கிறது.

ஆயினும் கடவுள் இருக்கிறார் என்பதற்கு ஓரளவு காரணம் காட்டலாம். சாதாரண விவகாரங்களிலுங்கூட, யார் தங்களை எப்படி ஆளுகிறார்கள் என்று அறியாத ஜனங்களை நாம் கண்டிருக்கிறோம். ஆயினும், தங்களை ஆளும் ஏதோ ஒரு சக்தி இருப்பதைமட்டில் இவர்கள் நிச்சயமாய் நம்புகிறார்கள்.

மைசூரில் சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது ஏழைக் கிராமவாசிகள் அநேகரைச் சந்தித்தேன். இவர்களை விசாரித்த பொழுது, மைசூரை ஆள்வது யாரென்று இவர்களுக்குத் தெரியவில்லை. யாரோ கடவுள் ஆள்வதாகவே இவர்கள் சொன்னார்கள். தங்கள் அரசனைப்பற்றி இந்த ஏழை மக்களின் அறிவு இவ்வளவு அற்பமாய் இருக்குமானால், இவர்களது மன்னரினும், இவர்கள் சிறுமையைவிட எவ்வளவோ மடங்கு கடவுளினும் சிறியவனான நான், மன்னர்களுக்கும் மன்னனான பிரபுவின் - கடவுளின் - பிரசன்னத்தை அறியமுடியாதிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

—காந்தியடிகள்

கர்நாடக ஸங்கீதத்திலே தனிப் பாணியை
மட்டும் அல்ல, பழமையின் தொடர்பையும்
கேரளத்திலே காணலாம்.

மலையாள இசை

ஆற்றூர் கிருஷ்ண பிஷாரடி

சாகித்தியத்தின் சிறப்புக்களைச் சொல்லாலும் எழுத்தாலும் பிறருக்குத் தெரிவித்துவிடலாம். கீதத்தின் விசேஷங்களைப் பாடித்தான் தெரிவிக்க முடியும். பாட்டுக்களை ஸ்வரப்படுத்தி எழுதும் வழக்கம், கொஞ்ச காலமாகத்தான் ஏற்பட்டிருக்கிறது. எவ்வளவு கவனமாக ஸ்வரப்படுத்தினாலும் வேண்டிய அடையாளங்களைச் சேர்த்தாலும், பாட்டின் நுட்பமான வேற்றுமைகளைக் காண்பிக்க முடிவதில்லை. புதிதாக ஒரு பாட்டை மற்றொருவருக்குக் கற்பிக்க வேண்டுமானால், பாடிக் காண்பிப்பதைத் தவிர வேறு வழி இதுவரையில் ஏற்படவில்லை. ஆகவே, கேரள ஸங்கீதத்தின் விசேஷங்கள் முழுவதையும் எழுத்தில் காண்பிக்க முடியாது; சில அடிப்படைத் தத்துவங்களைமட்டும் இங்கே விளக்குகிறேன்.

நம் நாட்டில் உள்ள எல்லா விதமான ஸங்கீதங்களும் ஸப்த ஸ்வரங்களை ஆதாரமாகக் கொண்டுதான் ஏற்பட்டிருக்கின்றன. ஸ்தாயிகளை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் ஸ்வரங்களின் விபாகம் ஏற்பட்டிருக்கிறது. மந்தரம், மத்யமம், தாரம் என்று ஸ்தாயிகள் பொதுவாக ஸங்கீதத்தில் வழங்குகின்றன.

நாதத்தை உரத்தோ தாழ்த்தியோ எழுப்புகிற வேற்றுமையில் உருவானவைதான் இந்த ஸ்தாயிகள். தாழ்த்திய நாதத்தை மந்தரம் என்றும், உரத்த நாதத்தைத் தாரம் என்றும், நடுநிலையில் உள்ள நாதத்தை மத்யமம் என்றும் கூறுகிறார்கள். இவை தவிர, மந்தரத்தையும் விடத் தாழ்வான நாதத்தை அநுமந்தர ஸ்தாயி என்றும், தாரத்தைவிட உரத்ததைத் தாரதர ஸ்தாயி என்றும் கூறுவதுண்டு. வீணையில்தான் இந்த அநுமந்தரமும் தாரதரமும் பூர்ணமாய் வருவதைக் காண முடியும். ஸ்தாயிகளின் வேற்றுமைகள் க்ஷணம் (நொடி) ஆதியாகப் பல காலப் பிரமாணங்களைத் தழுவிவரும் நாத அலைகளின் எண்ணிக்கைகளிலே அமைகின்றன.

ஸப்த ஸ்வரங்களின் சேர்க்கையான ஸங்கீதத்தைப் பொதுவாக மார்க்கம் என்றும், தேசி என்றும் முன்னோர்கள் இரண்டு விதமாகப் பிரித்திருக்கிறார்கள். இதில் மார்க்க ஸங்கீதத்தைப்பற்றிப் பரதர் முதலியவர்கள் விஸ்தாரமாகக் கூறியிருந்தாலும் அந்த முறை இன்று பிரசாரத்தில் இல்லை. தேசி என்ற முறைதான் பாரதம் முழுவதும் இன்று இருந்து வருகிறது.

தேசி ஸங்கீதத்தில், மார்க்க முறையில் காணும் கிராம பேதங்களையும் ரீதி பேதங்களையும் காண முடியவில்லை. ஆனால், அவுத்தராஹம் (வடக்கத்தி முறை) தாக்ஷிணாஹம் (தெற்கத்தி முறை) என்ற இரண்டு வழிகள் பிரிந்திருப்பது கண்கூடு. அவுத்தராஹ ஸங்கீதத்தை ஹிந்துஸ்தானி ஸங்கீதம் என்றும், தாக்ஷிணாத்ய ஸங்கீதத்தைக் கர்நாடக ஸங்கீதம் என்றும் கூறி வருகிறார்கள். இரண்டு வகைகளிலும் ஸ்வரங்களில் சிறிது ஸ்தான பேதம் இருக்கிறது. கர்நாடக ஸங்கீதத்தில் இருக்கும் சுத்த ரிஷபத்தையும் சுத்த

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 24-5-'58), கோழிக்கோடு.

தைவதத்தையும் அவுத்தராஹத்தில் காண்பதற்கில்லே.

கர்நாடக ஸங்கீதத்திலும் தனிப்பட்ட ஒரு வழியில் செல்வது கேரள ஸங்கீதம். இதற்கும் தெலுங்கு, கன்னடம், தமிழ் இந்தப் பிராந்தியங்களில் வழங்கும் ஸங்கீதத்துக்கும் பொதுவாகவே சில வேறுபாடுகள் உண்டு. ஒவ்வொரு பிராந்தியக்காரருக்கும் பேசும் பாஷை, நடை, உடை இவற்றில் ஏற்படும் வேற்றுமைகளைப்போல் நாதங்களிலும்அவற்றிலிருந்து உண்டான சங்கீதத்திலும் வேற்றுமை ஏற்படாமல் போகாது. அதனுல்தான் வாத்திய ஸங்கீதங்களைக் கேட்கும்போதுகூட, இது 'இந்துஸ்தானி ஸங்கீதம்,' 'இது தெலுங்கு ஸங்கீதம்,' 'இது தமிழ் ஸங்கீதம்' என்றெல்லாம் வேற்றுமை புலப்படுகிறது. இதன் காரணம் சூழ்நிலே, பழக்க வழக்கங்கள், பண்பாடு இவற்றின் விசேஷந்தான். ஆகவே, மலேயாளிகளுக்கு என்று உடை, உணவு, பாஷை முதலியவை ஏற்பட்டிருப்பது போல் பாட்டிலும் வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. இதை அசம்பாவிதம் என்று கூறுவதற்கு இல்லே; வேற்றுமை இருப்பதுதான் இயல்பு என்றுகூடச் சொல்லலாம்.

ராகத்தைப் பல பகுதிகளாகப் பிரிக்கும்போது, அந்தப் பிரிவுகளின் விசேஷங்களே ஸ்தாயங்கள் என்று குறிப்பிடுகிருர்கள். ஒன்று, இரண்டு அல்லது மூன்று ஸ்வரங்களுக்கு விசேஷம் ஏற்படுத்துவதற்குக் 'கமகம்' என்று பெயர். தக்ஷிண தேசத்துப் பிற பிராந்தியங்களின் ஸங்கீதத்திலிருந்து கேரள ஸங்கீதம் ஸ்தாயங்களிலும் கமகங்களிலும் வேறுபாட்டை அடைகிறது.

ஒரு ராகத்தைப் பெரிய தடாகமாகவும் அதன் அலேகளேத் தடாகத்திலிருந்து உருவெடுத்து ஓடும் வாய்க்கால்களாகவும் உவமிக்கலாம். வாய்க்கால் தண்ணீரின் ஓட்டத்திலே வேறுபாடுகள் இருப்பது போல், ராகங்களேப் பாடும் வகையிலும் பிராந்திய வேற்றுமைகளால் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. தெலுங்குப் பாட்டில் ஒன்று அல்லது ஒன்றரை ஸ்தாயிகளில் வியாபிக்கும்படி ஸ்வரங்களின் ஆரோஹண அவரோஹணங்களும் ஸஞ்சாரங்களும் ஒரே சமயத்தில் ஏராளமாக உண்டாகும். கேரள ஸங்கீதத்தில் அப்படி உண்டாவது அபூர்வம். மூன்ருே நாலோ ஸ்வரங்களில் மட்டுமுள்ள விசேஷங்கள் கலந்த ஸ்தாயங்கள்தான் கேரள ஸங்கீதத்தில் அதிகம். தெலுங்குப் பாட்டில் 'திருபம்', 'ஸ்புரிதம்', 'முத்ரிதம்' ஆகிய கமகங்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிருர்கள்; அவைதான் பாட்டுக்கு அழகு ஊட்டுகின்றன. கேரள ஸங்கீதத்தில் ஊஞ்சல் ஆடுவது போன்ற ஆந்தோளித கமகத்துக்கும், ஆகர்ஷண கமகத்துக்கும், ராகக் கலேயைத் தனிப்படக் காட்டும் தான ஸ்தாயத்துக்குமே முக்கியத்துவம் அளிக்கிருர்கள்: ராகத்தின் ஜீவஸ்வரத்தில் செய்யும் ஸஞ்சாரம் மற்றப் பிராந்திய ஸங்கீதங்களேவிடக் கேரள ஸங்கீதத்தில் அதிகம். மேலும், பிற பிராந்திய ஸங்கீதங்களில் இல்லாத 'புறநீரு', 'கானக் குறிஞ்சி', 'கேதாரப் பந்நு' போன்ற ராகங்கள் கேரளத்தில் மட்டுந்தான் உண்டு.

கர்நாடக ஸங்கீதத்தைச் சார்ந்த இந்தக் கேரள ஸங்கீதம் எப்போது உருவாயிற்று என்று கூறுவது சிரமம். கேரள மக்கள் தோன்றிய நாளிலிருந்தே இது உருவாகி வந்திருக்கிறது. கடவுள் வாழ்த்து, பெண்களின் கைகொட்டிக்களி (விளேயாட்டு) போன்ற வடிவில் தான் வெகு காலம் கேரள ஸங்கீதம் இருந்து வந்தது. இந்த வடிவில் பல பதங்களும் கீர்த்தனங்களும் நடைமுறையில் இருந்திருக்கின்றன என்று ஊகம் செய்யவும் இடம் உண்டு. ஏனென்ருல், இவற்றின் சில பகுதிகள் சமீப காலம் வரையில் இருந்துவந்தன.

அஷ்டபதியைப் பாடுவதிலும் கேரளத்தில் தனிப்பட்ட முறை இருந்தது. இதைப் பழைய பாடகர்களே நேரில் பாடக் கேட்டவர் இன்றும் இருக்கிருர்கள். கோட்டயம் தம்புரான் எழுதிய சில பதங்களும் கதகளியைச் சார்ந்த பிற பதங்களும் கொஞ்ச காலத்துக்குமுன்

பிரசுரமாயின. அவற்றிலிருந்து பெண்களுடைய கைகொட்டிக் களி முதலியவற்றில் நவீன பதங்கள் இடம் பிடித்துக் கொண்டன. பழமையான பதங்கள் தொண்ணூறு அல்லது தொண்ணூற்று ஐந்து சதவிகிதம் மறைந்து விட்டன. அவை திரும்பவும் வரும் என்று தோன்றவேயில்லை. டெக்கை வாத்தியத்துடன் பாடும் 'கொட்டிப்பாடி சேவை' என்ற ஸங்கீத வகை கேரளத்தில் உண்டு. இந்த முறையில் ஸ்வாதித் திருநாள் சில கீர்த்தனங்களை இயற்றினார். இவை பிரசாரத்தில் வந்ததும், அஷ்டபதியைத் தவிர்த்த பிற பழைய ஸ்தோத்திர ஸங்கீதங்கள் மறைந்துவிட்டன.

இப்படியெல்லாம் கேரள ஸங்கீதத்தின் தனிப்பட்ட விசேஷங்கள் மறைந்து வந்தாலும், கதகளிப் பதங்களில் அவை இன்றும் நிலை நின்று வருகின்றன. முக்கியமாக, கோட்டயம் தம்புரான் முதலியோருடைய கதகளிப்பதங்களில் கேரள ஸங்கீதத்தின் தனிப்பட்ட விசேஷங்கள் குலையாமல் இருந்து வருகின்றன. சுடுவாலத்தூர் மூத்தேடத்து அப்பன் நம்பூதிரி, திருவில்வாமலை அப்புக்குட்டன் பாகவதர், கிட்டன் பாகவதர், சாலச்சேரி கிருஷ்ணன் குட்டி பாகவதர் முதலியவர்கள், பரிசுத்த கேரள முறையில் கதகளிப் பதங்கள் பாடுவதை நேரில் கேட்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. ஆனால், சமீப காலத்தில் கேரளப் பாடகர்கள் பிற தேசியங்களைப் பொருத்தம் இல்லாமல், 'நெல்லையும் மோரையும்' கலப்பது போல் கேரள பாணியில் கலந்து பாடி வருகிறார்கள். கலாபிமானிகள் கேரளத்தின் தனி விசேஷங்கள் அடங்கிய இசைக் கலையை மீண்டும் சுயநிலைக்குக் கொண்டுவர முயல்வது நலம்.

'க்மேர்' என்றால் என்ன?

கம்போடியோ என்று இப்போது வழங்கும் காம்போஜ நாட்டில் 'க்மேர்' என்ற பெயரால் ஒரு பண்பாடு இருக்கிறது. அந்த நாட்டில் இந்தியாவிலுள்ளவை போன்ற கோயில்கள் பல இருக்கின்றன. 'அங்கோர்' என்ற இடத்திலுள்ள விசாலமான கோயில் உலகப்புகழ் பெற்றது; அந்தக் கோயிலில் பாரதநாட்டின் கலை பிரதிபலிக்கிறது.

இந்த 'க்மேர்' என்ற சொல் எதிலிருந்து, எப்படி வந்தது? எனக்கு இது தெரியாமல் இருந்தது; இப்பொழுதுதான் தெரிந்தது. நான் அங்கே போயிருந்தபோது காம்போஜத்து மக்கள் இதைத் தெரிவித்தார்கள். வெகு நாட்களுக்கு முன்னால், இந்தியாவிலிருந்து ஒரு பெரும்புலவர் அந்த நாட்டுக்குச் சென்று, அங்கேயே மணம் செய்துகொண்டு தங்கினார். அந்தக் காலத்தில் நம் நாட்டவர் பலவேறு நாடுகளுக்குப் போய், மணம் செய்துகொள்வது வழக்கம். பிற்காலத்தில் இந்த வழக்கத்தைத் தடுத்துவிட்டார்கள்.

இந்தியாவிலிருந்து காம்போஜத்துக்குப் போனரே பெரும்புலவர்; அவருடைய ஊருக்குக் 'குமேரு' என்று பெயர். அதுவே நாளடைவில் 'க்மேர்' என்று மருவியது. அந்த நாட்டில் அவருடைய சாதிக்கு 'ஆரி' என்று பெயர்; அவருடைய பண்பாட்டுக்கும் அதே பெயர் ஏற்பட்டது.

—ஜவாஹர்லால் நேரு (யோஜனா)



தீபாவளி

என். ராமகிருஷ்ணா

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தேசியப் பண்டிகை உண்டு. இந்தியா எங்கும் கொண்டாடும் அத்தகைய தேசீயப் பண்டிகை இதுவே.



நம் நாட்டில் பல இனத்தார் வாழ்கிறார்கள். அவர்களில் ஒவ்வொரு சாராரும் ஒவ்வொரு விதமான பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். சிலர் கொண்டாடும் பண்டிகைகளை மற்றவர் கொண்டாடுவதில்லை. ஆனால் எல்லாரும் - முக்கியமாக ஹிந்துக்கள் எல்லாரும் - தீபாவளிப் பண்டிகையை ஏகமனசாகக் கொண்டாடுகிறார்கள்.

தீபாவளிக்கு இப்போது வாழ்த்துக்களும் அனுப்புகிறார்கள். புதிய ஆடைகள் வாங்குவதற்கும் பிற பொருள்களைத் தயாரிப்பதற்கும் வீட்டின் தலைவனும் தலைவியும் எடுத்துக்கொண்ட சிரமம் எல்லாம் இந்த ஒரே நாள் பண்டிகையில் மறந்துபோகும். பணம் இருந்தாலும், இல்லாது போனாலும் முயற்சி செய்து பொருள்களைச் சேகரித்து வீட்டில் குழந்தைகளை



காப்பிரைட்: சுதேசமித்திரன்

மகிழ்விப்பதில் தந்தை ஓர் இன்பம் காண்கிருர்.

தீபாவளியை நம் நாட்டில் பல விதமாகக் கொண்டாடுகிருர்கள். தென்னுட்டில் இரண்டு நாட்கள் கொண்டாடுகிருர்கள். முதல் இரவு ஆரம்பமாகிறது; மறு நாள் முழுவதும் கொண்டாட்டம் நடக்கிறது. வட நாட்டில் ஐந்து நாட்கள்கூடக் கொண்டாடுகிருர்கள். எங்கே எங்கே எப்படி எப்படிக் கொண்டாடுகிருர்கள் என்று பார்ப்போம்.

நம் தமிழ் நாட்டில் தீபாவளியை எப்படிக் கொண்டாடுகிருர்கள் என்பதுபற்றி எழுதித் தெரிய வேண்டாம். ஆனுலும் திருப்பித் திருப்பி அதைப்பற்றிப் படிப்பதில் தீபாவளி அன்று எல்லாரும் ஆனந்தம் கொள்கிருர்கள்.

முதல் நாள் முதற்கொண்டே வீட்டில் தாய்க்கு வேலை கடுமையாக ஏற்பட்டுவிடுகிறது. பலவிதமான இனிப்புப் பட்சணங்களையும் காரத் தின்பண்டங்களையும் குழந்தைகளுக்குத் தக்கபடி தாய் செய்கிருள். மேலும், தலைத் தீபாவளியாக இருந்தால் மாப்பிள்ளை வரும் கெடுபிடி அதிகமாகிறது. அவருக்கென்று பிரத்தியேகமான தின்பண்டங்களைச் சுவையுடன் தயாரிக்க முற்படுகிருள். கடைக்குச் சென்று விதம் விதமான ஆடைகளை வாங்குவதும், குழந்தைகளுக்குச் சட்டை பாவாடை தைத்து எடுத்து வருவதும் தந்தையின் முக்கியமான வேலை ஆகிறது. பலவிதமான வெடிகளும் வாணங்களும் அவருடைய பையில் இடம் பெறுகின்றன. மாப்பிள்ளை வருவ



(தமிழ்), சென்னை-2.

தால், வீட்டில் குதூகலம் தாண்டவம் ஆடுகிறது. சில மாப்பிள்ளைகள் சகஜமாகக் கலந்து குடும்பத்தோடு தீபாவளி அன்றே ஒன்றிவிடுகிறார்கள். சிலர் 'தீபாவளிப் பிகு' செய்கிறார்கள். மிகவும் அதிகமாக வருவாயை எதிர்பார்ப்பவர்களும் உண்டு! இந்தக் காலத்தில் பழைய பழக்க வழக்கங்கள் வெகுவாக மறைந்து வருகின்றன. இருந்தாலும், சில குடும்பங்களில் தாய் தந்தையருக்குக் கீழ்ப்படிந்து, இந்த விஷயத்தில் மட்டும் கோரிக்கைகளை வெளிப்படுத்துகிற மாப்பிள்ளைகளும் உண்டு! என்ன இருந்தாலும் மாப்பிள்ளையை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கும் பெண்ணுக்குத் தீபாவளி ஒரு பெரிய பண்டிகை. மாப்பிள்ளையை எவ்வளவு தூரம் திருப்தி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்ய முயலுவார்கள், பெண்ணின் தாய் தந்தையர். குழந்தைகளுக்குப் புது மாப்பிள்ளையைத் தமாஷ் செய்வதில் அலாதியான ஒரு பிரியம். அதைத் தமாஷாக எடுத்துக்கொள்பவர்களும் உண்டு; குழந்தைகளை நெருங்க விடாமல் சிடுசிடுப்பவர்களும் உண்டு. வீட்டில் உள்ள குழந்தைகளுக்குத் துணி, சட்டை, பட்டாசு, தின்பண்டம் இவையெல்லாம் வாங்கி வரும் மாப்பிள்ளைகளும் உண்டு அதனால் தம் மனைவியிடத்துத் தம் தரம் உயரும் என்ற எண்ணந்தான் காரணமோ!

தீபாவளி அன்று விடியற்காலை நான்கு மணிக்கே தாய் குழந்தைகளை எழுப்பி ஒவ்வொருவராக எண்ணெய் தேய்த்துக்கொள்ளச் செய்து அவர்களுக்குப் புத்தாடை அணிவித்துத் தின்பண்டங்கள் வழங்கி, பட்டாசும் மத்தாப்பும் அவர்கள் சுடுவதைக் கண்டு மகிழ்கிறாள். பின்பு பெரியவர்கள் ஒவ்வொருவராக எழுந்து 'கங்காஸ்நானம்' செய்கிறார்கள் - தினம் எட்டு மணி வரையில் தூங்கும் அவர்கள்கூடத் தீபாவளி அன்று காலையில் சீக்கிரமாக எழுந்து தங்கள் கடமையைச் செய்கிறார்கள். வெடிச் சப்தம் அவர்களை எழுப்பிவிடுகிறது!

குடும்பத்தில் அனைவரும் நீராடிப் புத்தாடை அணிந்து பக்கத்தில் உள்ளவர்களுக்கும் வழங்குவார்கள். செல்வம் படைத்தவர் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு எல்லாம் புத்தாடை வழங்குவார்கள். கோவிலுக்குச் சென்று கடவுளை வழிபட்டு பாபச் செயல்கள் எல்லாம் தொலைய வேண்டுமென்று வேண்டுவார்கள். பெண்கள் மங்கள நீராடிப் பலகார பட்சணங்களைக் கைவளையல்கள் ஒலிக்கக் கொண்டுவந்து கொடுப்பார்கள். விளக்குகள் ஏற்றி வைத்து வீடுகளை அலங்கரிப்பவர்களும் உண்டு. பள்ளி மாணவர்களுக்கு விடுமுறை உண்டாதலால், அவர்கள் இஷ்டம்போல் ஊர் சுற்றி வருவார்கள். இந்தக் காலத்தில் ஏழைகளுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றித் துணியும் கொடுக்கிறார்கள். ஆண்டுக்கு ஒரு முறை வரும் பண்டிகையாதலால், லாபமோ, நஷ்டமோ, கஷ்டமோ எல்லாரும் ஏகமனசாகத் தீபாவளியை இன்பம் பிரதிபலிக்கக் குதூகலத்துடன் கொண்டாடுகிறார்கள்.

தீபாவளி எதற்காகக் கொண்டாடுகிறோம்? தீபாவளி சம்பந்தப்பட்ட புராண வரலாறுகள் என்ன? இவை எல்லாருக்கும் தெரியும். நரகாசுரன் கதையும் பலிச் சக்கரவர்த்தி புராண வரலாறும், நாம் வருஷந்தோறும் படிப்பவையே. ஆனால் பல பாகங்களில் நாட்டில் எப்படி எப்படித் தீபாவளி கொண்டாடுகிறார்கள் என்பதை நாம் அறிவது நல்லது. தென்னாட்டைவிட வடநாட்டில் தீபாவளியைச் சிறப்பாகவும் விசேஷமாகவும் கொண்டாடுகிறார்கள். 'தீபாவலி' என்று இதை அவர்கள் கொண்டாடுகிறார்கள். முதல் நாள் லட்சுமி பூஜை நடைபெறும். இரண்டாவது நாள் நரகாசுர வதத்தைக் கொண்டாடுவார்கள். மூன்றாவது நாள் வீடுகளில் (நாம் கார்த்திகை விளக்குகள் ஏற்றுவதுபோல்) தீபங்கள் ஏற்றி அழகாக அலங்காரம் செய்வார்கள். நான்காம் நாள் ஸ்நான பண்டிகை கொண்டாடுகிறார்கள். கடைசித் தினத்தன்று விசேஷமாக யமனுக்குப் பூஜை

செய்கிறார்கள். இது நமக்குப் புதுமையாகப் படுகிறது. அன்று அண்ணன் தங்கைமார் விசேஷ குதூகலத்துடன் இருப்பார்கள். தங்கைக்கு அண்ணன் வெகுமதிகளும் பொன்னுடைகளும் நகைகளும் பரிசாகக் கொடுத்து அவளுடன் உட்கார்ந்து சாப்பிட வேண்டும். யமன் தன் தங்கை யமுனையை இப்படித்தான் உபசரித்தானும். முடிந்தால் அன்று பெரியவர்கள் யமுனை ஆற்றில் ஸ்நானம் செய்வார்கள். தீபாவளியை வைசியர்கள் வெகுவாகக் கொண்டாடுவார்கள். தீபாவளியை வருஷப் பிறப்புத் தினமாக விக்கிரமாதித்தன் கொண்டாடியதாக ஒரு சாரார் கூறுகிறார்கள். ஸ்ரீராமர் இலங்கையிலிருந்து திரும்பி வந்து அயோத்தியில் தீபாவளி அன்றுதான் பட்டாபிஷேகம் செய்து கொண்டதாகவும் கூறுகிறார்கள். எது எப்படி இருந்தாலும் தீபாவளி ஒரு சுபதினம்.

வங்காளத்தில் லட்சுமிக்குப் பதிலாகக் காளியைப் பூஜிக்கிறார்கள். இளம் பெண்கள் அகல் விளக்குகளை ஏற்றி ஆற்றில் மிதக்க விடுவார்கள். விளக்குகள் திரும்பிக் கரைக்கு வராமலும் மூழ்கிவிடாமலும் சென்றால், அந்த வருஷம் சுபிட்சமாக இருக்கும் என்று கருதுகிறார்கள். தீபாவளியின்போது, மாடுகளையும் கன்றுகளையும் குளிப்பாட்டி அவைகளுக்கு அலங்காரம் செய்து கழுத்தில் மாலை அணிவித்துப் பூஜை செய்வார்கள், நாம் மாட்டுப்பொங்கலில் செய்வது போல். பிறகு அவை வீடு திரும்பியவுடன் திருஷ்டி கழிப்பதற்காக, விளக்குகள் ஏற்றி ஆரத்தி சுற்றுவார்கள். பணத்தைக் குவித்து ரூபாய் நாணயங்களுக்குச் சந்தனம் அப்பிக் குங்குமம் இட்டுப் பூஜிப்பார்கள். லட்சுமிக்குப் பூஜை செய்வார்கள். பம்பாயில் வட இந்தியாவில் உள்ள வாணிக வகுப்பினர்களான குஜராத்திகளும் மார்வாரிகளும் போன்றவர்களுக்குத் தீபாவளி அன்றுதான் நிதி யாண்டும் வாணிப ஆண்டும் சேர்ந்து தொடங்குகின்றன. குஜராத்திகளுக்கு அன்று புத்தாண்டு. வட இந்திய நகரங்களில் வசிப்பவர்கள் தீபாவளி அன்று தங்கள் நாட்டுப்புற இல்லங்களுக்குச் சென்று தம் குடும்பத்தாருடனும் சுற்றத்தாருடனும் இந்தப் பண்டிகையைக் கொண்டாடுவார்கள். கிராமங்களில் வீடுகளை எல்லாம் வெள்ளை அடித்துத் தீபாலங்காரம் செய்திருக்கும். பெரிய பட்டணங்களில் தொழிற்சாலைத் தொழிலாளிகளுக்குப் புத்தாடைகளும் போனஸும் வழங்குவார்கள். பம்பாய், அகமதாபாது போன்ற பஞ்சாலைகள் நிறைந்த பட்டணங்களில் துணிகளை வெகுவாகப் பரிசளிப்பார்கள். விருந்துண்டு மகிழ்வார்கள் மக்கள். கோவில்களில் விசேஷ பூஜைகளும் நடைபெறும்.

எப்படி இருந்தாலும் தீபாவளிக் கொண்டாட்டத்தைப் புராணங்களும் இதிகாசங்களும் சொல்லியுள்ள முறைகளில் கொண்டாடுவது மட்டுமல்லாமல், இன்னும் சிறந்த மனப்பான்மையுடனும் பரந்த நோக்கத்துடனும் கொண்டாட வேண்டும். தீப ஒளி இருட்டை ஆட்கொள்ளுவது போல் மக்கள் தங்கள் குற்றங் குறைகளை ஆட்கொண்டு, எதையும் பரந்த நோக்கத்துடன் சீர்தூக்கிப் பார்த்து, மற்றவர்களுக்கும் தங்களுக்கும் துன்பம் பயக்காமல் எப்போதும் நல்ல முறையிலேயே நடக்க முயலவேண்டும். அதை ஆரம்பிப்பதற்குரிய நாள் தீபாவளி நன்னாளே. சுதந்தர இந்தியாவின் தேசீயப் பண்டிகையாக நாம் தீபாவளியை எப்போதும் கொண்டாடுவோமாக!

பேசாமல் இருப்பது

பேசாமல் இருப்பதே, நல்ல காரியம் செய்ததற்குச் சமானமான சந்தர்ப்பங்களை உண்டு பண்ணக் கூடியது.

—பகவத் கீதை

சித்திரசேனனும் கௌரவர்களும்

★

பாண்டவர் துவைத வனத்தில் வசித்து வந்தார்கள். பாண்டவர் அங்கே துன்புறுவதையும், காடு செல்லும்பொழுது அவர்கள் தன் மக்களை அழிப்பதாகச் செய்த பிரதிக்ஞையையும் நினைத்துப் பார்த்தான் திருதராஷ்டிரன். பாண்டவரின் பலத்தை எண்ணினான். தன் மக்கள் அனைவரும் பாண்டவரால் மடிந்துவிடுவார்கள் என்று கருதி வருந்தினான்.

கர்ணனும் சகுனியும் பாண்டவரின் வரலாற்றைத் திருதராஷ்டிரன்மூலம் அறிந்து, துரியோதனனிடம், ''அரசே, தாங்கள் இந்திரனைப்போல் விளங்குகிறீர்கள். தங்களுடைய பகைவரோ துவைதவனத்தில் துன்ப வாழ்க்கை நடத்துகிறார்கள். இந்தச் சமயத்தில் அவர்களைப் போய்ப் பார்ப்பது தங்களுக்கு உற்சாக மூட்டுவதாகும். வண்டியில் போகிறவர்கள் நடந்து செல்பவரைப் பார்த்துக் களிப்பது சகஜம். அதுபோல் செல்வம் செழித்தவருக்குத் துன்புறும் பகைவரைப் பார்ப்பதைவிட இன்பமும் உண்டோ? தங்கள் மனைவியைப் பார்த்தால் பாஞ்சாலியின் உள்ளம் வெதும்பும். அதனால் துவைத வனம் போய் வருவோம்'' என்றார்கள்.

இதைக் கேட்டுத் துரியோதனன், ''எனக்கும் அதே எண்ணந்தான். ஆனால் அரசர் அனுமதிக்க மாட்டார். நீங்கள் அதற்கு ஓர் உபாயம் யோசித்து நாளைக் காலையில் சபையில் நான் அரசரோடு இருக்கும்பொழுது வந்து சொன்னீர்களானால் காரியம் நடக்கும்'' என்றான்.

அதற்கு இருவரும், ''உபாயம் புதிதாக யோசிக்க வேண்டாம். இடையர்கள் அனைவரும் துவைத வனத்தில் தங்களை எதிர்பார்த்திருக்கிறார்கள். அதனால் அங்கே செல்வது உசிதம் என்று அரசர் தங்களை அனுமதிப்பார்'' என்று கூறி, மறு நாள் காலையில் சபையில்

மகாபாரதத்தில் வரும் உபாக்கியானங்களும் சரி, பாத்திரங்களும் சரி, பல வகை. ஒவ்வொரு கதையிலும் ஒரு பேருண்மையைக் கண்டறியலாம்; ஒவ்வொரு பாத்திர வர்ணனையும் தனித் தனிக் குணசித்திரம் ஆகும்.

சந்திப்பதாகவும் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

மறுநாள் காலையில் அனைவரும் சபையில் அமர்ந்திருந்தனர். கர்ணன் முதலியவர்களுடைய முன்னேற்பாட்டின்படி சங்கவன் என்ற ஆயன் அங்கு வந்தான். "பசுக்கள் எல்லாம் ஓர் இடத்தில் சேர்ந்து சௌக்கியமாக இருக்கின்றன" என்று அரசனிடம் சந்தோஷச் செய்தி தெரிவித்தான். உடனே கர்ணனும் சகுனியும் அரசனிடம் அப்பொழுதுதான் நினைத்துக்கொண்டவர்கள் போல், "அரசே, ஆயர்பாடியும் மாடுகளும் கன்றுகளும் அழகான இடத்தில் இருக்கின்றன. அவற்றைப் பார்த்துவர இது நல்ல சமயம். மேலும், வேட்டையாட இது தகுந்த காலம். ஆகவே, தாங்கள் தங்கள் மகனுக்கு அங்கே போய் வர விடை கொடுங்கள்" என்றார்கள்.

இதைக் கேட்டுத் திருதராஷ்டிரன், "பாண்டவர் துவைத வனத்தில் இருப்பதால் அங்கே போவது சரியல்ல" என்று முதலில் தடுத்தான். பிறகு சகுனி, "பாண்டவரைப் பார்க்க நாங்கள் விரும்பவில்லை" என்று கூறவே, ஒருவாறு அநுமதித்தான் திருதராஷ்டிரன். துரியோதனனும் அவனுடைய சகோதரர்களும் கர்ணன் முதலியவரோடும் ஆயிரக்கணக்கான பெண்களுடனும் தேர்களிலும் யானைகளிலும் ஏறிக்கொண்டு துவைத வனத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். பட்டணத்து ஜனங்களும் மனைவி மக்களுடன் அவர்களைத் தொடர்ந்தார்கள். பெரியதொரு சேனையும் அவர்களோடு சென்றது. கடைகளுடன் கடைக்காரர்கள், ஸ்துதி பாடகர்கள் வேட்டை ஆடுகிறவர்கள் எல்லாரும் துரியோதனனுடன் சென்றார்கள். துவைத வனத்தில் பாண்டவர் வாழும் குளக்கரைக்



குச் சற்றுத் தூரத்தில் துரியோதனன் அனைவருடனும் தங்கினான்.

ஆயர்பாடியையும் கோடிக் கணக்கில் மாடுகளையும் துரியோதனன் பார்த்தான். ஏராளமான பொருளை அவர்களுக்குச் சம்மானமாக வழங்கினான். பால், தயிர், வெண்ணெய் இவற்றை உபயோகித்துக்கொண்டும் அழகான இடங்களைப் பார்த்துக்கொண்டும் வேட்டையாடிக்கொண்டும் இன்பமாகக் காலங் கழித்தான். அவனுடன் சென்ற மற்ற நகர மக்களும் தேவலோகத்தில் தேவர்களைப்போல் களிப்புற்று வாழ்ந்தார்கள்.

இதற்கிடையில் தர்மபுத்திரர் துவைத வனத்தில் இருக்கும் குளக்கரையில் யாகசாலையை அமைத்துத் திரௌபதியுடன் யாகம் செய்யத் தொடங்கியிருந்தார்.

அதே சமயத்தில் துரியோதனன் தன் வேலைக்காரர்களை அனுப்பி அதே குளக்கரையில் விளையாட்டுக்காக உள்ள கூடாரங்களை அமைக்க உத்தரவிட்டான். அப்பொழுது சித்திரசேனன் என்ற கந்தர்வ ராஜன் அப்சர மாதர்களுடன் அந்தக் குளத்தில் விளையாட வந்திருந்தான். அவனுடன் பல கந்தர்வர்களும் வந்திருந்தார்கள். துரியோதனனின் வேலையாட்கள் குளக்கரையில் கந்தர்வர்கள் சூழ்ந்திருப்பதை அவனிடம் தெரிவித்தார்கள். உடனே அவன் தன் சேனையை அனுப்பிக் கந்தர்வர்களை விரட்டும்படி உத்தரவிட்டான்.

முதலில் அவர்கள் கந்தர்வர்களிடம் சென்று, ''துரியோதன மகாராஜா உங்களை இந்த இடத்தைவிட்டுப் போக உத்தரவிடுகிறார்'' என்றார்கள். கந்தர்வர்கள் அதற்குப் பரிகாசமாகப் பதில் அளித்துப் போக மறுத்தார்கள். விஷயம் அறிந்த துரியோதனன் கோபமுற்றுச் சேனையைப் போரிட அனுப்பினான். முதலில் கந்தர்வர்கள் நல்ல வார்த்தைகளைக் கூறித் துரியோதனனுடைய படைவீரரைத் திரும்பிப் போகச் சொன்னார்கள். அதற்கு அவர்கள் கட்டுப்படாததால் கந்தர்வர்கள் தங்கள் அரசனாகிய சித்திரசேனனிடம் தெரிவித்தார்கள். உடனே கந்தர்வ ராஜன் பகைவரை எதிர்க்கும்படி தன் சேனைக்குக் கட்டளையிட்டான்.

உடனே கந்தர்வர்களின் சேனை கௌரவ சேனையுடன் கடும்போர் செய்தது. துரியோதனன், சகுனி முதலியோருடன் சேர்ந்து கர்ணன், கந்தர்வர்களை முறியடித்தான். இந்தச் செய்தி அறிந்து சித்திரசேனன் போர்க்களத்துக்கு வந்தான். பலவிதமான மாயாஸ்திரங்களைப் பிரயோகம் செய்து கௌரவ சேனையை மடியச் செய்தான். மீதி இருக்கும் ஒவ்வொரு வீரனையும் பத்துப் பத்துக் கந்தர்வ வீரர்கள் சூழ்ந்திருந்தார்கள். துச்சாசனன் முதலியோர் முறியடிக்கப் பெற்றபோதுகூடக் கர்ணன் மலைபோல் அசைவற்று நின்றான். துரியோதனன், சகுனி, சௌபலன் மூவரும் கந்தர்வர்களை எதிர்த்தார்கள். ஆனால் கந்தர்வர்கள் நூற்றுக்கணக்கில் கர்ணனைச் சூழ்ந்துகொண்டு போரிட்டார்கள். அவனுடைய தேரையும் குதிரைகளையும் அழித்தார்கள். கர்ணன் வகை தெரியாமல் கையில் வில்லுடன் போர்க்களத்திலிருந்து ஓடிவிட்டான். கர்ணன் ஓடவே மீதிச் சேனைகளும் ஓடிவிட்டன.

துரியோதனன் மட்டும் தனித்து நின்றுகொண்டு கலக்கமின்றிக் கந்தர்வர்களுடன் போர் செய்தான். ஆனால் எல்லாக் கந்தர்வர்களும் ஒன்று சேர்ந்து அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். அவனுடைய தேரை உடைத்துக் குதிரைகளைக் கொன்றார்கள். தேர் இல்லாமல் துரியோதனன் தரையில் நின்றான். இதைக் கண்டு சித்திரசேனன் அவன் தலைமயிரைப் பிடித்துக்கொண்டு அவன் கைகளைக் கட்டித் தன் தேரில் ஏற்றிக்கொண்டு சிங்கநாதம் செய்தான். உடனே மற்றக் கந்தர்வர்கள் துச்சாசனன் முதலியவர்களையும் கௌரவர்களின் மனைவிமார்களையும் கட்டித் தேரில் ஏற்றிக்கொண்டு ஓடினார்கள்.

போரிலிருந்து முன்னே ஓடின கௌரவப் படை வீரர்களும் மந்திரிகளும் தர்மபுத்திரரிடம் சரணடைந்து நடந்ததைக் கூறினர்

கள். துரியோதனனை விடுவிக்க வேண்டினார்கள்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த பீமன், ''நாம் செய்ய வேண்டியதைக் கந்தர்வர்கள் செய்துவிட்டார்கள். அதிர்ஷ்ட வசத்தால் நமக்கு உதவுகிற ஒருவன் உலகத்தில் இருக்கிறான்போலும்! வெயில், குளிர், காற்று இவற்றில் துன்புறும் நம்மை இந்தப் புத்தியற்ற துரியோதனன் கர்வத்தால் பார்க்க வந்திருக்கிறான்'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது அவனைத் தடுத்துத் தர்மபுத்திரர் சொன்னார்:

''இது கொடுமையைக் காட்டும் சமயம் அல்ல. நம்மிடம் சரண் அடைந்தவரும் பகைவரிடம் பயந்தவருமான கௌரவரை நீ எப்படி இந்த மாதிரியெல்லாம் சொல்லலாம்? தாயாதிகளுக்குள் பிளவும் சண்டையும் வந்தாலும் உறவும் கடமையும் போய்விடுமா? பிறர் நம்மைச் சார்ந்தவர்களை எதிர்ப்பதைப் பார்த்திருப்பது சரியல்ல. அர்ஜுனா, நகுலா, சகதேவா! எல்லாரும் சேர்ந்து துரியோதனனை விடுவியுங்கள். எவனுவது ஒருவன் சரணடைந்தால் கூட அவனைக் காக்க க்ஷத்திரியன் முற்படுவான். பீமா! நீ ஏன் துரியோதனனைக் காக்க முன் வர மாட்டேன் என்கிறாய்?''

பீமன், மேலும் தொடர்ந்து துரியோதனன் தனக்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் இழைத்த தீங்கைக் கூறி, ''அவன் முன் செய்த தீய செயலின் பயனையே அநுபவிக்கிறான். இதற்காக நமக்கு உதவி செய்த கந்தர்வ அரசனை விரோதித்துக் கொள்வதா? தாங்கள் தயை செய்து என்னைத் தவருக எண்ண வேண்டாம்'' என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

அப்போது சித்திரசேனன் கையில் சிக்கி விழித்த துரியோதனன் தர்மரைப் பார்த்து வருத்தம் தாங்காமல் புலம்பினான். ''யுதிஷ்டிரா, பீமா, அர்ஜுனா, நகுலா, சகதேவா! என்னைக் காப்பாற்றுங்கள். உங்கள் சகோதரனாகிய என்னைக் கந்தர்வன் கட்டிப் பிடித்துச் செல்கிறான். என்னை மீட்டு நம் குலத்துக்கு நேர்ந்த அபகீர்த்தியைப் போக்குங்கள்'' என்று வேண்டிக் கதறினான்.

யுதிஷ்டிரர் இதைக் கேட்டுப் பீமனிடம், ''பகவானிடம் சரண் அடைந்தவனைக் காப்பது தர்மம்'' என்று பலவாறு எடுத்துச் சொன்னார்; ''துரியோதனன் நம் கையின் திறமையைக் கொண்டு உயிர் வாழ விரும்புகிறான். அவனைக் காப்பதைவிட நமக்குத் தர்மம் வேறில்லை. யாகத்தில் ஈடுபட்டிராவிட்டால் நானே போய் அவனை விடுவித்திருப்பேன்'' என்றார். பிறகு, ''நல்ல வார்த்தை கூறிக் கந்தர்வர்களிடமிருந்து அவனை விடுவிக்கப் பார். முடியாவிட்டால், வீரத்தைச் சிறிதளவு உபயோகித்துப் பார். அதுவும் பயன்படாவிட்டால் எப்படியாவது விடுவிக்க முயல வேண்டும்'' என்று கூறி அர்ஜுனனைப் போகச் சொன்னார். அவனும் தமையனுருடைய எண்ணத்தை உணர்ந்து துரியோதனனை விடுவிப்பதாகப் பிரதிக்ஞை செய்தான். இதைக் கேட்டதும் கௌரவரின் மனம் சற்றுச் சமாதானம் அடைந்தது.

தர்மபுத்திரரின் உத்தரவுக்குப் பணிந்து பீமன், அர்ஜுனன் முதலியவர்கள் போருக்கு ஆயத்தமாக வந்தார்கள். அர்ஜுனன் கந்தர்வர்களிடம், ''கந்தர்வ அரசன் இந்த மாதிரி காரியம் செய்வது சரியல்ல. பிறர் மனைவிகளை எடுத்துச் செல்வதும், மனிதருடன் சண்டையிடுவதும் சித்திரசேனனுக்கு ஏற்ற செயல் அல்ல. ஆகவே, துரியோதனுதியரை விட்டுவிடுங்கள்'' என நல்ல வார்த்தையாகச் சொன்னான். இதைக் கேட்டுக் கந்தர்வர்கள் சிரித்துக்கொண்டு, ''நாங்கள் தேவராஜனின் உத்தரவுக்கு மட்டுந்தான் கீழ்ப்படிவோம். மற்றவர் கூறுவதைக் கேட்கவே மாட்டோம்'' என்றார்கள்.

உடனே அர்ஜுனன் அவர்களோடு போர் தொடுக்கலானான். பல பாணங்களையும் அஸ்திரங்களையும் கந்தர்வர்களின்மேல் பொழிந்தான். கந்தர்வ மன்னனும் எதிர்த்துப் போர் புரிந்தான். அர்ஜுனனைத் தடுக்க முடியாததால் மறைந்

திருந்து போரிட்டான். மறைந்திருக்கும் சித்திரசேனனைச் சப்தவேதி என்ற பாணத்தால் அர்ஜுனன் அடித்தான். பிறகு சித்திரசேனன் அர்ஜுனன் எதிரில் வந்தான். இருவரும் பழைய நண்பர்கள் என்பதை அப்பொழுது அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். தேரில் உட்கார்ந்துகொண்டு ஒருவருக்கொருவர் க்ஷேம சமாசாரத்தைக் கேட்டுக்கொண்டார்கள்.

துரியோதனனைப் பிடித்த காரணத்தைக் கந்தர்வராஜனிடம் அர்ஜுனன் கேட்டான். அதற்குச் சித்திரசேனன், ''தேவராஜர், துரியோதனனின் கெட்ட எண்ணத்தை உணர்ந்து என்னிடம் அவனைப் பிடித்து வரும்படி உத்தரவிட்டார். அதனால் உங்களை எப்போதும் துன்பத்திற்கு ஆளாக்கும் இவனை நான் விடப்போவதில்லை'' என்றான்.

அப்பொழுது அர்ஜுனன் தர்மபுத்திரரின் கருத்தை விளக்கி, ''இருவரும் அவரிடம் சென்று அவர் கூறுவதுபோல் செய்வோம்'' என்றான்.

இருவரும் துரியோதனனுடன் தர்மபுத்திரரிடம் வந்தார்கள். தர்மபுத்திரர் தேவராஜனுக்குத் தம்மிடத்தில் இருக்கும் அன்பைக் கொண்டாடினார். கந்தர்வராஜன் செய்த உதவிக்காக அவனைப் புகழ்ந்தார். துரியோதனனை அவனிடமிருந்து விடுவித்தார். ''பலசாலிகளாகிய நீங்கள் நல்லவேளையாகத் துரியோதனனைக் கொல்லவில்லை'' என்று நன்றியுடன் சொன்னார். போய் வரும்படி கந்தர்வர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

பிறகு அவர் துரியோதனனைப் பார்த்து, ''இனிமேல் இது போன்ற யோசனையற்ற காரியம் செய்யாதே! இப்படிச் செய்பவர்கள் சுகமாக வாழ்வதில்லை. இனியாவது தம்பிகளோடும், மனைவி, நண்பர்கள் இவர்களோடும் நாட்டுக்குப் போய் இன்பமாக வாழ்ந்து வா'' என்று கூறி அனுப்பினார்.

ஆறுவது சினம்

கோபத்தால் கலங்கிய முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டால், நம் விகார வடிவம் நமக்கே அருவருப்பாய்த் தோன்றுவதனால், வெட்கமும் வருத்தமும் ஏற்படும்; இதனால் கோபத்தினின்றும் விடுதலை பிறக்கும்.

கோபம் வரும்பொழுது பேசாமல் இருப்பது கோபத்தை அடக்குவதற்கு இன்னும் ஓர் உபாயமாகும்.

பிளேட்டோ என்ற கிரேக்கத் தத்துவஞானி இந்த உபாயத்தைக் கடைப்பிடித்து கோபத்தை வென்றான். அவனுக்குக் கோபாவேசம் உண்டாகும்பொழுது மௌனமாய் உட்கார்ந்திருப்பான். அந்த ஆவேசம் தணிகிற வரையில் குற்றவாளியை ஒருகாலும் தண்டியான். ஒரு நாள் அவன் கோபாவேசத்துக்குள்ளாகி மௌனமாக உட்கார்ந்துகொண்டிருக்கும்போது ஒரு சிநேகிதன் வந்து, ''என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டான்.

அதற்குப் பிளேட்டோ, ''நான் ஒரு கோபக்காரனைத் தண்டித்துக்கொண்டிருக்கிறேன்'' என்றான்.

கோபம் வரும்பொழுது நூறு வரையில் எண்ணின பிறகே கோபத்தை வெளிப்படுத்தவேண்டும் என்னும் ஒரு புத்திமதி நம் நாட்டில் வழங்கி வருகிறது. ஒன்று முதல் நூறு வரையில் எண்ணுவதற்குள் கோபத்தின் வேகம் குறைந்து போகும். உரத்த குரலில் ஆண்டவன் நாமத்தை உச்சரிப்பதாலும் இதே பலன் உண்டாகும். எவ்விதத்தாலாவது மனத்தைக் கோபத்துக்குக் காரணமாயுள்ள பொருளினின்று திருப்பினால், நற்பயன் விளைவது திண்ணம்.

—அசுவினி குமார தத்தர்

கல்வெட்டும் செப்பேடும் சரித்திரத்தையும் பழங்காலப் பண்பாட்டையும் ஆராயப் பெருஞ் சாதனமாய் விளங்குகின்றன;

சாஸன விசித்திரங்கள்

எம். கே. ரங்கஸ்வாமி ஐயங்கார்

முன் காலத்தில் முக்கியமான விஷயங்களையும் நூல்களையும் ஓலைகளில் எழுதி வந்தார்கள். அரசர்களும் ஓர் உத்தரவைப் பிறப்பிக்கும்போது சில ஓலைகளில் எழுதி அவற்றைக் கோத்துத் தங்கள் முத்திரைகளைப் பொறித்து அனுப்புவார்கள். இதனால் ஓலை என்பதற்கு உத்தரவு என்ற பொருளும் ஏற்பட்டது. ஆனால் ஓலையில் எழுதிய பல அரிய சுவடிகள் காலக்கிரமத்தில் அழிந்து போய்விட்டன. என்றைக்கும் அழியாமல் இருக்கும் பொருட்டுத் தானம் முதலியவற்றைச் செப்புத் தகடுகளிலும் கருங்கல் சுவர்களிலும் பொறித்து வைத்தார்கள்.

செம்பில் பொறித்தவற்றுக்குச் செப்பேடு (செம்பு ஏடு) என்றும், தாமிர சாஸனம் என்றும் பெயர்கள் வழங்கி வந்தன. இந்தச் சாஸனங்களில் அரசர்களின் வம்சாவளி முதலிய விவரங்கள் கொடுபட்டிருந்ததால் இவை கல்வெட்டுக்களைவிடச் சரித்திர ஆராய்ச்சிக்கு மிக உபயோகமானவை. ஆனால் பல செப்பேடுகளை உருக்கி விட்டார்களாதலால், அவை மறைந்து போயின. மற்றும் சில, அயல் நாட்டு மியூசியங்களில் அடைபட்டு இருக்கின்றன.

சோழ வம்சத்துச் சரித்திரத்தையும் ராஜேந்திர சோழன் வடநாட்டில் கங்கா தீரம்வரையில் ஜயித்துக் கடல் கடந்து சுமாத்ரா, ஜாவா தீவுகளையும் வென்று தன் ஆட்சியை ஏற்படுத்தியதையும் விவரிக்கும் ஒரு செப்பேடு திருவாலங்காட்டில் கிடைத்தது. என்றாலும், அதற்கு ராஜேந்திரன் செப்பேடு என்றாவது திருவாலங்காட்டுச் செப்பேடு என்றாவது பெயரில்லை. டச்சுக்காரர்கள் அதைத் தங்கள் ஊரான லெய்டன் மியூஸியத்தில் வைத்திருக்கிறார்கள். அதனால் அதற்கு 'லெய்டன் கிராண்ட்' என்றே பெயர் வழங்கி வருகிறது. மதுரைக்கு அருகில் ஆனைமலையில் கிடைத்த விசேஷமான ஒரு செப்பேடும் அதே மியூசியத்தில் இருக்கிறது. பாண்டிய அரசனான ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் துலாபாரம் ஏறி அந்தப் பொன்னை - அவன் எடைக்குச் சரியான பொன் - சிதம்பரம் நடராஜப் பெருமானுக்கு அளித்த விவரத்தைத் தெரிவிக்கும் ஒரு செப்புச் சாஸனம் இருந்தது. மெக்கன்ஸி செய்த இதன்



டாக்டர் வே. ராகவன் ஒரு சாஸனத்தைப் படிக்கிறார். கூட மற்றும் சில நண்பர்கள் நிற்கிறார்கள்.

காப்பிரைட்: தினமணி சுடர் (தமிழ்: 10-8-'58), சென்னை-2.



ராஜராஜ சோழன் காலத்துக் கல்வெட்டு (புதைபொருள் ஆராய்ச்சி இலாகா தார் உதவிய படம்)

பிரதி ஒன்று பூர்த்தியாகக் கிடைத்திருந்தும், மை மங்கிப் படிக்க முடியாமல் போயிருக்கிறது.

கோயிலில் கற்களில் பொறித்த கல்வெட்டுக்கள் அதிகமாக அழிந்து போக முடியாது. ஆயினும், சில கோயில்களை இடித்துக் கட்டும் போது, கல்வெட்டுக்களின் அருமை தெரியாமல் பல இடங்களில் பிரித்தும் கல்வெட்டுக்களை உள்ளே வைத்தும் கட்டி இருக்கிறார்கள்; மற்றும் சிலவற்றை மறைத்துச் சுவர்களையும் எழுப்பிவிட்டார்கள்!

கல்வெட்டுக்களைச் செதுக்குவதற்கு முன் ஒரு மையால் எழுதிப் பிறகு கல்தச்சர்களைக் கொண்டு அவற்றைச் செதுக்கியிருக்க வேண்டும். தாராசுரம் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் சில பூர்த்தியாகப் பொறிக்கப் பெறாமல் இருக்கின்றன. அவற்றைக் கவனித்துப் பார்த்தால், முடிவு பெறாத பாகத்தில் மங்கிய சிவப்பு எழுத்துக்கள் தெரிகின்றன. இதிலிருந்து முதலில் ஒரு சிவப்பு மையால் எழுதிப் பிறகு எழுத்துக்களைச் செதுக்கி இருக்கிறார்கள் என்று புலப்படுகிறது.

எழுநூறு வருஷங்களுக்கு மேல் வெயிலில் உலர்ந்தும் மழையில் நனைந்தும் இந்த மசி முழுவதும் மறையாமல் இருப்பது ஆச்சரியம் அல்லவா? இதை அரசாங்கத்தார் பரிசோதித்து இது என்ன மசி என்று கண்டுபிடிப்பது அவசியம்.

இந்தக் கல்வெட்டுக்களிலிருந்து பிரதிகளை எடுப்பதில் இரண்டு முறைகள் உண்டு. கண்ணால் பார்த்தபடியே சித்திரம் எழுதுவதுபோல் வரைந்து பிரதி எழுதுவது ஒன்று. மற்றொன்று, பெரிய தாள்களைக் கல்வெட்டுக்கள் உள்ள சுவர்களில் தட்டி அழுத்துவது. எழுத்துக்கள் உள்ள பாகம் சிறிது அழுந்தி விடும். அதன்மேல் ஒரு விதமான மசியைத் தடவி விட்டால் கல்வெட்டு உள்ள பாகம் நன்றாகத் தெரியும். சரித்திர ஆராய்ச்சிக்கு இவை நன்றாக உதவுகின்றன. அந்தக் காலத்தில் ஒரு நாட்டை ஆளும் மன்னனின் பெயரைக் குறித்து, 'மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்ம பராந்தக தேவர்க்கு ஆண்டு 13' என்பது போல் அந்த அரசனின் ஆட்சியில் எந்த வருஷம் என்று எழுதுவது வழக்கம். இதிலிருந்து அவன் பட்டத்துக்கு வந்த வருஷத்தைக் கண்டுபிடிக்கலாம். இன்னும் சில கல்வெட்டுக்களில் அரசர்கள் அடைந்த வெற்றிகளையும் செய்த திருப்பணிகளையும் விவரித்திருக்கிறார்கள்.

சாஸனங்களை நாம் நன்றாகப் படிக்க முடியவில்லை. அப்போது சில எழுத்துக்கள் எழுதப்பெற்ற முறை இப்போது மாறிவிட்டது. ஒரு சாஸன எழுத்தின் அமைப்பிலிருந்தே அந்தக் கல்வெட்டு எந்த நூற்றாண்டில் பொறிக்கப் பெற்றிருக்கலாம் என்று சாஸனப் பயிற்சியுள்ளவர்கள் சொல்லிவிடுகிறார்கள். நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் மெக்கன்ஸி துரை அதிகப் பிரயாசையுடன் தேடித் தொகுத்த ஆயிரத்துக்கு மேற்

பட்ட சாஸனங்களைச் சென்னை அரசாங்கத்தார் அறிஞர் தி. நா. சுப்பிரமணியம் அவர்களைக் கொண்டு பரிசோதித்து, திருத்தி, சுலபமாகப் படிக்கத் தக்க விதம் தமிழிலும், குறிப்புக்களுடன் இங்கிலீஷிலும் மூன்று பெரிய புத்தகங்களாகச் சில வருஷங்களுக்கு முன் அச்சிட்டு வெளியிட் டிருக்கிறார்கள். இது ஓர் அருமையான பணி. ஆகவே, இனிச் சாஸனங்களைச் சுலபமாகப் படித்துப் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியும். இந்தப் புத்தகங்களைப் பெரிய பள்ளிகளிலும் நூல் நிலையங்களிலும் வாங்கி வைப்பது அவசியம்.



மேட்டுப்பாளையம் செப்பேடு
(புதைபொருள் ஆராய்ச்சி இலாகாதார் உதவிய படம்)

ஒரு சாஸனத்தைக் கவனிப்போம்: 'ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போல் பெருநிலச் செல்வியும்..' என்று ஆரம்பமாகிறது. இது தஞ்சாவூரை ஆண்ட பிரசித்தி பெற்ற முதல் ராஜராஜனுடைய கல்வெட்டு. முதல் வரியிலேயே இதைத் தெரிந்துகொள்ளலாம். 'ஸ்வஸ்திஸ்ரீ' என்றால், 'சுபம் உண்டாகட்டும்' என்கிற மங்கள வாசகம். அநேகமாக எல்லாக் கல்வெட்டுக்களிலும் இதைக் காணலாம். திருமகள் போல் பெருநிலச் செல்வியும் என்று ஆரம்பிக்கும் கல்வெட்டு ராஜராஜனுடைய மெய்க்கீர்த்திகளைத் தெரிவிப்பதாகும். இவனுக்குப் பின் ஆண்ட மன்னர்களுக்குத் தனித்தனி மெய்க்கீர்த்திகள் உண்டு.

'திருவாலங்காட்டுச் சாஸனம்' போற்றும் ராஜேந்திர சோழனுக்கு மெய்க்கீர்த்தி இப்படி ஆரம்பிக்கிறது:

திருமன்னி வளர
இருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையும்
சீர்த்தனிச் செல்வியும்
தன்பெருந் தேவிய
ராகி இன்புற

என்று தொடங்கி, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவன் பெற்ற கீர்த்திகளை விளக்கிச் சொல்கிறது. 'லட்சுமி நிலைபெற்று வாழப் பெரிய பூமிதேவியும் வீரலட்சுமியும் கீர்த்திக்கு உரியவளும் தம்முடைய மனைவியராகி விளங்க ஆட்சி செலுத்தும் ராஜேந்திர சோழன்' என்று பொருள். கல்வெட்டுக்களில் அரசர்களும் மற்றவர்களும் கொடுத்த தான தருமங்களையும் அந்தக் காலத்தில் நிகழ்ந்த பல விஷயங்களையும் பற்றித் தெரிந்துகொள்ளலாம்.

தானத்தைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்றைக் கவனிப்போம்: 'இந்தக் கோயிலில் நொந்தா விளக்கிற்காக சாவா, மூவா, பேராடு இருபது உதகபூர்வமாகக் கொடுத்தோம்' என்றிருக்கிறது. இந்தக் கொடை கோயிலில் விளக்கு எரிவதற்காகச் செய்தது. அந்த விளக்கு அணையாமல் எப்போதும் எரிய வேண்டும் என்ற அர்த்தத்தில் 'நொந்தா விளக்கு' (நந்தா விளக்கு) என்றிருக்கிறது. அதற்கு வேண்டிய பணத்துக்குப் பதிலாக ஆடுகளையாவது மாடுகளையாவது கொடுப்பார்கள். 'மூவா' என்றால் தானம் செய்த ஆடுகள் முதுமை

அடையாமலும் திடகாத்திரமாகவும் உள்ளவை. 'சாவா' என்பது தான் விநோதம். மொத்த ஆடுகளைக் கொடுத்தபோது காலக்கிரமத்தில் அவற்றில் சில இறந்துவிட்டாலும் அவை ஈன்ற குட்டிகளின் மூலம் எண்ணிக்கை குறையாது என்று அதற்கு அர்த்தம். 'உதகபூர்வமாக' என்ருல், 'தானம் அளிக்கும்போது நீர் வார்த்துக் கொடுத்தோம்' என்று பொருள்.

ஈரோட்டில் தண்டீசுவரம் என்ற சிவாலயமும் பள்ளிகொண்ட பெருமாள் கோயிலும் இருக்கின்றன. இந்த இரண்டு கோயில்களிலுள்ள மூர்த்திகளுக்கும் உற்சவம் செய்வதற்குச் சமபாகமாகத் தானம் வழங்கியதாகக் கீழ்க்கண்ட கல்வெட்டு விவரிக்கிறது: 'இந்த நான்கு எல்லைக்குட்பட்ட நஞ்சை புஞ்சை கந்தாயமாக காணிக்கை நல்லெறுது நல்பசு பொன்வரி மக்க மகமையைப் பெறப்பட்ட யெணமும் கைக் கொண்டு இப்படிக்கு சுற்றுப்புல் போகாமுற்று திருவளயாட்டம் தேவதானமாக இரண்டு கோயிலுக்கும் சமபாகமாக இரண்டு திருநாளும் சந்திராதித்தர் வரைக்கும் நடப்பதாக. பள்ளிகொண்ட பெருமாள் தொண்டீசுவர சன்னதியில் இவூற் உதகம் பண்ணிக் கொடுத்தோம். இப்படிக்கு பூந்துறையான் கையெழுத்து.'

சிவ விஷ்ணு பேதம் இல்லாமல் மனப்பூர்வமாக இரண்டு கோயில்களிலும் உள்ள மூர்த்திகளின் உற்சவங்களுக்குச் சமபாகமாக ஒருவர் தானம் செய்தது விசேஷமல்லவா? இந்தச் சாஸனத்தில் உள்ள சில வார்த்தைகளின் பொருள்களைக் கவனிப்போம்: 'காணிக்கை' என்ருல், தெய்வத்துக்கு அல்லது அரசர்களுக்குக் கொடுக்கும் பொருள். கால்நடைக் காட்சிகளை இப்போது வருஷம் ஒரு முறை நடத்திப் பரிசு கொடுக்கிருர்கள் அல்லவா? இதைப் போலவே அந்தக் காலத்திலும் முக்கியமான ஊர்களில் எடுத்துக் காட்டாக விளங்கும் எருதுகள் (காட்சி எருதுகள்) சிலவற்றைப் பராமரித்து வருவார்கள். இப்படிச் செய்வதற்காக வாங்கும் வரிக்கு 'நல்லெருது' என்று பெயர்.

அதே போல் பசுவைப் பராமரிப்பதற்கு வாங்கும் வரிக்கு 'நற்பசு' என்று பெயர். தானியமாக வாங்காமல் காசாக வசூலிக்கும் வரிக்குப் 'பொன் வரி' என்று பெயர். கோவில், மடம் போன்ற தர்ம ஸ்தாபனங்களுக்கு ஏற்பட்ட வரிதான் மகமை. குழந்தைகளுக்குப் பாலும் சிறு கன்றுகளுக்குப் புல்லும் ஒருவிதமான தடங்கலும் இல்லாமல் கொடுப்பது பழைய தர்மம். ஆகவே, ஒருவர் நிலத்தை விலைக்கோ தானமாகவோ கொடுத்தாலும் அதில் முளைக்கும் புல்லைக் கன்றுக்குக் கொடுக்கும் உரிமை போகக் கூடாது என்ற நிபந்தனை விதிப்பார்கள். இதைத்தான் சுருக்கமாகக் 'கற்றுப்புல் போகா முற்று திருவிளையாட்டம்' தேவதானமாகத் தந்ததாகக் கண்டிருக்கிறது.

இவ்வளவு சிரத்தையாகத் தானம் செய்தவர்களுக்கு அவற்றைத் தானம் பெற்றவர் நன்ருக நடத்த வேண்டுமே என்கிற கவலையும் இருந்தது.

அந்தக் காலத்தில் பலர் பாவ புண்ணியத்துக்கு மதிப்புக் கொடுத்து வந்தார்கள். எனவே, 'இந்தச் சாஸனங்களில் உள்ள தர்மங்களுக்குக் கெடுதல் செய்தால், கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவம் வரும்' என்றும், 'தானத்தைப் பரிபாலனம் செய்கிறவர்களுக்குக் கங்கைக் கரையில் கோதானம் செய்த புண்ணியம் கிடைக்கும்' என்றும் எழுதுவது உண்டு. தவிர, சில சாஸனங்களின் முடிவில் ஒரு வடமொழிச் சுலோகம் எழுதுவார்கள்:

> தாநபாலனயோர் மத்யே
> தாநாத் ச்ரேயோநுபாலநம்
> தாநாத் ஸ்வர்க்கம் அவாப்நோதி
> பாலநாத் அச்யுதம் பதம்.

'தானத்தைப் பரிபாலனம் செய்கிறவர்கள் தானம் செய்பவர்களை விட விசேஷமான புண்ணியத்தை அடைகிருர்கள். தானம் செய்பவர்களுக்கு அச்சுதனுடைய பாதங்களே (மோட்சமே) கிடைக்கும்' என்று இதற்குப் பொருள்.

நாடோடிப் பாடலாகவே ராமாயணம் பாடிய இந்தப் பெண்ணின் வாழ்க்கையே ஒரு சோகக் கதைதான்.

கவி சந்திராவதி

மஞ்சுஸ்ரீ சிம்ஹ

'மய்மன்சிங்' பாடல்கள் என்ற நாடோடிப் பாடல் கதைகள் வங்காளத்தில் மிகவும் பிரபலமானவை. இந்தக் கதைகளில் அடிப்படையாக இருப்பவை காதலும் அதன் துன்ப விளைவுந்தான். ஒன்றுமட்டும் இதற்கு விலக்கு. அது, 'திருடன் கேனாராமின் கதை'. கொள்ளைக்காரன் ஒருவன் வம்சீதாசர் என்ற பக்த கவியின் பாடல்களைக் கேட்டு மனமுருகித் தானும் சிறந்த பக்தனாக மாறிவிடுகிறான். இதை எழுதியவள் வம்சீதாசருடைய மகள் சந்திராவதி.

அந்தக் காலத்தில் வங்காளத்தில் வாழ்ந்த ஆண் கவிகளுக்கு எந்த விதத்திலும் குறைந்தவள் அல்ல சந்திராவதி. அவள் வாழ்ந்ததே கொஞ்ச காலந்தான்: என்றாலும், அவள் எழுதிய நூல்களின் புகழ் இன்றும் மங்காமல் ஒளிர்கிறது. நிகழ்ச்சிகளை வர்ணிப்பதும், குண சித்திரம் தீட்டுவதும், தங்குதடையற்ற எளிய நடையும் அவளுடைய கவிதையிலுள்ள சிறப்புக்கள். அவள் எழுதிய 'ராமாயணம்,' 'திவான் பாப்னா,' 'கேனாராமின் கதை' இவைகளில் இந்த அம்சங்களைக் காணலாம்.

கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் புலேசுவரம் என்ற கிராமத்தில் பிறந்தவள் சந்திராவதி. பிரபல கவி வம்சீதாசருடைய ஒரே மகள் அவள். இளவயதில் தந்தையின் பூஜைக்காகத் தினந்தோறும் அவள் பூப்பறிக்க அக்கம் பக்கம் தோட்டங்களுக்குச் செல்வது வழக்கம். அங்கே ஜயானந்த சக்ரவர்த்தி என்ற வாலிபக் கவிஞன் அவளுக்குப் பழக்கமானான். ஒரு நாள் ஜயானந்தன் ஒரு பூவின் இதழில்,

''உன்றன் முழுமதி
வதனம்நான்
கண்டது முதலா
மயல்கொண்டேன்.
என்னிடம் உன்கருத்
தெடுத்துரைப்பாய்;
உன்பொருட் டெதையும்
அளித்திடுவேன்''

என்றெழுதி அவளிடம்சேர்த்தான். சந்திராவதியும் அவனைப் பார்த்த நாள் முதலாக அவனையே தன் கணவனாக ஏற்பதென்று முடிவு செய்துவிட்டாள். இருந்தாலும், சமூகம், தர்மம் இவைகளுக்குக் கட்டுப் பட்டு நடக்க வேண்டி யிருந்ததால் இப்படிப் பதில் அளித்தாள்:

''வீட்டில் பெரியவர்
இருக்குங் காலை
ஏட்டில் என்கருத்
தெழுதிட லாமோ?''

இருந்தாலும், அவளுடைய தந்தை அவளது கருத்தை ஒரு விதமாக அறிந்துகொண்டு ஜயானந்தனுக்கே அவளை மணம் செய்து கொடுக்க இசைந்தார். அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடந்து முடிந்தன. அப்போது எதிர்பாராத விதமாக ஜயானந்தன் அந்நிய மதத்தைச் சேர்ந்த ஒரு கட்டழகியின்மேல் மோகங் கொண்டு அவளோடு ஓடிவிட்டதாகச் செய்தி வந்தது. இதைக் கேட்டதும் வம்சீதாசர் தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டார்! ஆனால் சந்திராவதி, கவிதைகளில் வரும் தலைவிகளைப் போல் தரையில் விழுந்து துடிக்கவில்லை.

''என்றன் நாயகன்
பரத்தை யோடு
சென்றான் இனிநான்
வாழேன் அந்தோ!''

என்று புலம்பவுமில்லை. உலகத்தின் மேலேயே அவளுக்கு நம்பிக்கை போய்விட்டது. அவள் உள்ளத்தில்

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி), கல்கத்தா.

குமுறிய வேதனையை உணர்ந்தார் வம்சீதாசர். ''பிரம்மசாரிணியாகவே இருந்து விடுகிறேன், அப்பா'' என்று அவள் சொன்னதுமே, அவரும், ''சரி'' என்று சம்மதித்துவிட்டார். பிறகு, ''நீ சிவ பூஜை செய்து வா, அம்மா! ராமாயணத்தையும் எளிய நடையில் பாடு'' என்றார். அப்படியே ஒரு சிறு கோயிலும் கட்டிக் கொடுத்தார்; அதில் சிவபெருமான் உருவத்தைப் பிரதிஷ்டை செய்தார். அதை வழிபட்டு வந்தாள் சந்திராவதி. மீதி வேளைகளில் ராமாயணத்தை எழுதிவந்தாள். துயரத்தீயில் குளித்து அவள் கவிமணியாக ஒளிர்ந்தாள்.

வாழ்வில் இப்படி ஒரு சோதனை நேர்ந்திராவிட்டால் ஒரு சிறந்த கவியை வங்காளம் இழந்திருக்கும் என்றே சொல்ல வேண்டும்; மற்றச் சாதாரணக் குடும்பப் பெண்களைப்போலவே அவளும் வாழ்ந்து, ஊர், பெயர் தெரியாத ஒருத்தியாக இறந்திருப்பாள்.

சில ஆண்டுகளுக்குப் பின் ஜயானந்தன் திரும்பி வந்தான். அந்நிய மதத்துக் கட்டழகியிடம் அவனுக்கு இருந்த மோகம் தீர்ந்துவிட்டது. சந்திராவதியிடம் ஓர் ஓலை அனுப்பினான்:

''அமுதம் என்றே
நஞ்சு தன்னை
அருந்திக் கண்டம்
கறைப்பட் டதுவே''

என்று எழுதி, 'இனி உன் அடிமை' என்று உறுதி கூறித் தன்னை மணக்கும்படி வேண்டினான். சந்திராவதியின் மனம் இளகியது. தந்தையை அணுகி, ஜயானந்தனுடைய வேண்டுகோளைத் தெரிவித்தாள். ''அந்த எச்சில் பழம் பூஜைக்கு ஏற்றதல்ல'' என்று அவர் சொல்லிவிட்டார்.

ஆகவே, சந்திராவதி மீண்டும் ஒரே நிலையாகச் சிவபூஜையில் ஈடுபட்டாள். பித்துப் பிடித்தவன் போல் ஜயானந்தன் அலையலானான். பிறகு ஒரு நாள், சந்திராவதி வழிபடும் சிவன்கோவில் கதவில்,

''குழந்தைப் பருவம்
தொட்டே இருவரும்
பழகியே வந்தோம்
தோழீ சந்த்ரா!
இழிந்தவன் என்றே
என்னை விலக்கினாய்;
எளியே னுக்கென்
றென்றும் விடை தா!''

என்று எழுதிவிட்டு, ஆற்றில் விழுந்து உயிர் துறந்தான். சந்திராவதி மறுநாள் காலை படித்துறையில் குளிக்க வந்தபோது, அவனுடைய சவம் அங்கே மிதப்பதைக் கண்டாள். அவள் மனம் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. அவளுக்கும் வாழ்வு கசந்துவிட்டது. சிறிது காலத்துக் கெல்லாம் அவளும் மனநோயால் வெம்பி மாண்டாள். அவள் வழிபட்டு வந்த அந்தச் சிவன் கோயில் இப்போது இடிந்துவரும் நிலையில் இருக்கிறது.

அவள் இறந்து நானூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன; என்றாலும், கிழக்கு மய்மன்சிங் பகுதியில் அவள் எழுதிய ராமாயணப் பாடல்களை இன்றும் பகலில் ஓய்வு நேரத்தில் பெண்கள் பாடி மகிழ்கிறார்கள். 'திவான் பாப்னு' என்ற பாடலில் அவள் எழுதினதாகக் குறிப்பு ஏதும் இராவிட்டாலும், அதன் நடையிலிருந்து அது அவளுடைய சிருஷ்டிதான் என்று தெரிகிறது. துன்மார்க்கனை திவான் ஒருவனை எதிர்த்துக் கிராமப்பெண் ஒருத்தி உயிரைக் கொடுத்துத் தன் கற்பையும் கணவனையும் காத்த வரலாறு இது. அந்தக் காலத்தில் இந்தமாதிரி துஷ்டர்கள்தான் கிழக்கு வங்காளத்தில் ஏராளமாக இருந்தார்கள். அப்போது இந்தக் காவியத்தைச் சந்திராவதி எழுதியிருக்கிறாள் என்றால், அவளுக்கு எவ்வளவு துணிச்சல் இருந்திருக்க வேண்டும்! கிழக்கு வங்காளத்துப் படகோட்டிகள் இதைப் பாடக் கேட்க வேண்டும்; மிகவும் இனிமையாகவும் உருக்கமாகவும் இருக்கும். 'சந்திராவதி கதை' என்று வழங்கும் ஒரு பழம் பாட்டை அந்தப் பக்கத்துக் கிராமவாசிகள், திறந்த வெளியில் பந்தல் போட்டுப் பக்தி சிரத்தையுடன் கூடிப் பாடுவதை இன்றும் காணலாம்.

ஷா கண்ட சோஷலிஸம்

ரா. ஸ்ரீ. தேசிகன்

நூல் எழுதியே அளவற்ற பணம் சம்பாதித்த பெர்னார்ட் ஷா, முதலிலிருந்து கடைசிவரைக்கும் ஆயுளெல்லாம் சோஷலிஸப் பிரசாரமே செய்தார். சோஷலிஸ சமுதாயம் அமைய மனப்பூர்வமாகவே பாடுபட்டார். அவருடைய சோஷலிஸக் கருத்துக்களை இங்கே காணலாம்.

ஷா கண்ட சோஷலிஸத்தில் அவருடைய கொள்கைகள் நன்கு கோயில் கொள்ளப் பார்க்கிறோம். அவருடைய 'அறிவுள்ள பெண்ணுக்கு வழிகாட்டிய சோஷலிஸம்' என்ற நூல் நம் சிந்தையைக் கவரும் என்பதில் சந்தேகமில்லை.

சோஷலிஸத்தைப்பற்றிய நூல்களைப் படிப்பதைக் காட்டிலும், நாமே அதைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பது நலம். சோஷலிஸம் என்பது, 'எப்படி வருவாயை ஒரு புதிய முறையில் பங்கிட்டுக் கொள்ளுவது' என்பதே. செல்வத்தைச் சேமிப்பது அதைச் செலவு செய்வதற்காகவே. உழைப்பு இல்லாமல் மனிதன் உயிர் வாழ முடியாது. பால் என்ற ஞானி மொழிந்த ஒரு கருத்து நாம் சிந்திப்பதற்குரியது. உழைக்காத மனிதனுக்கு உண்டி அருந்துவதற்கு உரிமை இல்லை. வேலையை எல்லாரும் பகிர்ந்துகொள்ள வேண்டும். எல்லாரும் சேர்ந்து பாடுபட்டால்தான் சமுதாயம் நிலைபெற்றிருக்கும். சமுதாயமாம் மாபெருங் கட்டிடம், பலர் உழைப்பாம் அஸ்திவாரத்தின்மீதும் தூண்களின்மீதும் நிற்கிறது என்பதை நாம் மறக்கக் கூடாது.

ஷா ஏழு வழிகளை வகுத்துக் காட்டித் தமது முடிவைக் கூறுகிறார். வடமொழியில் இதைப் 'பூர்வபக்ஷம்' என்று கூறுவார்கள். தாம் முதலில் வகுத்துக் காட்டுகிற ஆறு பாதைகளும் தகுதியானவை அல்ல என்று அவர் கருதுகிறார். எந்த வயசா யிருந்தாலும் சரி, சமமான ஊதியத்தை அளிப்பது தான் தக்கது என்று அவர் தரும் கருத்துப் பொன்னேபோல் போற்றுதற்குரியது.

(1) அவரவருடைய உழைப்புக்குத் தகுந்தபடி ஊதியப் பங்கை அளிப்பதே நியாயம் என்று நமக்குப் படலாம். ஆனால் நடைமுறையில் உழைப்பை அளக்க முடியாது. ஏதாவது ஒரு விதமான கைங்கரியத்தை மனிதன் செய்யலாம். அதன் சிறப்பை நிறுக்க முடியுமோ? உதாரணமாக, ஒரு ஞானி தம்முடைய நற்கருத்துக்களால் உலகத்தைப் புனிதமாக்கலாம். இந்தச் சிறந்த தொண்டை மதிப்பிட முடியுமோ? ஓர் ஓவியப் புலவன், ஒரு நாடக ஆசிரியன், ஒரு கவிஞன் இவர்கள் புரிகிற சிறந்த அலுவல்களை எந்தக் கோல் கொண்டு அளக்க முடியும்?

(2) 'மனிதனின் ஆற்றலுக்குத் தகுந்தபடி பங்கிடலாம். இப்படித்தான் உலகம் நடக்கிறது' என்று ஒருவர் சொல்லலாம். சில காரியங்களால் ஒருவன் வறுமையில் உழலலாம்; வேறு சில நீசமான காரியங்களால் ஒருவன் ஒரு பெரும் பதவியை அடையலாம். யோக்கி

யதை கருதிப் பொருள் என்றும் பங்கிடப் பெறவில்லை. இது எல்லாரும் அறிந்த விஷயம். கயவர்கள் காரில் போகலாம்; சிறந்த அறிவாளிகள் சிறையில் புழுங்கலாம்! பல்லக்கில் போகிறவன் நீசனுயிருக்கலாம்; அதைத் தூக்குகிறவன் உத்தமனுய்த் திகழலாம். மனிதனின் ஆற்றலுக்குத் தக்க உத்தியோகமோ பதவியோ கிடைப்பதில்லை. இதை நம் கண் முன் காண்கிறோம்.

(3) அகப்பட்டதைச் சுருட்டுவதாக வைத்துக்கொள்வோம். இத்தகைய உலகத்தில் அமைதியும் தற்காப்பும் தோன்ற மாட்டா.

(4) ஒருவனைப் பணக்காரனுய்ச் செய்து அவன் கீழே பத்துப் பேரை உழைக்கச் செய்வது நலமென்று சிலர் கருதலாம். அவன் அந்தப் பத்துப் பேருக்கும் வருவாயைப் பகிர்ந்து தரலாம். இது நியாயமல்ல. இது ஒரு சோம்பேறிப் பிரபுவைப் படைக்கும் திட்டமாகும்.

(5) மக்களை வகுப்புக்களாகப் பிரித்து ஒரு திட்டத்தை வகுக்கலாம். தோட்டிகளும் வீட்டு வேலை செய்கிறவர்களும், டாக்டர்களை விடவும் பாதிரிமார்களை விடவும் உபாத்தியாயர்களை விடவும் குறைவான ஊதியம் பெறவேண்டும். இவர்கள் நீதிபதிகளைக் காட்டிலும், அமைச்சர்களைக் காட்டிலும், வேந்தர்களைக் காட்டிலும், வேந்தரின் மனைவிகளைக் காட்டிலும் குறைவான ஊதியம் பெறவேண்டும். இப்படிச் சொல்வதும் நியாயமல்ல. 'தோட்டி வரையில் தொண்டைமான் வரையில் ஒரே வருமானத்தை அளிப்பதுதான் நியாயம்' என்று ஷா எண்ணுகிறுர்.

(6) ஒன்றிலும் தலையிடாமல் உலகம் போன வழி விட்டால் (Laissez faire) நன்மை பிறக்கும் என்று வேறு சிலர் கருதலாம். இத்தகைய மனப் பண்பாட்டால், உலகத்தில் விளைந்த இன்னல்களைச் சரித்திரம் சித்திரித்துக் காட்டுகிறது. ஆதலால், இது தக்க முறை அல்ல.

(7) இறுதியாக உள்ளது சோஷலிஸந்தான். எல்லாரையும் சமமாகக் கருதி எல்லாருக்கும் ஊதியத்தைச் சமமாய்ப் பகிர்ந்து கொடுத்தாலல்லாது உலகம் உய்யாது என்று ஷா பல இடங்களில் மொழிகிறுர். ஒருவரும் வறுமையில் உழலக்கூடாது. வறுமையை ஒரு குற்றமாகக் கருதி அதை அகற்றிவிட வேண்டும். மனிதனுடைய தேவை இதுதான் என்று சொல்லுவதற்கில்லை. ஆதலால் எல்லாரும் சேர்ந்து உழைத்து உழைப்பின் பயனைத் தராதரம் பார்க்காமல் நுகர்வதே அறமாகும்.

ஏழை பணக்காரன் என்ற முறை வையகத்தில் இருக்கிற வரையில் தக்க மக்கள் உலகத்தில் பிறக்க மாட்டார்கள். சமமான நிலை ஏற்பட்டால், செல்வத்துக்காக மணச்சடங்குகள் செய்கிற நிலை மாறிவிடும். மக்கள் தக்கவர்களை மணம் புரிந்து கொண்டு நல்ல குழந்தைகளைப் பெறுவார்கள்.

ஏழையும் பணக்காரரும் இருக்கிற காரணத்தால், நியாயஸ்தலத்தில் ஏழை மக்களுக்கு நியாயம் கிடைக்கிறதில்லை. இவர்களிடத்தில் உண்மை இருந்தாலும், உண்மைக்கு மாறுக வழக்கறிஞர்கள் பேசிப் பொய்யை நிலைநாட்டி விடுவார்கள். பணமில்லாதவர்களுக்கு நியாயம் கிடைக்குமா, உன்னிப் பாருங்கள்.

பணம் இருப்பதால் ஒரு வேலையும் செய்யாத சோம்பேறிகளுக்கு இனிச் சற்றும் இடங் கொடுக்கக்கூடாது. அப்படி இடங் கொடுப்பது, யோக்கியதைக்கும் பதவிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாத ஒரு காட்சியை அளிக்கிறது. இது மிகவும் விசனிக்கத் தகுந்தது. வேலை செய்யாமல் அருந்தக்கூடாது என்று ஷா பல இடங்களில் குறித்திருக்கிறுர். செய்தே தீர வேண்டும் என்றிருப்பதே 'வேலை' (Work). நம் இஷ்டப்படி வேலை செய்வதற்கு 'உல்லாச நேரம்' என்று பெயர் (Leisure). ஒரு வேலையும் செய்யாமல் வாளா

இருப்பது 'ஓய்வு' (Rest). இந்த மூன்றும் நமக்குத் தேவையே.

ஜனத்தொகையைப்பற்றியும் ஷா சர்ச்சை செய்கிறார். ஓர் இடத்தில் ஜன நெருக்கத்தை வைத்துக்கொண்டு ஜனத்தொகை அதிகமாய்ப்போய்விட்டதே என்று மனம் நைந்து போக வேண்டாமாம். 'ஜனம் பெருகிவிட்டதே! இதற்கு நாம் என்ன செய்வோம்?' என்று இதையே சிந்தித்து நிற்கிறவர்களைப் பார்க்கிறோம். உலகத்திலிருந்து எழுப்பக்கூடிய பொருள்கள் மேலும் மேலும் அதிகரித்து வரும் ஜனங்களுக்குப் போதாது போனால், அபாயமான நிலை ஒன்று வரும் என்பதில் யாதோர் ஐயமும் இல்லை. அதற்கு விஞ்ஞான முறையில் தடை போடுவதுதான் தக்கது. குழந்தைகள் பிறந்து வறுமையில் மாய்வதைக் காட்டிலும், குழந்தைகள் பிறவாத வழியை நாடுவது தான் அறிவுடைமை.

'எல்லா இன்னல்களுக்கும் காரணம், செல்வர்கள் புரிகிற தீச்செயல்கள்தான்' என்று பல காரணங்கள் கொண்டு ஷா முடிவு செய்கிறார்; போர்களுக்கும் உலக அமைதியின்மைக்கும் செல்வரே மூலம் என்று ஷா கருதுகிறார். 'செல்வரால் அநேக குடும்பங்கள் பிழைக்கவில்லையா?' என்று ஒருவர் வினவலாம். இதை நகைச்சுவை ததும்பும் ஓர் உதாரணத்தின் மூலம் ஷா கேலி செய்கிறார். ''ஒரு செல்வரைக் கார் செய்கிற தொழில் அதிபராகக் கருதுவோம்: இவருடைய தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்களுக்கு ஜீவனம் ஏற்படுகிறது. கார் ஓட்டுகிறவன் பிழைக்கிறான். கார் ஒரு குழந்தை மீது ஏறிவிட்டால், அதை மருத்துவச் சாலைக்குத் தூக்கிச் செல்லும் வண்டிக்காரன் பிழைக்கிறான். அந்தக் குழந்தைக்கு மருந்தளிக்கும் மருத்துவன் பிழைக்கிறான். குழந்தை இறந்து போனால், அதற்கு ஈமக்கடன் செய்கிற பாதிரி பிழைக்கிறான். அதற்கு ஒரு சமாதி கட்டுகிற கொத்தன் பிழைக்கிறான். எத்தனை லாபங்களை மக்கள் அடைகிறார்கள் பார்த்தீர்களா, முதலாளித்துவ முறையால்?'' என்று ஒரு விதத்தில் உள்ளம் வெதும்ப, மற்றொரு விதத்தில் நகைச் சுவை ததும்ப, ஷா இதைச் சித்திரிக்கிறார்.

முதலாளித்துவ முறையை வேரோடு மாய்த்து, சோஷலிஸத்தை நிறுவதுதான் அறப்பாதை என்பது ஷாவின் கருத்து. தொழிற்சாலைகள், பாங்குகள், கடை கண்ணிகள் எல்லாவற்றையும் தேசத்தின் சொத்தாக்கி, எல்லாரையும் உழைக்கும்படி செய்து, அதில் வரும் பலன்களை எல்லாருக்கும் சமமாய்ப் பகிர்ந்துவிடுவது தான் உலக சமாதானத்துக்குத் தக்க பாதை என்று அவர் கூறுகிறார்.

ஆயினும், சோஷலிஸ அரசியல் ஒரே நாளில் உருவாகி விடாது. கொஞ்சங் கொஞ்சமாகத் தொழில்களைத் தேசிய மயமாக்கி விட வேண்டும். மக்களுக்கு இந்தத் துறையில் போதுமான அறிவைப் புகட்டிக்கொண்டே போகவேண்டும். இத்தகைய அரசியலின் நன்மைகளை அவர்கள் உணர்வார்களானால், சோஷலிஸ அரசியல் புரட்சியின்றி அமைந்துவிடும் என்று ஷா விளக்குகிறார்.

'சோஷலிஸம் வந்தால் எல்லாம் சட்டங்களாய்ப் போய்விடும்; மக்களுக்குச் சுதந்தரம் இராது' என்று ஐயுறுவாரும் உண்டு. ''இந்த விஷயத்தை ஷா 'சோஷலிஸமும் சுதந்தரமும்' என்ற தலைப்பில் ஆராய்கிறார். சோஷலிஸ அரசியலில் வறுமை போய்விடும். வறுமை போய்விட்டால் சுதந்தர வாழ்வுக்கு வழி தானாக ஏற்பட்டுவிடும். இன்பம் பெருகுமானால், நோய்க்கு இடம் இராது. மருத்துவர்களுடைய தளைகளிலிருந்து மக்கள் விலகி நிற்கலாம். செல்வர்களின் தொந்தரவுகள் தோன்றமாட்டா. ஓர் ஒழுங்கு எல்லாத் துறைகளிலும் பிறக்கும். ஒழுங்குக்கும் சுதந்தரத்துக்கும் முரண்பாடில்லை. சில விஷயங்களில் சம்பிரதாயங்களை அநுஷ்டித்தால், மற்ற விஷயங்களில் சுதந்தர வாழ்வு வாழலாம்.

சோஷலிஸத்தில், கொடுங்கோல் செலுத்தும் கணவர்களை விட்டுப் பெண்கள் பிரிந்து போகலாம்.

'போனால் சோற்றுக்கு என்ன செய்வோம்?' என்ற அச்சம் இல்லை. அவர்களுக்கு வேண்டிய வருவாய்தான் எப்போதும் காத்துக்கொண்டிருக்கிறதே!

குழந்தைகளுக்குத் தக்க கல்வித் துறையைச் சோஷலிஸம் வகுத்துத் தரும். ''கல்வி பள்ளியோடு நின்று விடவில்லை. வாழ்க்கையிலிருந்து எப்போதும் கற்றுக்கொண்டிருக்கிறோம். உதாரணமாக, எனக்கு எழுபது வயசுக்கு மேல் ஆகிறது. இன்னும் நான் கற்றுக்கொண்டேதான் இருக்கிறேன்'' என்று ஷா கூறுவதை நவீன மாணவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பள்ளியோடு படிப்பு முடிந்ததாகக் கருதாமல், பள்ளிப்படிப்பு முடியும்போது தான் கல்வி தொடங்குகிறது என்ற எண்ணம் அவர்களிடையே வளரவேண்டும்.

பொருளாதாரம், அரசாங்க அமைப்புப்பற்றிய சரித்திரம், சட்டத்தின் இயல்பு - இவற்றையெல்லாம் மக்கள் அனைவரும் ஓரளவு அறிந்திருக்கவேண்டும். தக்கவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இதைத் தவிர வேறு வழி இல்லை.

'சோவியத் அரசியல் படிப்படியாக நிறுவப் பெறவில்லை. இரக்கமின்றி எல்லாவற்றையும் அழித்து அந்த அழிவுக் குப்பைகள்மீது அரசியலை நிறுவிவிட்டார்கள்' என்று சிலர் கூறுகிறார்கள். உண்மைதான். ஆனால் கார்ல் மார்க்ஸ், ஹென்ரி ஜார்ஜ் இவர்களுடைய நூல்களைப் படித்தால், முதலாளிகளின் கால்களில் மிதிபட்டுக் கிடந்த அடிமைத் தொழிலாளிகளின் கஷ்டத்தை ஒப்பிடுகிறபோது தாம் அடைந்த இன்னல்கள் ஒன்றுமே இல்லை என்ற உண்மையை அவர்கள் உணர்வார்கள். வருவாயைச் சமமாகப் பங்கிடவேண்டுமென்ற திட்டத்தைக் கார்ல் மார்க்ஸ் வகுக்கவில்லை. முதலாளிகளின் இரக்கமற்ற செயல்களை ஒழித்து எல்லாவற்றையும் சமுதாயப் பொருள்கள் ஆக்கிவிட வேண்டுமென்ற கனவைக் கார்ல் மார்க்ஸ் கண்டார். அந்தக் கனவு உருவாகிவிட்டது. இப்போது ருஷியாவின் நிலை போற்றுதற்குரியது என்று கூறுகிறார்கள்.

பாஸிஸ்ட் கொள்கையில் புதி தொன்றும் இல்லை. ஜூலியஸ் ஸீஸர், கிராம்வெல், நெப்போலியன்கள் யாவரும் பாஸிஸ்ட் கொள்கைக்கு வழிகாட்டியவர்களே. பிளேட்டோவையே பாஸிஸ்ட் கொள்கைக்கு ஒரு விடிவெள்ளியென்று கருதுவாரும் உண்டு. பாஸிஸ்ட் கொள்கையால் நாடு சில நன்மைகளை அடைந்தது உண்மையே. போர் வெடித்து எழும்போது பாஸிஸ்ட் அரசியல் ஈடு கொடுக்கும். ஆனால் இது முதலாளிகளுக்குச் சலுகை காட்டுகிறது. தனிச் சொத்துரிமையை வற்புறுத்துகிறது. ஏழை, பணக்காரன் என்ற மீளாப் படுகுழியில் நாட்டை இது தள்ளிவிடும். ஆதலால் சோஷலிஸமே மக்கள் உவந்து ஏற்றுக்கொள்ளத் தகுந்தது.

இவருடைய முடிவுரையில் இவர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவது நன்கு புலனாகிறது. ஒவ்வொரு சொல்லும் உணர்ச்சியின் பேரொலிதான். இப்படி ஆழ்ந்து சிந்தித்துத் தம் கருத்தை அச்சமின்றி வெளியிட்ட சான்றோனுக்கு உலகம் வணக்கம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது என்பதில் ஐயம் உண்டோ?

பக்தி இல்லையேல்...

பக்தியும் நம்பிக்கையும் இல்லையேல் இந்த உலகம் ஒரு விநாடியில் ஒன்றுமில்லாமல் போகும். ஜபமும் தவமும் செய்து ஆண்டவனை வழிபட்டுப் பரிசுத்த வாழ்வு நடத்திய பெரியோர்களுடைய அநுபவ சக்தியை நம்முடைய பொருளாக எடுத்துக்கொண்டு ஆள்வதுதான் பக்தி.

—மகாத்மா காந்தி

'மணமகன் தேவை', 'மணமகள் தேவை' என்ற விளம்பரங்களில் எத்தனை தமாஷ்கள் இருக்கின்றன!

கலியாண விளம்பரங்கள்

லாங்கூலாசார்ய

காமன் ஐந்து வகை மலர் அம்புகளால் உலகை வெல்லுகிறான் என்று புராணங்கள் சொல்லுகின்றன. இந்தக் காலத்தில் பல நகரங்களில் பூக்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் காமதேவன் பூவைப் போலவே மெல்லிய காகிதத்தை ஆரும் அம்பாகத் தன் அம்பருத் தூணியில் சேர்த்துக்கொண்டிருக்கிறான். பத்திரிகைகளில் - சிறப்பாக ஆங்கிலப் பத்திரிகைகளில்-அவன், 'வரன் தேவை; பெண் தேவை' என்ற விளம்பர வடிவில் அந்த அம்பைச் செலுத்துகிறான். இந்த முறை வர வர அதிகமாகிக் கொண்டு வருகிறது.

வேலை விளம்பரங்களையும் சினிமா விளம்பரங்களையும் தேடி அலையும் ஏமாந்த பறவைகள் இவற்றுள் தலையிட்டால், இந்த அம்புகளுக்கு இரையாக வேண்டியதுதான். என் பிரம்மசாரி நண்பர் ஒருவர் மதனனின் இந்தக் காகித அம்புக்கு இரையாகி அவனுடைய யாகப் பசுவாகிவிட்ட செய்தி எனக்கு இன்னும் மறக்கவில்லை. ஒரு பத்திரிகையில் வந்த 'மணமகன் தேவை' விளம்பரத்தைக் கண்டு, தமாஷுக்காக அவர் பதில் கொடுத்தார். இளைஞர்கள் எல்லாருக்குமே இது போன்ற குறும்புத்தனம் இருப்பது சகஜந்தான். குறும்பைச் செய்யும்போது அவர்கள் தாம் மிகத் தந்திரசாலிகள் என்ற தீர்மானத்துடனேதான் செய்கிறார்கள். ஆனால் அது காமதேவன் கிளப்பிவிட்டதால் தோன்றிய மிக மோசமான முட்டாள்தனம் ஆகிவிடும். என் நண்பர் என்னவோ விளையாட்டுக்காகத்தான் விளம்பரத்துக்குப் பதில் கொடுத்தார். ஆனால் விளம்பரம் செய்தவர்கள் அவருடைய குடும்பத்தின் வெகு நாளைய உறவினர்கள். அதனால், அவர் இவர்களுடைய பிடியிலிருந்து விடுபட வழி இல்லாமல் போயிற்று. வேடிக்கை வினையாக முடிந்தது. நண்பர் கலியாணத்துக்கு உடன்பட்டார். இப்போது அந்தப் புல்தடுக்கிப் பயில்வான், எட்டுப் பிள்ளைகளைப் பெற்ற ஒரு தாயின் வேலைக்காரராக இருக்கிறார்.

மணமக்கள் தேவைப் பத்திகளைப் படிப்பது எனக்கு மிகப் பிடித்த வேலை. நம் மந்திரிகள் பலருடைய பேச்சைவிட அது உபயோகமாக இருக்கிறது. சமூகத்தைப்பற்றி அவை நமக்குத் தெரிவிக்கின்றன. பல சினிமாக்களைவிட இன்பம் தருகின்றன. இருபத்தைந்து வருஷங்களுக்குமுன் 'தேவை' விளம்பரங்களைப் பார்த்தவர்கள், அவற்றை இந்தக் காலத்து விளம்பரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், கலியாணத்தின் கொள்கை எங்கிருந்து எங்கே பாய்ந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

''28 வயசு உள்ள லேடி டாக்டருக்கு 40 வயசுக்கு உட்பட்ட வரன் வேண்டும். கலியாணம் ஆகாதவராக இருந்தாலும் சரி, குழந்தைகளின் தொல்லை இல்லாத இளையாள் வரனாக இருந்தாலும் சரி; தடை இல்லை.''

''175 ரூபாய் சம்பளம் உள்ள இளைஞனுக்கு உத்தியோகம் செய்யும் மனைவி வேண்டும்.''

இவை போன்ற விளம்பரங்களை இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் நம் சமூகத்தினரிடையில் நீங்கள் கண்டது உண்டா? மனசுக்குப் பிடிக்காத சக்கையான பல விஷயங்களை ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெறுவதைவிட, இந்த

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்: 27-4-'58), ஹுப்ளி.

விளம்பரங்களைப்பற்றி ஆராய்ந்து எழுதுவது மிகவும் உபயோகமான தென்று எனக்குத் தோன்றுகிறது.

'மணமக்கள் தேவை' விளம்பரங்களால் எவ்வளவு இனிய பொழுதுபோக்கு வாய்க்கிறதென்பதைப் பாருங்கள்! 34 வயசு உள்ள, ஏழையான, மேல்படிப்பு இல்லாத மகாநுபாவன் ஒருவனுக்கு மணப்பெண் தேவையாம். அவன் அவளிடம் என்ன என்ன குணங்கள் அமைந்திருக்கவேண்டுமென்று விரும்புகிறுன் என்பதை நீங்கள் ஊகிப்பீர்களா? உங்களால் நிச்சயமாக முடியாது! அவள் தத்துவஞானத்தில் அக்கறை உள்ளவளாய் இருக்கவேண்டுமாம்; வேதாந்தத்தில் நல்ல பயிற்சி பெற்றிருக்கவேண்டுமாம்! அவன் இப்படிப்பட்ட குணங்களை விரும்புவது இயற்கையே. இந்த ஏழையின் கைபிடிப்பவளுக்குத் தத்துவஞானம் இருக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் வறுமையைத் தாங்க அவளுக்கு எப்படிப் பொறுமை இருக்க முடியும்? வேதாந்த வித்தையில் தேர்ந்தவர்களாக இருந்தால், வயிற்றுக்கு இல்லாதபோது யோக சாதனையினுல் பசியை அடக்கிக் கொள்ளலாம் என்பது அவனுடைய எண்ணமாய் இருக்கலாம். அவனும் ஓரளவு தத்துவ ஞானியாய் இருக்கவேண்டும். ஏனென்ருல், இளமையையோ, அழகையோ, வரதட்சிணையையோ அவன் விரும்பவில்லை அல்லவா?

மற்ருெரு விளம்பரம்: ''28 வயசுப் பிரம்மசாரி; சம்பளம் ரூ. 270. ஏழையான சுறுசுறுப்பு உள்ள மனைவி தேவை. ஜாதி எதுவாய் இருந்தாலும் பரவாயில்லை. ஆனுல் நர்ஸாக இருந்தால் நல்லது; நல்ல நடத்தை இருக்க வேண்டும்.'' ஆசாமி இப்படியெல்லாம் ஒரே மூச்சில் கேட்டிருக்கிறுன். இதன் பொருள் என்னவாக இருக்கும் என்று நான் ஆராய்ந்தேன். ஏன் அவன் நர்ஸையே வேண்டுகிறுன்? டைப்பிஸ்டாக அவள் ஏன் இருக்கக் கூடாது? ஒன்று, அவன் எப்போதும் நோயாளியாக இருக்கலாம்; நர்ஸைக் கல்யாணம் செய்து கொண்டால் தன்னைப்பற்றிய பிரச்னை தீர்ந்துவிடும் என்று நினைத்திருக்கலாம். அல்லது, ஆஸ்பத்திரிகளில் இருக்கும் ஒரு நர்ஸைக் காதலித்து அவள் இவனை மறுத்திருக்கலாம்: ''உன்னைப் போன்ற நர்ஸ் ஒருத்தியையே கல்யாணம் செய்து கொள்ளுகிறேன், பார்'' என்று ஒருவேளை அவன் அவளிடம் சபதம் செய்திருக்கலாம்.

'கன்னி என்ருல் யார்?' என்று எனக்கு ஒரு சந்தேகம். தேவைப் பத்திகளைப் படிக்கப் படிக்க இந்தச் சந்தேகம் வலுத்துக்கொண்டே போகிறது. 28 வயசுச் சுகுமாரிக்கு வரன் வேண்டுமாம். 'கல்யாணம் ஆகாதவள் கன்னி' என்பது இவளுடைய நினைப்புப்போல் இருக்கிறது! 28 வயசுக்காரி கன்னியாக இருந்தால் 72 வயசு சென்ற எங்கள் பக்கத்து வீட்டு நொண்டிக் கிழவி கல்லம்மாளும் கன்னிதானே? அவளுக்குந்தான் கலியாணம் ஆகவில்லை!

'படித்த அழகான பெண் ஒருத்திக்கு வயசு சென்ற பிரம்மசாரி வேண்டும்' என்பது ஒரு விளம்பரம். இந்தப் பெண்ணுக்கு வயசான பிரம்மசாரியின்மேல் ஏன் இவ்வளவு மோகம்? 'வளர்ப்புத் தந்தையாகக் கொள்ள விரும்பியோ?' என்று சிலர் நினைக்கலாம். இல்லை; இல்லை. 'கல்யாணம் செய்துகொள்வதற்காக' என்று சந்தேகமறப் பிரகடனம் செய்கிருள். 'இந்தப் பெண்ணுக்கு வயசு எவ்வளவோ? பால் பல் விழுந்திருக்கும் அல்லவா?' என்று நான் யோசித்தேன். இப்படி நித்திய கன்னிகளாய் இருப்பவர்களின்மேல் பழிவாங்க எண்ணியதுபோல் ஒரு பிருகஸ்பதி, '35 வயசு இளையாள் வரனுகிய இளைஞனுக்கு மணப் பெண் வேண்டும்' என்று விளம்பரம் செய்திருந்தான்.

'நர்ஸ்தான் வேண்டும்' என்ற விளம்பரத்தைப்போல் மணமகனுக்கு இன்ன பதவியோ பட்டமோ தான் இருக்கவேண்டும் என்று பிரகடனம் செய்யும் பெண்களும் இருக்கிருர்கள். 'டபிள் எஞ்சி

னீரிங் கிராஜுவேட்'டைத் தவிர மற்றவரைக் கோலாலும் தொடச் சம்மதிக்காத பெண் ஒருத்தி இருக்கிறாள். மற்றொருத்திக்கு டாக்டரின்மேல் ஆசை. 'வக்கீலாய் இருந்தால் நலம்' என்று இன்னொருத்தி தன் விருப்பத்தை நாசுக்காய்த் தெரிவித்திருக்கிறாள். இவற்றைப் படித்தபின், எனக்கு எதனால் கோபம் வந்தது என்று கேளுங்கள்! 'ஒரு பத்திரிகை ஆசிரியரோ, உதவி ஆசிரியரோ வேண்டும் என்று ஒரு மகராஜியும் விரும்பவில்லையே!' என்பதுதான் என் கோபத்துக்குக் காரணம். இன்னும் மோசமான ஒரு விஷயம் இது: எங்கள் உறவினர் ஒருவர், 'உதவி ஆசிரியர் ஒருவருக்கு மணப்பெண் தேவை' என்று விளம்பரம் செய்த போது ஒரே ஒருத்திதான் பதில் கொடுத்திருந்தாள்! அவளும் உதவி ஆசிரியர் என்றால் பணங்காய்ச்சி மரம் என்று ஏமாந்தே கடிதம் எழுதியிருந்தாள். ராணுவக்காரரையே விரும்பும் மூடப் பெண்களும் இருக்கிறார்கள். கத்தியை விடப் பயங்கரமாகப் பேனாவை ஓட்டும் நாங்கள் முரட்டு ராணுவக்காரரைவிடத் தாழ்ந்து விட்டோம்!

சிலர் தாங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகளை ஒன்று விடாமல் விளம்பரங்களில் வெளியிட்டுவிடுகிறார்கள். ஜாதி, வயசு, குணம் முதலிய எல்லாவற்றையும் குறிப்பிட்டு ஓர் ஆசாமி, 'பெண்ணின் உயரம் ஐந்தடி இரண்டங்குலம் இருக்க வேண்டும்' என்றும் குறிக்கிறார். இவர் ஐந்தடி மூன்று அங்குலத்துக்குமேல் உயரமாய் இருக்க மாட்டாரோ என்னவோ? தம்மைவிட உயரமான மனைவியைக் கட்டியாளும் தைரியம் ஒரு வேளை இவருக்கு இராது; இவர் ஒரு தப்புச் செய்துவிட்டார்; தம்முடைய வருங்கால மனைவியின் உடல் சுற்றளவைக் குறிப்பிட மறந்து விட்டார். அவளுடைய சுற்றளவு ஐந்தடி இரண்டங்குலம் இருந்துவிட்டால் என்ன செய்வார், பாவம்!

வருமான வரி இலாகாவுக்கு நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். கேட்டால் அவர்களுக்கு லாபம்! கலியாண விளம்பரங்களின்மேல் அந்த இலாகாதார் ஒரு கண் வைத்திருக்க வேண்டும்! 'கோடீசுவரக் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளைஞனுக்கு மணமகள் தேவை' என்று சமீபத்தில் ஒரு விளம்பரம் வந்திருந்தது. இந்த விளம்பரதாரரைத் தேடிக் கண்டுபிடித்தால், அவர்கள் தம் கையை 'ஜம்' என்று அந்தக் குடும்பத்தினரின் தலையில் வைக்கலாம்.

90 வயசு - 64 குழந்தைகள்!

பாபா என்ற குடியானவருக்கு வயசு 90. மனைவிமார் 4 பேர். குழந்தைகள் 64. அவர்களில் 50 பேர் பையன்கள். அவர்கள் எல்லோரும் தங்கள் நிலத்தைப் பயிரிடுவதில் அப்பாவுக்கு உதவி செய்கிறார்கள். குடும்பத் தலைவரான பாபா, ஸபர்க்காந்தா ஜில்லாவில் போஷினு என்ற கிராமத்தில் வசிக்கிறார். தம் நிலத்தின் விளைச்சலைக் கொண்டே குடும்பத்தை இப்போது அவர் பராமரித்து வருகிறார்.

பாபாவின் பிள்ளை குட்டிகளே ஒரு தெரு முழுவதும் குடியிருக்கிறார்கள். 'பாபா தெரு' என்று அதற்குக் கிராமவாசிகள் பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

—டி. என். பெய்லீ, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்.'

கண்ணுக்கினியது; காத
லில் சிறந்தது - இப்படிப்
பட்ட ஒரு பறவை:

மரங்கொத்தி

சுபாஷ் ஜே. ரேலே

மரங்கொத்தி மான் நிற முள்ள பறவை; அதன் முதுகுப் பக்கமும், இறக்கையிலும், வால் பாகத்திலும் வரிக்குதிரைபோல் மாறி மாறி வெள்ளையும் கறுப்புமாகப் பட்டைகள் இருக்கும். தலையில் விசிறிபோல் பெரிய அழகான கொண்டையும், நீண்டு சற்றே வளைந்த அலகும் இதற்கு உண்டு.

ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பல இடங்களில் வாழ்கிறது மரங்கொத்தி. இதில் பல வகை உண்டு. அவைகளுள் மூன்று வகைகளைப்பற்றி மட்டும் இங்கே கவனிக்கலாம். இவைகளுக்குள் இருக்கும் வித்தியாசத்தை அவ்வளவு எளிதில் கண்டு பிடித்துவிட முடியாது; உருவ அமைப்பிலும், நிறத்திலும் சற்றே மாறுதல்கள் இருக்கும். வட இந்தியாவில் வாழும் வகை, பம்பாயிலிருந்து சிங்களம் வரை வாழும் வகை இரண்டும் அந்த அந்தப் பிரதேசத்திலேயே இருந்து வருபவை. ஹிமாலயத்தில் குஞ்சு பொரித்து வளர்ந்து பெரிதாகும் ஒரு வகையும் உண்டு; இது மழை, குளிர் காலத்தில் தெற்குப் பக்கம் இருக்கும் சமவெளிகளுக்குப் போய் விடும்.

ஆங்கிலத்தில் இதற்கு ஹூபோ என்று பெயர் வந்ததற்குக் காரணம் இது கூவும் விதத்திலிருந்து ஏற்பட்டிருக்கலாம். இலக்கியத்திலும், பழங்கதைகளிலும் இதைப் பற்றிப் புகழ்ந்து பாராட்டியிருப்பதைக் காணலாம். பல நிறமுடைய இதன் சிறகுகளும் குத்திட்டு நிற்கும் பெரிய கொண்டையும் மிகவும் பிரசித்தம்; 'ஹூபோ' அல்லது 'ஹூ-போ-போ' என்று இது கூவும்போது மென்மையாகவும் இனிமையாகவும் இருக்கும். இப்படிப் பல தடவை கூவும். இந்தமாதிரி கூவுவதால் பல பாஷைகளில் இதற்கு இந்த ஒலியை ஒட்டிய பெயர்கள் வழங்கி வருகின்றன. இது உள்ளடங்கினதுபோல் கர்ணகடோரமாகக் 'கா' என்று ஒலிப்பதும், கெக்கலிப்பதுபோல் ஒலிப்பதும் உண்டு.

மரங்கொத்தி சாதாரணமான இயல்புள்ள பறவைதான்; பார்வைக்குமட்டும் எடுப்பாகத் தோன்றும். இதன் விசித்திரமான சிறகுகளே இப்படி இது கண்ணுக்குக் கவர்ச்சியாக இருப்பதற்குக் காரணம். அடர்ந்த காட்டுப் பிரதேசங்களை இது அண்டாது; பொதுவாக, திறந்த வெளிகளிலே, அதுவும் தோப்பு, குற்றுச்செடி அடர்ந்த புதர், கிராமத்துக்கு வெளியே மண்சுவர், பாழடைந்து இடிந்த கட்டிடம் இந்த இடங்களில் மரங்கொத்தியைக் காணலாம். இங்கொரு ஜோடியாகவும் அங்கொரு ஜோடியாகவும் ஐந்தாறு குடும்பமாகவும் இவை இருக்கும்.

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 7-9-'58), கல்கத்தா.

காடையைப்போல் ஆடி அசைந்து கொண்டு குட்டையான கால்களால் நடந்தும் ஓடியும் செல்லும். ஏதையாவது தோண்டும்போது இதன் கொண்டை மடிந்து தலைக்குப் பின்னால் கூராக நிற்கும். பரபரப்பு ஏற்படும்போது கொண்டை குத்திட்டு விசிறிபோல் விரிந்துவிடும். இன்னது செய்வதென்று தெரியாமல் திண்டாடுவதுபோல் பறந்து போய்ச் சற்றுத் தொலைவில் எங்காவது அமரும். மறுபடியும் இதன் கொண்டை கூராக நிற்கும்.

பூச்சிகள், புழுக்கள் இவைகளே இதற்கு உணவு. இப்படிப் பூச்சி புழு உபத்திரவத்தை இது நீக்குவது பயிர்த்தொழிலுக்குப் பேருதவியாக இருக்கிறது.

இதன் இறக்கைகளைப் பார்த்தால் பலவீனமாகத்தான் தோன்றும். ஆனால் நன்றாகக் கவனித்துப் பார்த்தால் வெகு தூரம் பறக்கக் கூடியது மரங்கொத்தி என்று தெரியவரும். பிரபல இலக்கிய நூலாசிரியர்கள் எழுதியிருக்கும் விவரங்களிலிருந்தும் இது தெளிவாகும்.

பைரி துரத்தி வந்தால் மரங்கொத்தி கடுவேகமாக மிகவும் உயரத்துக்குப் பறந்து போய் அதனிடமிருந்து தப்பிவிடும்.

இந்திய மரங்கொத்தி பொதுவாக நாணிக் கூச்சப்படும் மங்கையைப்போல் கம்மென்று ஒரே இடத்தில் அமர்ந்திருக்கும். ஆனால் ஆண் பெண் ஜோடி சேரும் சமயம் பார்க்க வேண்டும்: கூச்சமெல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டுத் துணிச்சலாகவும் ஊக்கத்தோடும் இருந்துவரும். சில சமயம் ஆண் பறவை பெட்டையைத் துரத்திக்கொண்டு பறந்து செல்லும்; பிறகு இரண்டும் மிகவும் விநோதமான முறையில் சுழன்று, பல்டியடிக்கத் தொடங்கிவிடும்.

ஆதி எகிப்திய, கிரீட் நாட்டுச் சுவர்ச்சித்திரங்களில் மரங்கொத்தியின் உருவங்களைப் பல இடங்களில் காணலாம். அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம்வரை இலக்கியங்களில் மரங்கொத்தியைப் பற்றித் தொடர்ந்து பல ரசமான விவரங்கள் இருந்து வருவதையும் காணலாம். ஆதியில் நம் முன்னோரின் சிந்தனையை எவ்வளவு தூரம் கவர்ந்திருந்தது இந்தப் பறவை என்பது இதிலிருந்தே தெரியவரும். மரங்கொத்தியைப் பற்றிய ரசமான இன்னும் பல பழங்கதைகளும் உண்டு. மேல் நாட்டுப் பழங்கதைகளில் ஜெரூஸ் என்ற கிரீட் அரசன், தான் செய்த குற்றத்துக்கு ஏற்ற தண்டனையாக மரங்கொத்தியாக மாற நேர்ந்தது என்று வருகிறது. உலகத்திலுள்ள முஸ்லிம் நாடுகளிலெல்லாம், 'சுலேமான் என்ற பேரரசனுக்கு மிகவும் வேண்டிய பறவை மரங்கொத்தி; அதோடு அவன் மிக நெருங்கிப் பழகுவான்' என்ற கதை வழங்கி வருகிறது. பைபிளில் வரும் பறவைகளில் முக்கியமானது மரங்கொத்தி.

மந்திரவாதம், மருத்துவம் இவைகளில் இது மிகவும் முக்கியமாகப் பயன்பட்டு வந்ததாக இலக்கியங் களிலிருந்து தெரிகிறது. பழைய நூலாசிரியர்கள் பலர், சொப்பனம் காண்பதற்கும், ஞாபகசக்திக்கும் மரங்கொத்தியின் வெவ்வேறு உறுப்புக்களை உண்ணலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதன் கூடு மிகவும் அற்பமானது. பெட்டை எப்போதும் அங்கேயே அடை காத்தபடி உட்கார்ந்திருக்கும்; கூட்டை விட்டுப் போவதே அபூர்வம். ஆணே அக்கறையோடு இரை கொண்டு வந்து அதற்குக் கொடுக்கும். குஞ்சு பொரிக்கும் வரையில் அந்த இடத்தை விட்டுப் பெட்டை எழுந்திராது. ஆகவே, கூட்டுக்குள் ஒரே குப்பையும் கூளமும் குவிந்து, அதிலிருந்து வரும் துர்க்கந்தம் குடலைக் குழப்பும். இலக்கியங்களிலும் இதைப்பற்றிக் குறிப்பிட் டிருப்பதைக் காணலாம். இதே காரணத்தால்தான் யூதர்களின் சட்ட விதிகளிலும் மரங்கொத்தி 'அசுத்தமான' பறவை என்று சொல்லியிருக்கிறது.

சம்பாஷணையிலே திறமை என்பது இயற்கை அறிவைப் பொறுத்த விஷயம்.

உடனே பதில்

அகர்சந்த் நாஹடா

இயற்கையிலுள்ள விந்தைகள் அளவற்றவை; அவற்றை விரித்துக் கூற இயலாது. உலகிலுள்ள உயிர்களைப் பாருங்கள்; ஒன்றின் வடிவம், குரல், விருப்பம், தகுதி ஆகியவைபோல் மற்றொன்றுக்கு இருப்பதில்லை. சிலருடைய அறிவு மிகவும் மந்தமாக இருப்பதைக் காண்கிறோம்; சாதாரண வினவுக்குப் பதில் சொல்லக்கூட அவர்களால் இயலாது; ஒரு சிறு சிக்கலைத் தீர்ப்பதும் அவர்களுக்குப் பெரிய காரியம். ஆனால் சிலர், எதைக் கேட்டாலும் உடனே பளிச்சென்று பதில் சொல்கிறார்கள். மற்றவர்களால் முடியாத வேலையை அவர்கள் விளையாட்டாகச் செய்துவிடுகிறார்கள். அவர்கள் எதையும் நீண்ட நேரம் சிந்திக்கவேண்டிய தேவை இருப்பதில்லை. ஏதாவது ஒரு விஷயத்தைக் கேட்டதும், அல்லது ஏதாவது ஒரு நிகழ்ச்சியைக் கண்டதும் அவர்களுடைய அறிவு கூர்மை அடைகிறது. பல நாள் சாத்திரம் பயின்றோ, குருவினிடம் உபதேசம் பெற்றோ விடை கூற முடியாத வினக்களுக்குக்கூட அவர்கள் தங்கள் இயல்பான அறிவினால் சடக்கென்று பதில் சொல்லிவிடுவார்கள்.

தெனாலிராமன், வீரபல் முதலியவர்களைப்பற்றி நாம் படித்திருக்கிறோம். பழைய நூல்களில் இவ்வாறு சாதுரியமாகப் பதில் சொல்லும் நிகழ்ச்சிகளைப்பற்றிய கதைகள் பல வருகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே கூறுகிறேன்.

மூன்று அறிவாளிகள்: மூன்று அறிவாளிகள், வேலை கேட்பதற்காக ஓர் அரசனிடம் சென்றார்கள். தம்மை ஒய்யாரமாக அலங்கரித்துக்கொண்டு அவர்கள் அரசவைக்குச் சென்று, தமக்குத் தக்க வேலை கொடுக்கச் சொன்னார்கள். ''உங்களுக்கு என்ன கலை சிறப்பாகத் தெரியும்?'' என்று அரசன் கேட்டான்.

''அரசே, நீங்கள் எவ்வளவு கடுமையான விந்தைக் கேள்வி கேட்டாலும் நாங்கள் உடனே பதில் சொல்வோம். இந்தக் கலையில் நாங்கள் தேர்ந்தவர்கள்'' என்று அவர்கள் சொன்னார்கள்.

அரசன் அவர்கள் வசதியாகத் தங்குவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு, ஒரு நாள் அவர்களைப் பரீட்சிக்கத் தொடங்கினான். முதல் ஆசாமியைப் பார்த்து, ''உன் மீசை மயிர் கறுப்பாகவும் தலைமயிர் வெளுத்தும் இருப்பது ஏன்?'' என்று அரசன் கேட்டான்.

அறிவாளி உடனே பதில் சொன்னான்: ''அரசே, தலைமயிர் முன்னாலேயே முளைத்திருக்கிறது; மீசை மயிர் அதற்குப் பிறகு பதினாறு அல்லது பதினெட்டு ஆண்டுகள் கழித்து முளைத்தது. தலைமயிர் வயதில் பெரியதாகையால் முதலில் வெளுப்பது இயல்புதானே? மீசை மயிர் இன்னும் இளமையோடு இருப்பதனால் கறுப்பாகத்தான் இருக்கும்.''

அரசன் அதைக் கேட்டு மகிழ்ந்து அவனுக்குத் தகுந்த வேலை கொடுத்தான்.

அடுத்தபடி, இரண்டாம் அறிவாளியின் முறை வந்தது. ''உன் தலைமயிர் கறுத்திருக்க, தாடிமயிர் மட்டும் ஏன் வெளுத்திருக்கிறது?'' என்று அரசன் கேட்டான்.

அறிவாளி உடனே பதில் சொன்னான்: ''அரசே, நான் தலைமயிரை எப்போதாவது முழுகும் போதுதான் கழுவுகிறேன்: தாடிமயிரையோ தினமும் அடிக்கடி கழுவித் துடைக்கிறேன். எனவே, அடிக்கடி கழுவுவதனால் தாடிமயிர் வெளுத்திருப்பதுதானே இயல்பு?''

யுக்திக்குப் பொருந்திய இந்தப் பதிலைக் கேட்டு அரசன் வியந்து, அவனுக்கும் வேலை கொடுத்தான்.

காப்பிரைட்: ஜீவன் ஸாஹித்ய (ஹிந்தி: செப்டம்பர் '58), புது டில்லி.

மூன்றாவது அறிவாளியை, "உனக்கு ஏன் தாடி மீசை இல்லை?" என்று அரசன் கேட்டான்.

அறிவாளி உடனே பதில் சொன்னான்: "அரசே, எல்லாரும் தந்தையின் சார்பில் இருக்கிறார்கள்; நான் தாயின் சார்பைப் பற்றினேன். ஆதலால், எனக்குத் தாடியும் இல்லை, மீசையும் இல்லை."

அரசன் இவனுக்கும் தக்க பரிசளித்து வேலை கொடுத்தான்.

வைநாதடத்தில் காக்கைகள் எத்தனை? வைநாதடம் என்ற ஊரில் பிரசித்த அறிவாளி ஒருவன் இருந்தான். வெளியூரிலிருந்து வந்த ஒருவனுக்கு, அவனை எப்படியாவது பேச்சில் மடக்கிவிடவேண்டும் என்று ஆசையாக இருந்தது. அவன் அறிவாளியினிடம் சென்று, "உங்கள் திறமையைப்பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேன். ஒரு சிறு கேள்வி கேட்க வேண்டும்" என்றான்.

"பேஷாகக் கேளுங்கள், சொல்லுகிறேன்" என்றான் அறிவாளி.

"உங்கள் ஊரில் எங்கே பார்த்தாலும் காக்கைகள் கத்துகின்றனவே; இவற்றின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும்?"

"நான் எத்தனையோ நாளைக்கு முன்னால் இவற்றை எண்ணிக் கணக்கிட்டு வைத்திருக்கிறேன். இதைக் கண்டு பிடிப்பது என்ன சிரமம்? மொத்தம் அறுபதினாயிரம் காக்கைகள் இந்த ஊரில் இருக்கின்றன."

"தங்கள் கணக்குச் சரி என்பதற்கு என்ன அத்தாட்சி?"

"வேண்டுமானால் நீங்கள் எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள்."

"எண்ணிக்கையில் ஏற்றமோ குறைவோ இருந்தால்?"

"இருக்கட்டுமே; அதனால் என்ன? இந்தக் காக்கைகள் ஒரே இடத்திலா இருக்கின்றன? எப்போதும் பறந்து செல்வதுதான் இவற்றின் இயல்பு. வெளியூர்க் காக்கைகள் வந்தால் இவற்றின் எண்ணிக்கை ஏறும்; இங்குள்ள காக்கைகள் இரை தேட வெளியூருக்குப் போவதும் உண்டு. ஆகவே, எண்ணிக்கையில் ஏற்றக் குறைச்சல் இருப்பது சகஜந்தான்."

வந்தவன் இதற்குப் பதில் சொல்ல முடியாமல் வாய் மாண்டு அகன்றான்.

இப்படி எத்தனையோ அருமையான கதைகள் பழைய நூல்களில் இருக்கின்றன. இவை பொழுது போக்குக்கு உதவுவதோடு அறிவையும் வளர்க்கின்றன.

டெலிபோன் பேச்சு

வீட்டிலே டெலிபோன் மணி அடித்தது. ஏழு வயசு ஜிம்மி போய், போனை எடுத்துப் பதில் அளித்தான்.

"தம்பி, உன் அம்மாவைக் கூப்பிடு; அவளிடம் பேச வேண்டும்."

"அம்மா வீட்டில் இல்லை. நானும் என் சகோதரியுந்தான் இருக்கிறோம்."

"அப்படியானால், உன் சகோதரியிடம் டெலிபோனைக் கொடு. அவளிடம் பேசுகிறேன்."

"அப்படியா, சரி."

பிறகு, வெகு நேரம் பேச்சு மூச்சில்லை. அப்பால் சிறுவன் ஜிம்மி டெலிபோன் அண்டை வந்தான். டெலிபோன் பேசிய கனவானுக்குப் பதில் அளித்தான்: "நான் என்ன செய்வேன்? அவளை என்னால் அவளுடைய தொட்டிலிலிருந்து தூக்கிவர முடியவில்லையே!"

—ஜேம்ஸ் லோகன்

மனிதன் செய்த தவறுகளையும் திருத்துவது போன்ற புது யந்திரங்கள் பல, பிரிட்டனில் தோன்றியிருக்கின்றன.

ஆச்சரியமான யந்திரங்கள்

ஏ. டபிள்யூ. ஹாஸ்லட்

காமிரா வைத்திருக்கும் எவருக்கும் சில சமயம் ஓர் ஏமாற்றம் ஏற்பட்டிருக்கும். அவர் படம் பிடித்த நெகடிவ் பிலிமை ஏற்ற ஒளியில் காட்டினாலும் சரி, பிலிமின் பின்பக்கம் கறுத்த காகிதம் முதலியவற்றைச் சரியானபடி வைத்துப் பார்த்தாலும் சரி, நெகடிவில் படம் தெளிவாய்த் தெரியும். ஆனால், அதில் பிரிண்ட் எடுக்க மட்டும் வராது. படம் எடுக்கும்போது, அளவுக்கு மிஞ்சிய நேரமோ குறைந்த நேரமோ பிலிமில் ஒளி விழச் செய்வதால் விளையும் குறை இது.

இப்படி ஒரு பிழை நேர்ந்துவிட்டால், இதற்குப் பரிகாரமே இல்லை என்றே சில நாளைக்கு முன்வரைக்கும் நான் நினைத்து வந்தேன். ஆனால், இதற்கு ஒரு பரிகாரம் இருக்கிறது. 'ஃபிஸிக்கல் ஸொஸைட்டி அவ் கிரேட் பிரிட்டன்' என்ற விஞ்ஞானக் கழகத்தின் கண்காட்சி ஒன்றை லண்டனில் சமீபத்தில் நான் சுற்றிப் பார்த்து வரும்போது இந்த விஷயம் புலனாயிற்று. பெரும்பாலும் பலவிதக் கருவிகள் (இன்ஸ்ட்ருமெண்ட்ஸ்) அடங்கிய கண்காட்சி அது. அங்கே இருந்த ஒரு கருவி, இப்படிப் பிழைபட்ட நெகடிவுக்கு மட்டுமல்ல, இன்னொரு வித நெகடிவ் பிழைக்கும் பரிகாரம் செய்யக் கூடியதா யிருந்தது. எந்தப் படத்திலுமே எல்லாப் பகுதிக்கும் ஒரே அளவு நேரம் ஒளிபடச் செய்வது சரியா யிராது. எனவே, சில பகுதிகளில் அளவுக்கு மிஞ்சி ஒளியும் வேறு சில பகுதிகளில் அளவுக்கு மிஞ்சி நிழலும் விழுந்த நெகடிவ்களும் அமைவதுண்டு. அதற்குந்தான் இந்தக் கருவியில் பரிகாரம் பெறலாம்.

இந்தக் கருவி ஓர் 'எலெக்ட்ரானிக்' (மின்சார) பிரிண்டர். இது நெகடிவ்களை அச்சிடும்போது, ஆராய்ந்துகொண்டே போய், அந்த அந்தப் பகுதிக்குத் தேவையான அளவு ஒளி கொடுத்து, சரியான முறையில் ஒளியும் நிழலும் படத்தில் அமையும்படி செய்யும். இப்படி அச்சிடக் கூடிய கருவியில் இரண்டு வகை இருக்கின்றன. சாதாரண முறையில் நெகடிவ்களில் பிரிண்ட் எடுப்பதற்கும் இவற்றைக் கொண்டு பிரிண்ட் எடுப்பதற்கும் அபாரமான வித்தியாசம் இருக்கிறது. இவற்றை வாங்கப் பெருஞ் செலவுதான் ஆகும். ஆயினும், விமானத்தில் இருந்துகொண்டு படம் எடுத்துப் பூமியை ஒருவர் ஸர்வே செய்வதாக வைத்துக்கொள்வோம். நெகடிவ் சரியில்லாமல் போய் மீண்டும் படம் எடுப்பதானால், மீண்டும் விமானப் பிரயாணம் செய்ய நேரும். ஆப்பிரிக்காவில் எங்கேயோ ஒரு மூலைக்குப் போய் எடுத்த படமாக அது இருந்துவிட்டால், மறுபடி விமானப் பிரயாணம் செய்யும் செலவு ஒரு காரின் விலையாகிவிடும். அந்த விலையை இந்தக் கருவிக்கே கொடுத்து விடலாம்.

என் மனத்தைக் கவர்ந்த இந்த 'எலெக்ட்ரானிக்' போலவே தோற்றத்தில் ஒத்திருந்த இன்னும் எண்ணற்ற கருவிகள் அந்தக் கண்காட்சியில் இருந்தன.

காப்பிரைட்: 'மஞ்சரி'க்குப் பிரத்தியேகமாக உதவியவர்: பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் ஸெர்வீஸஸ், கத்தோலிக் ஸெண்டர், அர்மீனியன் ஸ்ட்ரீட், த. பெ. 1614, சென்னை-4.

உதாரணமாக, ஒருவருடைய சுவாசப் பை சரியான நிலையில் இருக்கிறதா என்று டாக்டருக்குத் தெரிவிக்கக் கூடியது ஒரு கருவி. தொழிற்சாலைகளில் உற்பத்திக்கு உதவி செய்யக்கூடியது இன்னொரு கருவி. ஒரு மெஷின் இருக்கிறது. அது 10,000 வரை எண்ணக் கூடியது. காபி கிரீம் கட்டி, மோட்டார்க் கார் பாடி இப்படி எதையும் எண்ணிவிடும். அந்த மெஷினுக்கு எல்லாப் பொருளும் ஒன்றுதான். இப்படி எண்ணிப் பதினாயிரம் ஆனதும், அசல் உற்பத்தி யந்திரத்தையே நிறுத்திவிடும். இது மாத்திரமல்ல; பூர்வாங்கமாய் நடப்பது அவசியமான எந்த வேலையையும் தொடங்கி வைக்கவும் அது உதவும். உதாரணமாக, காபி கிரீம் கலக்கும் வேலையை ஒரு கட்டத்தில் நிறுத்தும். ஏனென்றால், அடுத்தபடி வரும் கட்டிகளை வேறு விதமாய் நிறைக்க வேண்டியது அவசியமாகலாம்.

வேறொரு மெஷின் இருக்கிறது. ஒரு குழாயில் எவ்வளவு உயரம் திரவம் இருக்கிறது, எவ்வளவு ஒளி அதற்குள் புகுகிறது என்ற மாதிரி நிலைகளையெல்லாம் ஆராய்ந்து விடையை எண் கணக்கில் அது தெரிவித்துவிடும். எண்களாக ஏன் தெரிவிக்கிறது என்றால், அதற்குக் காரணம் உண்டு. எண்களைத்தான் மிகச் சுலபமாய்க் கம்பி வழியாய் அனுப்பமுடிகிறது. தொழிற்சாலையின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு எண்களை இப்படி அனுப்பலாம். எண்கள் இப்படிக் கிடைத்ததும், இன்னும் பல வேலை செய்யலாம். ஆட்கள் ஓடி ஆற்றலையும் நேரத்தையும் வீணடிக்காதபடி இந்தக் கருவி சிக்கனம் அளிக்கிறது.

அப்புறம் சற்று மாறுதலான ஒரு கருவி இருக்கிறது. பல நாள் பயிற்சி பெற்ற ஒருவரே செய்யக் கூடிய ஒரு வேலையை, பயிற்சியே இல்லாத ஒரு புது ஆள் செய்யச் சாத்தியமாக்குவது இந்தக் கருவி. மீண்டும் ஒரு கருவி, ஒரு பொருளில் குறிப்பிட்ட ஒரு குணம் மிகவும் கணக்காய் அமையும்படி பார்த்துக்கொள்ளக் கூடியது. உதாரணமாக, பருமன், நிறம் இவற்றை அது சீர் செய்யும்; ரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் சுற்றி வரும் காஸ் (வாயு) ஒன்றின் கலவை (காம்பொஸிஷன்) சரியாயிருக்கும்படி கவனித்துக்கொள்ளும்.

தேசீய நிலக்கரி போர்டின் உதவிக்கென்று பிரத்தியேகமாக ஒரு கருவியைச் செய்து வைத்திருக்கிறார்கள். அசாதாரணமான நிலைமைகளில் இது வேலை செய்கிறது. ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் எங்கேயாவது ஒரு பக்கத்தில் மேற்கூரை இடிந்து விழ, அதற்குள் இருந்த ஆட்கள் சிறைப்பட்டுத் தங்கள் நிலையைப் பிறருக்கு அறிவிக்கச் சுவரைத் தட்டிக்கொண்டிருந்தால், அந்த ஒலியை இது கிரகித்துச் சொல்லிவிடும். நிலக்கரிச் சுரங்கத்தில் மீட்கச் செல்கிறவர்கள் மிகவும் முரட்டு வேலை செய்யவேண்டியிருக்கும். இந்தக் கருவியும் அப்படியே மிகவும் முரட்டு உரம் வாய்ந்ததுதான். காஸ் (வாயு) வெளியேறலாம். அது வெடித்துவிடக் கூடிய அபாயம் உண்டு. எனவே, தீப்பொறியால் சேதம் அடையாது இந்தக் கருவி பத்திரமாயிருக்கும். தவிர, இதன் எந்தப் பகுதி மீதாவது ஒருவர் தடுக்கி விழுந்து எப்படித் தாக்கினாலும் இது கேடுறாது.

பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கம்பெனியார் சமீபத்தில் ஓர் அறிக்கை செய்தார்கள். டெலிவிஷன் படங்களைக் காந்த நாடா (மாக்னட்டிக் டேப்) ஒன்றில் பதிவு செய்யும் முறை ஒன்றைச் சொந்தமாக அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்களாம். பிலிம்களில் பதிவு செய்த படங்களுக்கும் இதற்கும் ஒரே ஒரு வித்தியாசம்: பிலிமை டெவலப் செய்ய வேண்டும்; இதையோ பதிவு செய்தவுடன் அப்படியே உபயோகிக்கலாம்.

மலையாளம் தூக்கலாயிருந்தாலும் தமிழும் கன்னடமும் சேர்ந்த கலவை மொழி பேசும் மக்கள் இவர்கள்:

மந்தாடன் செட்டியார்

பிலோ இருதயநாத்

நீலகிரியில் உள்ள பலவித மக்களில் 'மந்தாடன் செட்டியார்' சமூகமும் ஒன்று. உதகையிலிருந்து மைசூர் போகும் மார்க்கமாகக் கூடலூர் சென்று அங்கிருந்து ஐந்து மைல் மூங்கிற் காட்டில் நடந்தால், இவர்களை நாம் காணலாம். இவர்கள் கூடலூர் அம்சம், சிமதுர அம்சம், செருமுளி அம்சம், படாந் தொரை அம்சம், முதுமலை அம்சம் என்ற ஐந்து ஊர்களிலும் சுமார் ஐந்து மைல் சுற்றளவுக்குப் பரவி வாழ்கிறார்கள். இவர்களுடைய ஜனத் தொகை சுமார் 3,000.



மந்தாடன் செட்டியார்

முக்கியமான தொழில் இவர்களுக்கு வேளாண்மைதான். தானியங்கள், கரும்பு போன்றவற்றைப் பயிர் செய்கிறார்கள். ஏராளமான நிலம் உடைய சிலர், பணக்காரர்கள்; கல்லும் ஓடும் கொண்டு கட்டிய வீடுகளில் அவர்கள் வாழ்கிறார்கள். மற்ற ஏழைகளெல்லாம் குடிசையில் வாழ்கிறார்கள். இவர்களில் சிலர் எல்லாப் பணியிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். வீட்டிலுள்ள பெண்கள் நாற்று நடுவது, கோழி வளர்ப்பது, வீட்டுத் தோட்டத்தில் பயிர் செய்வது போன்ற வேலைகளைச் செய்கிறார்கள். இவர்களின் வீடுகளில் மண் பாண்டங்களும், வெண்கலப் பாத்திரங்களும், ஏதாவது பொருள்களை வைப்பதற்கு மூங்கிற் குழாய்களும் உபயோகப்படுத்துகிறார்கள்.

ஆண்கள் நல்ல சிவப்பாகவும் அழகாகவும் நல்ல உயரமாகவும் உடல் கட்டுடனும் இருக்கிறார்கள். அவர்களுடைய குல வழக்கப்படி, மேலே ஒரு துண்டும் வேஷ்டியும் அணிகிறார்கள். இன்று ஷர்ட் முதலியவையும் தரிக்கிறார்கள்.

பெண்கள் அந்நியரின் எதிரில் வருவதற்கு வெட்கப்படுகிறார்கள். நல்ல உயரமும் அழகும் மலர்ந்த முகமும் உடையவர்கள். மலையாளப் பெண்களைப்போல் கொண்டையும், காதிலும் மூக்கிலும் கழுத்திலும் கையிலும் நகைகளும் இருக்கின்றன. சாதாரணமாக முழங்கால் வரையில் ஒரே வெள்ளைத் துண்டைத்தான் வேஷ்டி கட்டுவது போலக் கட்டிக்கொள்கிறார்கள். வெளியில் சென்றால் மட்டும், தோளின்மேல் சிறிய துண்டைப் போர்வையாகப் போர்த்துக் கொள்கிறார்கள். ஆனால், இந்த நாளில் சிலர் புடைவையும் ஜாக்கெட்டும் அணிந்துகொள்ளுகிறார்கள். திருமணத்திலும் நல்ல நாட்களிலும் தங்கள் குலத்தின் உடையில் தான் இருக்கிறார்கள். கொண்டையில் சாதாரணமாகப் பூ வைப்பதில்லை.

பெண்கள் ருதுவான பின்னும் முன்னும் திருமணம் செய்துகொள்ளும் பழக்கம் உண்டு. திருமணத்துக்குப் பெண்கள் வேண்டியதாக இருந்

காப்பிரைட்: ஹிந்து (ஆங்கிலம்: 11-5-'58) சென்னை-2.

தால் மத்தியஸ்தர்களின் மூலம் பெண் வீட்டாரிடம் சொல்லி, பையனுக்கும் பெண்ணுக்கும் ஜாதகம் பொருத்தமாக இருக்கிறதா என்று பார்த்து, பிறகு ஒரு நல்ல முகூர்த்த நாளைக் குறிப்பார்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் தனிப்பட்ட குறித்த வயசில்லை. திருமணத்துக்கு முன், பையனும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பார்ப்பதில்லை. பெண் வீட்டாருக்குப் பிள்ளை வீட்டார் ஒரு குறிப்பிட்ட அளவு அரிசியைக் கொடுக்க வேண்டும். பிள்ளை வீட்டாரே மணச் செலவையும் செய்கிறார்கள்.

பலதார மணம் செய்துகொள்வதற்குத் தடையில்லை. பிராம்மணப் புரோகிதர்-பெரும்பாலும் கோயில் குருக்களே-மணச்சடங்கை நடத்தி வைப்பார். விவாகம் இந்து முறையிலே நடக்கும். மாலை மாற்றுவது, தாலி கட்டுவது எல்லாம் உண்டு.

விதவைகள் பிரியப்பட்டால் மறுமணம் செய்துகொள்ளலாம். விதவைகளின் மணத்துக்கு ஐயர் வருவதில்லை. ஆனால், பஞ்சாயத்து மூலம், பையன் தாலி கட்டுவதுண்டு. ஆனால் முதல் திருமணத்தைப்போல் விதவா விவாகத்துக்கு மாலை மாற்றுவதில்லை. விதவைக்கு மறுமணமானால் அவளுடைய குழந்தைகள், தாயுடன் போகாமல், தகப்பன்



மந்தாடன் செட்டியார்ப் பெண்கள்

வழி உறவினர்களின் சம்ரக்ஷணையில் இருப்பார்கள்.

தம்பதிகள் சண்டையிட்டால், விவாக விலக்குக் கோரலாம். பஞ்சாயத்துச் செய்து, கூடுமான வரையில் சமாதானப்படுத்தி விடுவார்கள். அப்படிச் சமாதானத்துக்கு உட்படாவிட்டால், பெண்களைக் கொஞ்ச நாள் தாயகம் அனுப்புவார்கள். பிறகும் தம்பதிகள் ஒத்து வராவிட்டால், பஞ்சாயத்து மூலம் விலக்கிவிடுவார்கள். விவாக விலக்குச் செய்துகொண்ட ஆணோ பெண்ணோ மறுமணம் செய்துகொள்ளலாம்.

விபத்திலும் கொள்ளை நோயிலும் இறந்தவர்களைப் புதைப்பதும், சற்று வயசானவர்களாகவும், விசேஷமானவர்களாகவும் இருந்தால் சுடுவதும் உண்டு.

இவர்கள் தானியங்களைத் தவிர இறைச்சி, மீன் வகைகள் பறவை ஆகியவற்றையும் சாப்பிடுகிறார்கள். அமாவாசை, கிரகணம் போன்ற நாட்களில் சைவ உணவைத்தான் சாப்பிடுகிறார்கள்.

இவர்களுக்குள் பஞ்சாயத்துத் தலைவரை 'நாட்டுக் காராமிகாரர்' என்று அழைக்கிறார்கள். தலைவரை இவர்கள் தேர்ந்தெடுப்பதில்லை. தலைமுறை தலைமுறையாக ஒரு குடும்பத்தில் இருப்பவர்கள், அந்த ஸ்தானத்துக்கு வருகிறார்கள்.



பெரியவர்களை வணங்குதல்

குற்றம் செய்தவர்களுக்குச் சிறிய தொகையைப் பஞ்சாயத்தார் அபராதம் விதிப்பது உண்டு. இவர்களின் பூசாரிக்கு 'மருள்' வந்து இவர்களுக்கு வரும் கஷ்டங்களையும் இன்பங்களையும் கூறுவாராம்.

இவர்கள் வெவ்வேறு ஊரில் பரவி வாழ்வதால், ஒவ்வோர் ஊரிலும் பல தெய்வங்களை வணங்குகிறார்கள்: 1. கம்பால் கோட்டையில் 'வேட்டைக் கருமனும்', 2. கலிங்கரையில் சிவன் கோவிலும், 3. ஸ்ரீமதுரை அம்பலத்தில் விஷ்ணு கோவிலும், 4. மங்கூளியில் பகவதியின் கோவிலும், 5. சுளிக்குன்றில் உதிராளம் பரதேவதையின் கோவிலும், 6. மண்டாக்கரையில் பொம்மதேவர் கோவிலும் இருக்கின்றன.

ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் இந்த ஆறு கோவில்களிலும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பேய், பிசாசு, மந்திரம், தந்திரம் முதலியவற்றில் இவர்களுக்கு நம்பிக்கை உண்டு.

இவர்கள் பேசும் பாஷைக்கு இலக்கியமும் இலக்கணமும் இல்லை. அதை 'மந்தாடன் பாஷை' என்று சொல்லுகிறார்கள். தமிழ், மலையாளம், கன்னடம் இந்த ஐந்தும் சேர்ந்த ஒரு கலவையாக இருக்கிறது அந்தப் பாஷை. முக்கியமாக மலையாளந்தான் அதில் சற்றுத் தூக்கலாக இருக்கிறது. மந்தாடன் பாஷைக்கு எழுத்து இல்லை. தமிழ், மலையாளம், கன்னடம் இந்த எழுத்துக்களை எழுதவும் படிக்கவும் இவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

இவர்களின் தோற்றத்தையும் உடையையும் வாழ்க்கை முறைகளையும் கவனித்தால் இவர்கள் பல்லாண்டுகளுக்கு முன் மலபாரிலிருந்து வந்திருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இந்தச் சிறுசமூகத்தினர், சுற்றும் சேறு சூழ்ந்த தனிப்பிரதேசத்திலே வாழ்கிறார்கள். நல்ல புத்திசாலித்தனம் வாய்ந்த இந்த மக்கள் முன்னேற ரஸ்தாக்கள், தபால், தந்தி, கிணறு, ஆஸ்பத்திரி முதலிய வசதிகள் அவசியமாகும்.

மாக்மில்லன் தீர்ப்பு

ஹெரால்டு மாக்மில்லன் ஒரு சமயம் அல்ஜீரியாவில் பிரிட்டிஷ் ஸ்தானிகராக இருந்தார். அப்போது இரண்டாவது உலக யுத்தம் நடந்துகொண் டிருந்தது. பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளுக்கும் அமெரிக்க ராணுவ அதிகாரிகளுக்கும் ஒரு தகராறு வந்தது. உணவுக்கு முன்னே மது வேண்டும் என்று அமெரிக்கர் சொன்னார்கள். உணவுக்குப் பின்னேதான் மது வேண்டும் என்று பிரிட்டிஷ்காரர் சொன்னார்கள். மாக்மில்லன் இதற்குப் பரிகாரம் சொன்னார்.

''இனிமேல் நாம் எல்லாரும் அமெரிக்கரை மதித்து உணவுக்கு முன்னே மது அருந்துவோம்; பிறகு பிரிட்டிஷாரை மதித்து உணவுக்குப் பின்னே மது அருந்துவோம்.''

—'நியூஸ் வீக்'

குருவும் சிஷ்யனும்

உள்ளத்தினுள்ளே அருள் உணர்வை யார் ஊட்டவல்லவரோ அவரே குரு ஆகத் தகுதி உடையவர்; எந்தச் சாதகனுடைய உள்ளத்தில் அந்த அருள் உணர்வை அவர் ஊக்கிவிடுகிறாரோ, அவனுக்குச் சிஷ்யன் என்று பெயர்.

—ஸ்வாமி விவேகானந்தர்

'ஆப்பைப் பிடுங்கிய குரங்கின் கதி' பற்றிய கதை எல்லாருக்கும் தெரியும்; இருந்தாலும், இப்படிச் சிக்கித் தொல்லைப்படாதவர் அபூர்வம்.

பிறர் காரியம்

மாலதி சந்தூர்

பெண்களுக்கு ஆடை அணிகளில் மோகம் அதிகம் என்பது தர்க்கத்துக்கு இடம் இல்லாத விஷயம். இந்த மோகம் ஓர் அளவில் இருந்தால் பரவாயில்லை. சிலர் விஷயத்தில் இந்த மோகம் விபரீதமாகப் போய்விடுகிறது. சென்னை போன்ற நகரங்களிலிருந்தும் இன்னும் தூர தேசங்களிலிருந்தும் தருவித்துக்கொண்ட நகை, புடைவைகளை உயிருக்குச் சமமாகப் பாவிப்பதோடு நிற்காமல், அந்தப் பொருள் தம் கைக்குக் கிடைக்கும் வரையில் சாப்பாடும் தூக்கமுங் கூட இல்லாமல் தவிப்பார்கள்.

பல பெண்கள் தம் ஊரில் கிடைக்கும் நகை, புடைவையோடு திருப்தி அடைய மாட்டார்கள். 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்பது போல் வெகு தூரத்திலிருந்து தருவித்தவையே இவர்களுக்கு உயர்வாகத் தோன்றும். அவை மட்டமாக இருந்தாலும் அழகாகவும் உயர்வாகவும் தோன்றும். பம்பாயிலிருந்தோ சென்னையிலிருந்தோ வாங்கிவந்த புடைவை மாதிரி அதே தரத்தில் அதே நிறத்தில் ஒரு ரூபாய் விலை குறைவாக உள்ளூரில் கிடைத்தாலும் அதை ஒதுக்கிவிட்டு நகரத்துப் புடைவையைப் பார்த்து மகிழ்ந்து போவார்கள்.

புடைவை, நகைகள் மட்டுந்தானா? ரிப்பன், வளை, டவல், குங்குமம், குச்சு, கழுத்தில் அணியும் நாகரிக மணிகள், கைப் பை, செருப்பு, கைக்குட்டை, கறிகாய், பழம் முதலிய எல்லாவற்றையுமே சிலர் பெரிய நகரங்களிலிருந்து வாங்க விரும்புகிறார்கள். இப்படித் தருவித்துக் கொள்வது, வீட்டில் உட்கார்ந்திருப்பவர்களுக்குச் சந்தோஷமாகத்தான் இருக்கும்; அலைந்து திரிந்து வாங்கி வருகிறவர்களுக்குப் பிராண சங்கடமாக முடியும்.

வீட்டு மனிதர்களோ, அக்கம் பக்கத்து வீட்டாரோ, ஏன், தெருக்கோடி வீட்டு மனிதர்களானாலும் சரி; பட்டணம் போகிறார்கள் என்றால், தங்கள் வீட்டுக்கென்று ஒரு சாமான் லிஸ்டையே தயாரித்து விடுவார்கள் சிலர். சீப்பு, கண்ணாடியிலிருந்து பழம், காய்கள், நகை, புடைவைகள் உட்பட அவர் வாங்கிவர வேண்டியிருக்கும். அவர் பட்டணத்தில் தங்கப் போவது ஒருநாள். அவருடைய தெருவில் வசிக்கும் அக்கம் பக்கத்து அம்மாள் எவளோ கொடுத்த ஜாபிதாவில் கண்ட பொருள்களை வாங்கவே அவருக்கு மூன்று நாட்கள் அவகாசம் வேண்டியிருக்கும்.

ஏதோ, தம் ஊரில் கிடைக்காத பொருள்களையும் அபூர்வமான பொருள்களையும் வாங்கிவரச் சொல்வது சகஜம். மாதாந்தர சாமான்களையே பட்டணத்திலிருந்து வாங்கிவரப் பிறரை ஏவும் மனிதர்களை என்ன சொல்வது? வாங்கிவர ஒப்புக்கொள்ளும் துரதிருஷ்டம் பிடித்த மனிதர்களுக்கு வரப்போகும் கஷ்ட நஷ்டங்களைப் பற்றி இவர்களுக்கு ஏன் தெரியப் போகிறது?

நாம் கடைக்குப் போனோமானால், நூறு புடைவைகளுள் ஒன்றைப் பொறுக்குவோம். வீட்டுக்கு வந்த பின் அது அழுது வழிவதுபோல் நமக்கே தோன்றும். அப்படி இருக்கும்போது புடைவை நாணயம் தெரியாத அப்பாவி மனிதர்களைப் பட்டணத்திலிருந்து

மூலம்: ஆந்திர பத்திரிகா (தெலுங்கு: 1-7-'58), சென்னை.

புடைவை வாங்கிவரச் சொல்லுவது நியாயமா? அவர்கள் வாங்கி வந்தது நூற்றுக்குத் தொண்ணூற்ருென்பது பங்கு நமக்குப் பிடிக்காது. அப்படியே மனசுக்குப் புடைவை பிடித்தாலும் விலை விஷயத்தில் ஆயிரத்தெட்டுத் தொல்லைகள் தலைதூக்கும்.

நாம் ஏதோ வேலையாக நகரங்களுக்குப் போனுல் நம் வீட்டார், பக்கத்துப் பகுதியில் இருப்பவர்கள், அக்கம் பக்கத்து வீட்டார் எல்லாருமாகத் தலைக்கொரு லிஸ்டை நம் தலையில் சுமத்தினுல் நமக்கு எரிச்சலாகத்தானே வருகிறது?

சென்னையை எடுத்துக் கொள்வோம். இங்கே இரும்புச் சாமான்கள் கடை ஒருபுறம். நல்ல சேலைகள் கிடைக்கும் சைனுபஜார் மற்ருெரு கோடியில் இருக்கிறது. பொம்மைகள் மூர் மார்க்கெட்டில் நன்ருக இருக்கும். வளை, ரிப்பன்கள் போன்றவை 'லஸ்'ஸில் நல்லவையாகக் கிடைக்கும். பூக்கள் பூக்கடையிலும், பழங்கள் பழ மார்க்கெட்டிலும் கிடைக்கும். இவற்றையெல்லாம் ஒரே இடத்தில் பரப்பி வைத்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.

பட்டணம் போகிருேமென்ருல், ஒருத்தருக்குப் பட்டுப் புடைவை வேண்டும்; ஒருத்திக்கு நெக்லேஸ் வேண்டும்; வீட்டில் இருக்கும் அத்தை தேங்குழல் அச்சு வேண்டும் என்பாள்; அம்மா பூந்தி தேய்க்கும் தட்டுக் கேட்பாள்; மூன்ரும் வீட்டு அம்மாள் ஒரு சிறிய பாயும் காலைத் துடைக்க வாசற்படியில் கிடக்கும் மிதியடியும் வேண்டும் என்பாள்; தங்கை பூக் கேட்பாள். பாட்டிக்குத் திராட்சையும் மாதுளம் பழமும் வேண்டும். பக்கத்து வீட்டு அம்மாள் தன் பேரனுக்கு ஆடும் குதிரை வேண்டும் என்பாள். கொல்லைப் பக்கம் குடியிருக்கும் மனேரமா மின்சார இஸ்திரிப் பெட்டி வேண்டும் என்பாள்.

சிலர் முன்னதாகப் பணம் கொடுத்துவிடுவார்கள். சிலர் பொருளை வாங்கி வந்தபின் கொடுப்பதாகச் சொல்லுவார்கள். முதலில் பணம் கொடுத்துவிட்டால் வம்பு இல்லை. அப்புறம் கொடுப்பவர்கள் விவகாரம் மிகத் தொல்லை கொடுப்பது. ஊருக்குப் போகிறவர்களிடத்தில் பணம் இருக்குமா, அவர்களுக்கு வேண்டியதை வாங்கப் போதுமா என்பவற்றை மற்றவர்கள் யோசிக்கவே மாட்டார்கள். தமக்கு வேண்டியதைச் சொல்வார்கள். வாங்கி வராவிட்டால் கோபம் வந்துவிடும். ''பணத்தைக் கொடுக்காமல் ஓடியா போய்விடுவோம்? இது கூட வாங்கி வருவது கஷ்டமா?'' என்று குற்றங் கூறுவார்கள். போனுல் போகிறதென்று கையை விட்டுப் பணத்தைக் கொடுத்து வாங்கி வந்தால், அது அவர்களுக்குப் பிடிக்காது. விலை கொடுத்து வாங்கிய சனியனை அப்புறம் நாமே வைத்துக்கொள்ள வேண்டும்.

பத்து இருபது ரூபாய் மதிப்புக்கு உட்பட்ட பொருள்கள் வாங்கி வர ஏற்றுக்கொண்டாலும் பரவாயில்லை. அதற்குமேல் மதிப்புப் பெறும் நகை, புடைவைகளைப் பிறருக்காக வாங்குவது மிகப் புத்தி ஈனமான வேலை. புடைவை, நகை விஷயங்களில் எவ்வளவோ தொல்லையையும் பழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

ஐந்து வருஷங்களுக்குமுன் எனக்கு அது போன்ற அநுபவம் ஏற்பட்டது. அதிலிருந்து எனக்குப் புத்தி வந்தது. யாராவது மதராஸிலிருந்து ஏதாவது வாங்கி வா என்ருல், அவர்கள் இருக்கும் திக்கு நோக்கித் தண்டம் சமர்ப்பித்து விடக் கற்றுக்கொண்டு விட்டேன்.

என் பிறந்த வீட்டில் குடியிருந்த ஓர் அம்மாள் நூறு ரூபாய் விலையில் காஞ்சீபுரம் புடைவை ஒன்று வேண்டுமென்று என் தாயிடம் பணம் கொடுத்து அனுப்பியிருந்தாள். என் தாய் பண்டிகைக்காக இங்கே வரும்போது பணத்தைக் கொண்டுவந்தாள். வந்தது முதல் நாங்கள் இந்த ஊரில் தெருத் தெருவாக அலைந்தோம். புடைவை இன்ன நிறம் இருக்க வேண்டும், பார்டர் சரிகை இத்தனை அங்குலந்தான் இருக்க வேண்டும், நெசவு இப்

படித்தான் இருக்கவேண்டும் என்றெல்லாம் அந்த அம்மாள் காகிதத்தில் குறித்து அனுப்பியிருந்தாள். சீட்டையும் பணத்தையும் எடுத்துக்கொண்டு சென்னையில் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரை-மாம்பலம், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, ஜார்ஜ் டவுன்-எல்லாம் சுற்றினோம். கடைசியில் அந்த மாதிரி புடைவை அகப்பட்டது. அதை அவர்களுக்குப் பில்லுடன் அனுப்பினோம். அப்புறம் நாலாம் நாள் பார்சலில் புடைவை திரும்பி வந்தது; கடிதமும் இருந்தது. நாங்கள் அனுப்பியது ஆறு கஜம் புடைவை; அந்த அம்மாளுக்கு ஏழு கஜந்தான் வேண்டுமாம். 'இதென்ன கிரகசாரம்' என்று நொந்துகொண்டு புடைவையுடன் கடைக்குப் போனோம். கடையில் 'புடைவையைத் திருப்பி எடுத்துக்கொள்ளத் தடையில்லை' என்றும், ஆனால், 'பணத்தைத் திருப்பிக் கொடுப்பதில்லை. வேறு புடைவை வாங்கிக்கொள்ள வேண்டும்' என்றும் சொல்லிவிட்டார்கள். பேசாமல் முகத்தில் விளக்கெண்ணெய் வழிய வீட்டுக்கு வந்துவிட்டோம். புடைவை வாங்கச் சொன்னவர்களுக்கும் கடைக்காரருக்கும் ஒன்றும் நஷ்டம் இல்லை; நடுவில் எங்களுக்குத்தான் நஷ்டம். அந்தப் புடைவையை நாங்களே எடுத்துக்கொண்டோம். அதைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு அழுகை அழுகையாக வரும்.

போன வருஷம் ஏற்பட்ட அநுபவம் ஒன்றையும் சொல்லி விடுகிறேன். தெரிந்தவர்களுக்காக ஒரு வைர பேசரி வாங்கவேண்டி வந்தது. என் தம்பியிடம் பணம் கொடுத்தனுப்பி யிருந்தார்கள். எங்களுக்கு வைர நோட்டம் தெரியாது. தெரிந்த சிலரின் யோசனை கேட்டு ஒரு பெரிய கம்பெனியில் வாங்கினோம். பேசரி அவர்களுக்குப் பிடித்துவிட்டது. எல்லாம் சுபமாகத்தான் முடிந்தது. ஒரு வருஷத்துக்குப்பின், சமீபத்தில் அந்த அம்மாள் பேசரியைத் திருப்பி அனுப்பிவிட்டாள். வைரம் அவர்களுக்கு ராசி இல்லையாம்; இதை வாங்கிய வேளை, அவர்களுடைய 'பிஸினெஸ்'ஸில் நஷ்டம் வந்துவிட்டதாம். அதனால் அந்த அம்மாளின் கணவர் அதை ஷாப்பில் கொடுத்துவிட்டு வேறு பொன் நகை ஒன்றை வாங்கிக்கொள்ளச் சொல்லிவிட்டாராம்!

ஷாப்பில் முதலில் எங்களுக்கு ராஜோபசாரம் செய்தவர்கள் விஷயம் தெரிந்ததும் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். ஒன்றரை மணி நேரம் பேசரியைப் பரீட்சித்தபின், 'வைரம் வாங்கியபோது பெற்ற விலையில் முக்கால் பங்குதான் பணம் திருப்பிக் கொடுப்போம்' என்றார்கள். எனக்கு ஒரு கணம் மூச்சே நின்றுவிட்டது. பேசாமல் வீட்டுக்குத் திரும்பினோம். விஷயத்தை அவர்களுக்கு எழுதினோம். நல்ல வேளையாக அவர்கள் பேசரியைத் திருப்பி அனுப்பிவிடச் சொல்லிக் கேட்டிருந்தார்கள். எங்களுடைய நல்ல காலந்தான் அது! அவர்களுக்குத் திரும்பவும் பிஸினெஸ் லாபகரமாகத் தொடங்கிவிட்டதாம். பேசரியை விற்கவேண்டாம் என்று தோன்றிவிட்டது.

இதற்கப்புறம் பிறர் வியாபாரத்தில் பொறுப்பு ஏற்றுக்கொள்ள எனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது!

காரும் விமானமும்

'கார் விலைக்கு ஆகாய விமானம் வந்துவிடப் போகிறது; அப்போது, ஒவ்வொரு தனி மனிதனும் சொந்தத்தில் விமானம் வைத்துக்கொள்ளலாம்' என்று சொல்லி வந்தார்கள். ஆனால், இப்போது விமான விலைக்குக் கார் விலையை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள்!

—எச். பி. ஃபாக்ஸ்

ஆரோக்கிய உணவு

★

நோய் வந்தால், டாக்டர்கள் இந்த நாளில் கொடுக்கும் மருந்துகள் ஒன்றிரண்டோதான்; பலவித வைட்டமின் சத்துக்களையும், இவை அடங்கிய திரவங்களையும் மாத்திரைகளையுமே அதிகமாக விதிக்கிறார்கள். ஏனென்றால், முக்கால்வாசி நோய்கள் இந்தப் போஷாக்குச் சத்துக் குறைகளால்தான் தோன்றுகின்றன. எனவே, இவற்றைத் தயாரிப்பதில் விசேஷக் கவனம் செலுத்தி வருகின்றன உலகப் பிரசித்தி பெற்ற ஸ்தாபனங்கள்.

இன்று உலகத்திலே மிகப் பெரிய பிரச்னையாயிருப்பது உணவுதான். உலக ஜனத்தொகை வரவர அதிகரித்துக் கொண்டே வந்து, இப்போது இருநூறு கோடியைத் தாண்டி விட்டது. இத்தனை மக்களுக்கும் எப்படி உணவளிப்பது என்பது தான் கேள்வி. இதில் இரண்டு அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 2,000 காலரி (உஷ்ண சக்தி) தரும் உணவளிக்க வேண்டும் - இது ஓர் அம்சம். ஒவ்வொருவருக்கும் போதிய போஷாக்குச் சத்துக்கள் (நுட்ரியண்ட்ஸ்) அளிக்க வேண்டும்-இது இன்னோர் அம்சம். இரண்டும் ஒரே விஷயமாகத் தோன்றலாம். ஆனால், இவை முற்றும் வெவ்வேறான பிரச்னைகள்.

சென்ற அரை நூற்றாண்டில் விஞ்ஞானிகள் தொடர்ந்து சோதனை புரிந்து உணவு விஷயத்தில் பல ஆச்சரியமான உண்மைகளைக் கண்டு பிடித்தார்கள். முக்கியமாக, வைட்டமின்கள் தொடங்கிப் புரொட்டீன்கள் வரையில் மிகத் திட்டமான பல பொருள்கள் மனிதர் உணவிலே இன்ன இன்ன அளவில் அவசியம் என்று விவரமான ஒரு ஜாபிதாவையே அவர்கள் தயாரித்துவிட்டார்கள்.

ஹாப்கின்ஸ், விண்ட் என்ற ஆங்கிலேயர்கள், பெகல் ஹேரிஸ், ஐஜிக்மான் என்ற டச்சுக்காரர்கள், ஃபங்க் என்ற போலந்துக்காரர் இவர்களெல்லாம் கண்டு பிடித்த விஷயங்கள் உணவு ஆராய்ச்சியில் மகத்தான புதிய சகாப்தம் ஒன்றையே தோற்றுவித்துவிட்டன. இந்த நூற்றாண்டின் முதல் பத்து வருஷகாலத்தில் இவர்கள் ஒரு விஷயத்தை நிரூபித்துக் காட்டினார்கள். அந்த நாளில் தயாரான செயற்கை உணவுகளில் மிகச் சிறந்த வகைகளை ஊட்டிக்கூட, சோதனைக் கூடப் பிராணிகளை நல்ல ஆரோக்கிய நிலையில் வைத்திருக்க முடியவில்லை என்று ருசுப்பித்தார்கள். அந்தப் பிராணிகளுக்கு இன்னும் சில பொருள்கள் - உதாரணமாகப் பாலில் உள்ளவை - தேவைப்பட்டன.

ஐக்கிய அமெரிக்காவில் மேலும் ஆராய்ச்சி நடத்தியதில், 'உதவி (அக்ஸெஸரி) உணவுச் சத்துக்கள்' சில தேவை என்று புலப்பட்டது. அவற்றுக்குத்தான் இன்று வைட்டமின் என்ற பெயர் வழங்குகிறது. இந்த வைட்டமின் சத்துக்கள் மிகச் சிறு அளவில்தான் தேவைப்

உதவியவர்: ஈஸ்டர்ன் ஸைக்கோகிராஃப் பிரைவேட் லிமிடெட், 139, அப்போலோ ஸ்ட்ரீட், பம்பாய்-1.

படுகின்றன. ஆனால், மனித தேகம் என்ற யந்திரம் சரிவர வேலை செய்ய, இவை முற்றும் இன்றியமையாத பொருள்களாயிருக்கின்றன.

சிறு எண்ணிக்கையில் ஆரம்பித்த இந்த வைட்டமின்களின் ஜாபிதா இப்போது மிக நீண்டு விட்டது. கண் பார்வை (அதுவும் இருட்டில்) சரியாயிருக்க வைட்டமின் - ஏ தேவை. பெரிபெரி, பெல்லக்ரா போன்ற சோகை நோய்கள் வராது தடுக்கப் பல பி - வைட்டமின்கள் அவசியம். வியாதி தொற்றுமல் எதிர்க்கவும், 'ஸ்கர்வி' என்ற படை வராமல் தடுக்கவும் வைட்டமின் - ஸி உதவுகிறது. கப்பலில் நீண்ட பிரயாணம் செய்து, உப்புப் புலாலையும் கடினமான கடல் ரொட்டியையும் தின்னும் மாலுமிகளுக்கு இந்தப் படை வந்துவிடுகிறது. எலும்பு சரியாய் உருவாக டி - வைட்டமின் வேண்டும். இந்த வைட்டமின் குறைவதாலேயே குழந்தைகளுக்கு 'ரிக்கெட்ஸ்' என்ற எலும்புருக்கி நோய் வருகிறது.

சமீபத்தில் இரண்டு வைட்டமின்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்: ஒன்று, ஃபாலிக் ஆஸிட்; மற்றது, வைட்டமின் - பி-12. முந்தியதை அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் சோதனைக் கூடத்தில் ரசாயனப் பொருள்களைக் கூட்டித் தயாரித்தார்கள். உலகத்திலே மிக முதன்மையாக ரசாயன ஆராய்ச்சி புரிந்து மருந்து தயாரிக்கும் கம்பெனியார் அவர்கள். மருந்து தயாரிப்பதில் சிறந்த அமெரிக்கக் கம்பெனியாரும் ஆங்கிலக் கம்பெனியாரும் தனித்தனியே ஆராய்ச்சி நடத்தி, பி - 12 வைட்டமினைப் பிரித்து எடுத்தார்கள். குழந்தைகள் சகஜமாக வளரவும் சிவப்பு ரத்த அணுக்கள் முதிர்ச்சி அடையவும் இந்த இரண்டு பொருள்களும் அவசியம்.

அநேக விதமான உணவுகளில் வைட்டமின்கள் இருக்கின்றன. ஆனால், எல்லா உணவுகளிலும் எல்லா வைட்டமின்களும் இருப்பதில்லை. தவிர, உணவைப் பாதுகாத்து வைப்பது, சமைப்பது இந்தக் காரியங்கள் பல சமயம் வைட்டமின்களை அழித்து விடுகின்றன. எனவே, ஏராளமான பலவித உணவுகளையும் புத்தம் புதிய உணவுகளையும் ஒருவர் உண்டாலன்றி, போதிய அளவு வைட்டமின்கள் உடம்பில் சேர்வது கஷ்டமாகிறது.

பல நாடுகளில் இந்தப் பிரச்னையை இரண்டு வழிகளில் சமாளிக்கிறார்கள். ரொட்டி, அரிசி, மற்றும் இந்த மாதிரி முக்கிய உணவுகள் இவற்றில் மிகவும் ஜீவாதாரமான வைட்டமின்களையும் ரத்த அமைப்புக்குத் தேவையான இரும்புச் சத்தையும் கலந்து இவற்றை வலுப்படுத்துகிறார்கள். இது முதல் வழி. வைட்டமின்களையும் வைட்டமினோடு உலோகச் சத்துக்களையும் கலந்த 'காப்ஸூல்' (மாத்திரை) உருவில் உபரியாக உண்பது இரண்டாவது வழி. போஷாக்குக் குறையால் உண்டாகும் கோளாறுகளையும் தொற்றக் கூடிய நோய்களையும் குணப்படுத்துவதில் இந்த இரண்டாவது வழி சிறப்பாய் உதவுகிறது. நிமோனியா, இன்ஃப்ளுயன்ஸா இவையும் இவை போன்ற வேறு சில தொற்று நோய்களும் தேகத்திலுள்ள வைட்டமின்களை, முக்கியமாய் ஸி — வைட்டமினைக் குறைத்து விடுகின்றன என்ற விஷயம் சமீப ஆராய்ச்சியிலிருந்து புலப்பட்டிருக்கிறது.

கர்ப்பந் தரித்திருக்கும் பெண்களும் உபரியாக வைட்டமின்களை உண்ண வேண்டும் என்று டாக்டர்கள் விதிக்கிறார்கள். ஏனென்றால், கர்ப்பகாலத்தில் வைட்டமின்களின் தேவை அதிகப்படுகிறது. தாயின் உடல் ஆரோக்கியத்தைக் காக்கவும், குழந்தை சரியாக வளரவும் வைட்டமின்கள் அவசியமாகின்றன.

அமெரிக்க ஸயானமிட் கம்பெனியில் மருந்து தயாரிக்கும் பகுதியாக இருப்பது லெடெர்லி லாபரட்டரீஸ் என்ற சோதனைக் கூடம். வைட்டமின், போஷாக்கான உணவு இரண்டும்பற்றிய

ஆராய்ச்சியில் இந்தச் சோதனைக் கூடம் விசேஷமான பணி புரிந்திருக்கிறது. அதுமட்டும் அல்ல; ஐக்கிய அமெரிக்காவிலேயே வைட்டமின் உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் ஸ்தாபனங்களில் ஒன்றாகவும் இது விளங்குகிறது. பல வைட்டமின்களைக் கொண்டவை - மாக்னு, பி வைட்டமினும் ஸி - வைட்டமினும் சேர்ந்த ஃபால், பெஸின் இரண்டும் அதன் விசேஷத் தயாரிப்புகள். இந்த இரண்டையும் பொதுவாக எல்லாரும் உபயோகிக்கும்படி டாக்டர்கள் விதிக்கிறார்கள். கர்ப்பஸ்திரீகளுக்கென்றே பிரத்தியேகமாய் அந்தச் சோதனைக்கூடம் செய்துள்ள ப்ரீ - நேட்டால் என்ற வைட்டமின் தயாரிப்பையும், சோகை (அனீமியா) பிடித்தவர்களுக்கு விசேஷமாய்ச் சிகிச்சை செய்வதற்கான ஃபாலிக் ஆஸிட், பி-12 வைட்டமின் இரண்டும் சேர்த்த லெடர்நீமியா என்ற அதன் மற்றொரு தயாரிப்பையும் டாக்டர்கள் உபயோகிக்கிறார்கள். அவையும் பிரசித்தமானவைதான்.

போஷாக்குச் சத்துப்பற்றிச் சமீப வருஷங்களில் செய்துள்ள ஆராய்ச்சியில் மற்றொரு பிரிவு புரொட்டீன் உணவு பற்றியது. உலகில் பெரும் பகுதியிலும் மக்கள் உட்கொள்ளும் கோதுமை, அரிசி போன்ற தானியங்களில் 'ஸ்டார்ச்' என்ற மாவுச் சத்து மிதமிஞ்சி இருக்கிறது; புரொட்டீனோ குறைவாயிருக்கிறது. நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்தால், உடம்பிலுள்ள புரொட்டீன் மிகவும் அபாயமான அளவு குறைந்து போகிறது. இப்படிப் புரொட்டீன் குறைந்து போனால், புரொட்டீன் சத்துக் குவிந்த லெடினைப் போன்ற நவீன ஆராய்ச்சித் தயாரிப்புகளைக் கொண்டு அதற்குச் சிகிச்சை செய்யும் பழக்கமும் வர வர அதிகமாகிவருகிறது.

கிளிப் பேச்சு

பறவைகள் விற்கும் ஒரு வியாபாரி, ஒரு கிளியை மிதமிஞ்சிய விலைக்கு ஓர் ஆளிடம் விற்றார். அப்போது, ''விலை அதிகம் என்று எண்ணாதீர்கள். நீங்கள் எதைப் போதித்தாலும் அதை இந்தக் கிளி ஒரே வாரத்தில் கற்றுக்கொள்ளும் என்று நான் உத்தரவாதம் அளிக்கிறேன். அப்படி இது கற்றுக் கொள்ளாவிட்டால், திருப்பி என்னிடம் கொண்டு வாருங்கள்; பணத்தை வாபஸ் செய்துவிடுகிறேன்'' என்றார்.

கிளியை வாங்கிய ஆசாமி ஒரு வாரங் கழித்து வெகு கோபத்தோடு திரும்பி வந்தான்.

''கிளியிடம் என்ன குறை? அது பேசவில்லையா?'' என்று கேட்டார் வியாபாரி.

''பே-பே-பே-பேசுது; ஆ-ஆ-ஆனா, தி-தி-தி-திக்குது'' என்றான் ஆசாமி. —லியோ விண்ட்ஸர், 'பேஜெண்ட்'.

உரிமையும் கடமையும்

நாம் பெறத் தகுந்ததும் பாதுகாக்க வேண்டியதுமான உரிமையை, கடமையைச் சரிவர நிறைவேற்றுவதன் மூலமே பெற முடியும். நாம் உயிர் வாழ்வதற்குரிய உரிமை கூட ஜனசமூகத்திற்குச் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றும்பொழுதுதான் கிடைக்கும். ஆகவே, இன்ன கடமையைச் செய்தால் இன்ன உரிமை கிடைக்கும் என்று எளிதில் சொல்லிவிடலாம். கடமையைச் செய்யாமல் பெற விரும்பும் உரிமை உண்மையான உரிமை அன்று; பிறர் உரிமையைப் பறிப்பதேயாகும்.

—காந்தியடிகள்

நந்திகேசுவரனேதான்

எல்லார்வி

'தூத்துவம் என்ருல் ராதா கிருஷ்ணன்; தோடி என்ருல் ராஜரத்தினம் பிள்ளை' என்று ஒரு சமயம் 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் அப்போது அதன் ஆசிரியராக இருந்த 'கல்கி' குறிப்பிட்டார். அவருடைய கண்ணேட்டத்தின்படி மனோதர்மம் என்ருல், மகாராஜபுரம் என்பது மிகமிகப் பொருத்தம்.

சங்கீத பூபதி மகாராஜபுரம் விசுவநாதையர் அவர்களின் கலை ஆற்றலில், கிளிப்பிள்ளையின் கூற்றை எந்த நாளிலும் எந்த இடத்திலும் எவரும் கண்டதே இல்லை. இன்று ஒன்று, நாளை வேறு, மறு நாள் இன்னென்று, அடுத்த நாளில் வேருென்று இப்படித்தான் அவருடைய கற்பனை பொங்குமே தவிர, குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் சுழன்று சுழன்று வட்டமிடும் நிலையில் ஒரு நாளும் அவர் செயல் ஆற்றினதில்லை. உயர்வான மற்ற அம்சங்களோடு தொட்ட இடமெல்லாம் கணீர் என்று பேசத் தக்க சாரீர வன்மையும் சேர்ந்திருந்த அந்த நாட்களில், அவருடைய கச்சேரிகளில் சிறப்பம்சம் தினந்தினம் கச்சேரிக்குக் கச்சேரி அதிகரித்துக் கொண்டே போயிற்று. எங்கே பார்த்தாலும் 'மகாராஜபுரம்,' 'மகாராஜபுரம்' என்ற முழக்கந்தான்.

மேலிடங்களில் அதிக ஈடுபாடு கொண்டு மனோதர்மம் நிறைந்தவர்கள், பெரும்பாலும் சில்லறை அம்சங்களில் அக்கறை கொள்வதில்லை. முற்பிறப்பின் நற்பயனுல் விசுவநாதையர் அவர்களிடம் இசைக் கலையின் சிறப்புக்கள் ஒருங்கு சேர்ந்தன. தம் புத்தி விசேஷத்தால் அவர் சிறப்பம்சங்களில் மேலும் அதிகச் சிறப்பை ஒன்று பத்து நூருகப் பெருக்கிக் கொண்டார். புங்கானுபுங்கமாகக் கற்பனைகளைப் பொழிந்து ராகம் பாடுவது, தானம், ஸ்வரப்பிரஸ்தாரம் முதலிய கலை அம்சங்களைப் புரிவது ஆகியவற்றிலே ஈடுபாடு அதிகம் உடைய அவர், கிருதிகளைப் பாடம் செய்து நினைவிலே வைத்துக்கொள்வதில் என்றுமே அதிக அக்கறை கொள்வதில்லை. அதிலெல்லாம் கருத்தைச் சிதற விட்டால் மற்ற உயர்ந்த அம்சங்கள் தடைப்படும். பாடிக் கொண்டே வருகிறபோது சாகித்தியம் நினைவிலிருந்து அகன்று விடும். ரசிகர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். இன்ன இன்ன வித்துவானிடம் இன்ன இன்ன அம்சத்தைக் காணலாம் என்று ரசிகர்களுக்கு ஒரு தீர்மானம் உண்டு. மகாராஜபுரம் கச்சேரி என்ருல், நாலு மணி நேரத்தில் ஏதாவது ஒரு ராகத்தில் எங்காவது ஓரிடத்தில் ஐந்து நிமிஷம் மனோதர்மம் நிறைந்த சஞ்சாரத்தைக் கேட்டு அந்த அளவில் மெய் மறந்துவிடும் ரசிகர்கள் பல்லாயிரம் பேர். அத்தகையவர்கள் கீர்த்தனை, சாகித்தியம் முதலிய அம்சங்களைப்பற்றி ஏன் நினைக்கிருர்கள்?

திருச்சிராப்பள்ளியிலே மகாராஜபுரம் விசுவநாதையர் கச்சேரி. கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை வயலின்; அழகநம்பி பிள்ளை மிருதங்கம். சரியான ஜமா. ரசிகர்கள் கூட்டம் ஏராளம். கச்சேரி உரிய நேரத்தில் ஆரம்பம் ஆகி விறுவிறுப்பாக நடந்துகொண்டிருந்தது. பாதிக் கச்சேரியிலே தியாகையரின் கிருதி ஒன்றை விசுவநாதையர் பாடத் தொடங்கினுர். பல்லவி கனகச்சிதமாக முடிவடைந்தது. அநுபல்லவியை எடுத்தார். முதல் அடியைப் பாடினுர். மேலே கொண்டு போய் நிறுத்தினுர்.

அடுத்த அடி நினைவுக்கு வரவில்லை. மறுபடியும் முதல் அடியையே பாடினார். இப்படியே நாலைந்து முறை பாடியும் அநுபல்லவியின் மறு பாதி தோற்றம் ஆகவில்லை. அழகநம்பி பிள்ளை இதை உணர்ந்துகொண்டார். மிருதங்கம் வாசிப்பதில் இரண்டு வகை உண்டு. தாளத்துக்கு வாசிப்பது ஒன்று. பாட்டுக்கு வாசிப்பது மற்றொன்று. சாகித்திய ஞானம் உடைய தாளவாத்திய வித்துவான்கள் பாட்டுக்கு மிருதங்கம் வாசித்தால் பாடுவது போலவே இருக்கும். அழகநம்பி பிள்ளை அந்த முறையில் வாசிப்பதில் தேர்ந்தவர். ஆகவே, விசுவநாதையரைத் தொடர்ந்து அநுபல்லவியின் பூர்வார்த்தத்தை (முதல் பாதியை) வாசித்துக்கொண்டே மேலிடம் சென்ற பிள்ளை அவர்கள், அங்கே ஐயர் என்னவோ நிறுத்திவிட்டதைக் கண்டார். ஆனால், பிள்ளை தாமும் நின்றுவிடாமல், உத்தரார்த்தத்தை (பிற்பகுதியை) மத்தளத்தில் வாசித்துக்கொண்டே வந்து பல்லவியில் இணைத்துவிட்டார். முன்னணியிலிருந்த நுண்ணறிவு படைத்த ரசிகர்கள் சிலர் இந்த ரகசியத்தை அறிந்து, 'ஆகா! ஆகா!' என்று ரசித்துக் கரகோஷம் செய்தார்கள்.

அழகநம்பி பிள்ளையின் செயலால் மறந்த இடம் நினைவு வரப்பெற்ற விசுவநாதையர் அவர்களும், "ஆகா! ஆகா! நந்திகேசுவரனேதான்" என்று அழகநம்பி பிள்ளையைப் பாராட்டினார். அதைக் கேட்டுச் சபையோர் ரசித்துச் சிரித்தார்கள்.

"என்ன சிரிக்கிறீர்கள்? நான் அழகநம்பி பிள்ளையை வெறுமனே புகழவில்லை. மத்தள வாத்தியத்தில் இவர் நந்திகேசுவரனேதான். அது மட்டுமா? சாயலிலுங்கூடத் தான்" என்று அழகநம்பி பிள்ளையின் பக்கம் கை காட்டினார். அழகநம்பி பிள்ளைக்குப் பிடரிப் பிரதேசத்தில் சிறிய அழகான வளர்ச்சி ஒன்று உண்டு. அந்தப் பொருத்தத்தைச் சுட்டிப் புகழ்ந்த விசுவநாதையரின் சிலேடைப் பேச்சுச் சபையில் சிரிப்பின் ஆரவாரத்தை அதிகப்படுத்தியது.

திருச்சபைக் கதை

பாதிரியாய்ப் பதவி வகித்து ஓய்வு பெற்றிருக்கும் 86 வயசுக் கிழவன் நான். இருந்தாலும், இன்றுங்கூடச் சிலசமயம் நான் பிரசங்கம் செய்வதுண்டு. சமீபத்தில் எனக்குச் சரியாகத் தூக்கம் வராமல் சிரமம் ஏற்பட்டது. இதற்கு அருமையான ஒரு பரிகாரத்தை இப்போது கண்டுபிடித்து விட்டேன்.

இரவிலே தூக்கம் வராதபோதெல்லாம், என்னுடைய அடுத்த பிரசங்க விஷயங்களைப்பற்றிச் சிந்தித்துத் தயார் செய்துகொள்ளத் தொடங்கினேன். இதிலிருந்து எனக்கு ஆனந்தமான ஒரு சங்கதி நிகழ்ந்தது. என் பிரசங்கத்தினால் சபையோரிடம் என்ன பலன் ஏற்படுமோ அதே பலன் என்னிடமும் ஏற்படலாயிற்று.

—ரெவரண்ட் ஆர். பி. ஃபிஷர்

கல்வியின் முக்கியத்துவம்

மகனுக்குத் தந்தை சொல்லுகிறார். "இந்த நாளில் கல்வி சர்வ முக்கியத்துவம் வாய்ந்திருக்கிறது. ஒன்று, நீ யூனிவர்ஸிட்டிக்குச் செல்லவேண்டும்; அல்லது அப்படிச் சென்றவர்களை வைத்து வேலை வாங்குவதற்கு உன் சொந்தத்தில் ஒரு வியாபாரத்தைத் தொடங்கவேண்டும்."

—'பில் கோல்ட்'

கன்னடச் சிறுகதை:

மாயக்காரி

மூலம்: 'ஆனந்தா' தமிழ்: பாமா சிவராம்

இன்றுடன் இருபது நாள்! ஆம்..இருபது நாள்தான். இன்று என்ன கிழமை? வியாழக் கிழமை - ஆமாம், சரியாக இருபது நாள்! இந்த இருபது நாளும் நான் அவளைப் பார்த்துக்கொண் டிருக் கிறேன். ஒரு நாளும் தவறிய தில்லை. அவள் யார்? பெயரென்ன? எப்படிப்பட்டவள்?.... சிறிது பொறுங்கள்; எல்லாவற்றையும் கூறுகிறேன். அதற்கு முன் உங்க ளிடம் சொல்ல இரண்டொரு விஷயங்கள் இருக்கின்றன-நான் எங்கே உட்கார்ந்துகொண்டு உங்களிடம் இவைபற்றிக் கூறிக் கொண் டிருக்கிறேனோ அந்த வீட்டில் - இல்லை, அந்த அறையில் - வசிப்பது நான் ஒருவன் மட்டுமே. என் உணவு, உடை முதலியவை பற்றி இப்போது நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. அவற் றைத் தெரிந்துகொள்வதால் உங்க ளுக்கு ஒரு பயனும் இல்லை.

சரி; அவள் விஷயத்துக்கு வரு வோம். அவள் யார்? தெரியாது. பெயரென்ன? அறியேன். எப்படி இருக்கிறாள்? 'அப்படியிருக்கிறாள்,' 'இப்படியிருக்கிறாள்' என்றெல்லாம் சுருக்கமாக வர்ணிக்க இயலாது; பெண்களை வர்ணிப்பதைப்பற்றிக் கவிஞர்களை 'ஸ்ரீநிவாசர்' கடுமை மையாகத் தாக்கியிருப்பதைப் பார்த்த பிறகு, என் கை எழுதுவ தற்குச் சற்றுக் கூசவே கூசுகிறது! ஆயினும், 'அவர் தாக்கியிருப்பது கவிஞர்களைத்தானே! நான் கவிஞன் அல்லவே!' என்று தேற்றிக் கொண்டு முயலுகிறேன்.

நான் வர்ணிக்கப்போவது அவ ளுடைய முகத்தை மட்டுமே. ஏனென்றால், கடந்த இருபது நாளாக என் விழிகளைக் கவர்ந் திருப்பது அந்த அழகிய முகந் தான். இதுவரையில் நான் அவ ளோடு பேசியதில்லை. அவளுடைய குரலைக் கேட்டதில்லை. அவள் எங்கே பிறந்தாளோ, எப்படி வளர்ந்தாளோ - நான் அறியேன். ஆயினும், கடந்த இருபது நாளாக அவளைத் தவறாமல் தினம் பார்க் கிறேன். பார்க்கும் ஒவ்வொரு முறையும் எங்கள் பார்வைகள் ஒன்று கலக்கின்றன. ஒவ்வொரு கணமும் மேலும் மேலும் அவள் என்னுடன் நெருங்கிய உறவு கொண்டவளாகவே இருக்கிறாள்.

அவளுடைய முகத்தை என்ன வென்று வர்ணிப்பேன்? நீங்கள் ஒரே வார்த்தையில் புரிந்து கொள்ளும் பட்சத்தில் கூறுகி றேன், கேளுங்கள்: அவள் 'அழகி'. எப்பேர்ப்பட்ட அழகியென்றால், அதுமட்டும் என்னால் சொல்ல இயலாது. அழகிலே எத்தனையோ வகை உண்டு. காதலியின் கவர்ச் சியா, அன்னையின் அழகா, விலை மகளின் தளுக்கா? இப்படித்தான் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. ஊர்வசியைக் கவி ரவீந்திரர் வர்ணிக்கும்போது, "ஊர்வசியே, நீ அன்னை அல்ல; மகள் அல்ல; மனைவியும் அல்ல. சொர்க்கவாசிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மாது நீ" என்கிறார். ஆனால் நான் அவளை ஊர்வசியுடன் ஒப்பிட மாட்டேன். ஏனென்றால், நான் அந்தச் சொர்க்கவாசியை இன்னமும் கண்டதில்லை; காணும் வாய்ப்பும் கிட்டாது! ஒரு வேளை கிடைத் தாலும் உங்களிடம் சொல்ல முடி யாத நிலையில் நான் இருப்பேன். அப்போது எனக்கும் உங்களுக்கும் கடிதப் போக்குவரத்து நின்று போயிருக்கும்! அப்படியானால் அவளை எப்படி வர்ணிப்பது? அவள் முகம் நிலவுக்கு ஒப்பான தல்ல; கண்களின் வனப்புக் கமலத்தினிடமிருந்து கவர்ந்த தல்ல. அவள் நாசிக்கும்

சண்பக மலருக்கும் அறி முகமே கிடையாது. அவள் உதடுகளின் அழகு கொவ்வைக் கனிகளிடமிருந்து பெற்ற சீரும் அல்ல. பின்னே இன்னும் எப்படி? சொல்லப் போனுல் ஆயிரம் வர்ணனைகளும் அவளை ஒரு முறை பார்ப்பதற்கு இணையாகா. நீங்கள் மாம்பழம் தின்றிருப்பீர்களே! அதன் சுவை என்னவென்று கேட்டால், என்ன சொல்வீர்கள்? இனிப்பு என்றுதானே? ஆனுல் எப்பேர்ப்பட்ட இனிப்பு? அதைச் சொல்ல முடியுமோ? சர்க்கரையின் இனிப்பா? கரும்பின் இனிப்பா? கிச்சிலியின் இனிப்பா? இல்லை, கொய்யாப் பழத்தின் இனிப்பா? எது? எல்லாம் இனிப்புத் தான்: ஆனுல், அந்த இனிப்பிலும் வேறுபாடு இருக்கிற தல்லவா? மாம்பழத்தைச் சுவைத்து அறியாதவனுக்குக் கொய்யாப் பழத்தைக் கொடுத்து, அவன் மாம்பழத்தின் சுவையை அறியும்படி செய்ய இயலுமா? அது என்னுல் ஆகிற காரியம் அல்ல. அவளை வர்ணிப்பதில் நான் படும் பாட்டை நீங்கள் உணர்வீர்களானுல், அவளுடைய சௌந்தரியத்தையும் உங்களால் முழுதும் உணர முடியும்.

இத்தனை நாளாக அவளைப் பார்த்துப் பார்த்துப் பழகிய எனக்கு, நினைத்த மாத்திரத்தில் மனத்திரையிலே தோன்றுவது அவளுடைய முகம் ஒன்றே. மற்றவையெல்லாம் ஒரே அந்தகாரம்; அந்த அந்தகாரத்தினிடையே அமைதியான ஒரு சுடரொளி போல் காண்கிறது அவள் முகம். உடனே நான் (என் உள்ளம் - என் ஆவி..எது வென்றுவது வைத்துக்கொள்ளுங்கள்) விளக்கைச் சுற்றி வட்டமிடும் விட்டிலாக மாறுகிறேன். அந்தப் பேரழகியின் முகத்து ஒப்பற்ற வனப்பைப் பூர்ணமாக உணர வேண்டுமானுல், நீங்களும் என்னைப் போல் ஒரு விட்டிலாக மாறவேண்டும். அது உங்களால் முடிகிற காரியமா? என்னுடைய இந்தச் சொற்களைக் கேட்டு, நீங்கள், 'இது என்ன பித்து இவனுக்கு!' என்று நினைக்கலாம். நினைத்துக்கொள்ளுங்கள். அதனுல் என்ன? என் உள்ளம் சிறிதும் நோகாது. நீங்கள் நினைப்பதும் ஒரு விதத்தில் சரிதான். உள்ளதைச் சொல்லி விடுகிறேன். எனக்கு அவள் முகமென்றுல் கொஞ்சம் (கொஞ்சமென்ன, முற்றுமே) பித்துத்தான். இந்தப் பித்து இதுவரையில் எனக்கு அடங்கியே இருக்கிறது. ஆனுல் என்றைக்குக் கட்டுக்கு அடங்காமல் என் மானத்தை வாங்கிவிடுமோ தெரியவில்லை. கடவுள் அந்த நாளை விலக்கியே வைத்திருக்கட்டும்! ஒரு வேளை அந்த நாள் நெருங்கியே விட்டாலும், என் மானத்தை யாவது காக்கட்டும்!

என்னுடைய இந்தப் பித்துக்குக் காரணம், அவளுடைய முகத்தில் நிரந்தரமாக நிலைத்திருக்கும் மென்னகையே. அதை எப்படி வர்ணிப்பேன்! மறுபடியும் அதே புலம்பல். வர்ணிக்கத் தலைப்பட்டால் பித்து அதிகரித்துக்கொண்டு போகிறதே யல்லாது முயற்சி என்னவோ வெற்றி பெறுவதாகத் தோன்றவில்லை. இந்த இருபது நாளாக அந்த முகம், அந்த முகத்திலே மலர்ந்த மென்னகை..ஆஹா! அதை எப்படிச் சொல்லுவேன்! ஓயாது பார்த்துக்கொண் டிருந்தும் அதை வர்ணிக்க எனக்கு ஒரு வார்த்தையும் கிடைக்கவில்லையே! தேனைச் சுவைத்த ஊமையைப் போல் திண்டாடுகிறேன். அது தான் எத்தகைய மென்னகை! வசந்த காலத்துப் பூங்காவில் நீங்கள் உலவியிருக்கிறீர்களா? அங்கே உங்களுக்கு முற்றும் புதியதொரு நறுமணம் காற்றிலே மிதந்து வரும்போது, நீங்கள் மெள்ள அடிமேல் அடிவைத்துச் சுற்று முற்றும் பார்ப்பதில்லையா? அப்படிப் பார்க்கும்போது ஏதோ ஒரு திசையிலிருந்து அந்த நறுமணம் வருவதாக உணர்ந்து அங்குமிங்கும் தேடித் திரிந்து, ஓரிடத்தில் ஒரு மூலையில் அந்த நறுமணத்தின் பிறப்பிடமான செடியையோ கொடியையோ பார்த்துப் பரவசம் எய்துவதில்லையா? அந்த நறுமணம் எப்படி உங்கள் நாசியை இழுத்துச் சென்றதோ அப்படியே அவளுடைய புன்னகை இந்த இருபது

நாளாக என் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திருக்கிறது. இந்த உவமையிலே எனக்கும் அந்தப் புன்னகைக்கும் இருக்கும் உறவை வெளிப்படுத்தியிருக்கிறேனே தவிர, அந்தப் புன்னகையைச் சிறிதும் வர்ணித்து விடவில்லை; உண்மைதான். தோல்வியை ஒப்புக்கொள்ளுகிறேன். என் நண்பர்களில் சிலர் என் வர்ணனை ஆற்றலை மெச்சி, தலை அசைத்து, என் தலை கிறுகிறுக்கும்படி செய்திருக்கிறார்கள். அந்தக் கிறுகிறுப்பை நிறுத்தவே அவள் என் கண்ணில் பட்டாளோ என்று ஒவ்வொரு தடவையும் தோன்றுகிறது. அவள் என் கண்ணில் பட்ட அன்றுமுதல் இன்றுவரைக்கும் எத்தனையோ முறை என் மனத்திலேயே, ''மலரே, உன்னை வர்ணிக்க என்னால் இயலாது'' என்று சிரம் தாழ்த்திக் கூறியிருக்கிறேன். பிறகு அந்த விழிகள்? ''ஓஹோ! உதடுகளை வர்ணித்து முடித்தாயிற்று: இப்போது விழிகளை வர்ணிக்கப் புறப்பட்டு விட்டான்!'' என்று ஏளனமாய்ச் சொல்லிவிடாதீர்கள். கடவுள் கொடுத்த உங்களுடைய இரண்டு கண்களும் பிறப்பின் பயனை எய்த வேண்டுமானால், நீங்கள் அவளுடைய விழிகளை ஒரு முறை நோக்கவேண்டும். ''என்ன, மல்லிகை முகையிலே சிறையான சிறு வண்டுபோல் இருந்ததோ?'' என்று கேலி செய்கிறீர்களா? அல்லது, ''மீன் விழியாளா, வேல் விழியாளா, மான் விழியாளா, மலர் விழியாளா?'' என்று கேட்கிறீர்களா? நான் ஒன்றும் அவைபற்றிச் சிந்திக்காமலில்லை. இந்த இருபது நாளாக நான் சும்மா இருந்தேன் என்றா நினைத்தீர்கள்? பலமுறை யோசித்திருக்கிறேன். அந்தப் பெயர்களில் ஒன்றும் அவளுடைய விழிக்கேற்ற உவமை ஆகாது. எங்கே, அவற்றையெல்லாம் ஒருங்கே சேர்த்து ஒரு புதிய வார்த்தையை அமைக்க முடியுமா? பாருங்கள்; மறுபடியும் முயற்சி செய்து பாருங்கள்.

எங்கள் பார்வைகள் ஒன்றுடன் மற்றொன்று கலக்கும்போதெல்லாம், நான் காந்தக் கல்லின் அருகில் இருக்கும் ஒரு சிறிய இரும்புத் துண்டு ஆகிவிடுகிறேன். அந்த ஒரு கணத்திலே என்னுடைய பரு உடல் கரைந்து போய், என் விழி மட்டுமே ஏதோ மாயையில் உழல்வது போல் உணர்ந்திருக்கிறேன். வரவர அவளுடைய கண் ஒளியிலே 'நான்' என்னும் உணர்வும் மங்கி மறைந்துவிடுகிறது.

இந்த இருபது நாளிலே அநேகம் முறை, 'நான் ஓர் ஓவியனாக இருந்தால்..!' என்று எண்ணியிருக்கிறேன். மறு கணமே 'நானும் ஓர் ஓவியன்தான்' என்று தோன்றுகிறது. என் இறுதி நாள் வரைக்கும் என் மனத்திரையிலே ஊன்றி நிலைத்திருக்கும் அவளுடைய அந்த முகம், அதிலே தோன்றும் அந்த மென்னகை, அந்த விழி! நினைத்த மாத்திரத்திலேயே என் உள்ளத்திலே, அவளுடைய ஒவ்வோர் அம்சத்தையும் ஒவ்வொரு ரேகையையும் என்னால் வரைந்துகொள்ள முடியும். ஆகவே, நான் ஓர் ஓவியன் தானே? வர்ணங்களைக் கொண்டு காகிதத்தின் மேல் அவளுடைய உருவைச் சித்திரிக்க முடியாதவனாக நான் இருக்கலாம். ஆயினும் என்ன? என் மனம் தீட்டாத வர்ணமோ வரையாத கோடோ இருக்கிறதா? உங்களுக்கு அலுப்பாகவா இருக்கிறது? கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கிறீர்களோ!

நேற்றுடன் இருபது நாள் பூர்த்தி. இன்று இருபத்தோராவது நாள். இன்றும் அவளைப் பார்த்தேன். இதுவரையிலும் அவளைப் பார்ப்பதோடுமட்டும் சரி. 'எப்படியாவது அவளுடன் பேச வேண்டும்; அவளுடைய குரலைக் கேட்க வேண்டும்' என்னும் பேராசை என் உள்ளத்தில் பெருங்கடலின் அலைபோல் எழும்பி என் மனத்தை மேலும் மேலும் சிதற அடித்திருக்கிறது. ஆனால் என் ஆசை நிறைவேறும் வகை என்ன? என்ன வழி? பேச நான் தயாராயிருக்கிறேன்; ஆனால்..அவள்? இல்லை! அவள் பேசுவாளா? முடியவே முடியாது! நான் பித்தன் - உன்மத்தன்! என்னுடன் அவள் எப்படிப் பேச முடியும்? இருபது நாளாக

என் கண்ணிலே எல்லே மீறும் உன்மத்தத்தை அவள் பார்த்திருக்கமாட்டாளா? நடக்காத காரியம். இப்படியிருக்க அவள் எப்படிப் பேசுவாள்? ஆயினும், அவளுடன் இத்தனை நாளில் ஒரு வகையில் பேசியிருக்கிறேன் என்றே சொல்லவேண்டும். கண்ணெடு கண் மௌனமாகப் பேசியிருக்கிறேன். என் ஓசையற்ற சொல்லே அவள் கேட்டிருப்பாளா? ஆசைபற்றி அல்லலுறும் என் பார்வை அவளைத் தொட்டிருக்குமா? நான் அவளுடைய முகத்தின் ஒளியில் மயங்கிய விட்டில் என்பதை அறிந்திருப்பாளா? 'அவளுடைய முகம் குளுமையான ஜ்வாலே போன்றது' என்று சொன்னல் நீங்கள் நகைப்பீர்கள். ''இதென்ன, சூடான பனிக்கட்டியா?'' என்பீர்கள். என் மூளையின் ஏதோ ஒரு பகுதி ஆட்டம் கண்டிருக்கிறது என்று கேலி செய்வீர்கள். 'கு-ளு-மை-யா-ன ஜ்-வா-லே!' ஆமாம்! ஏன் இருக்கக் கூடாது? பொறுங்கள். அதை நீங்களே உணரும்படி செய்கிறேன். நான் சொன்னபடி செய்யவேண்டும்; அவ்வளவுதான். எங்கே, கண்ணே மூடிக்கொள்ளுங்கள். ஆயிற்ரு? இப்போது உங்கள் மனத்தை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். 'பித்தனுயிற்றே!' என்று அஞ்சாதீர்கள்! அதோ பாருங்கள் - கண்ணேத் திறக்க வேண்டாம்! - அப்படியே பாருங்கள்! - பாருங்கள்! காரிருளின் நடுவே சிறியதொரு ஒளி தென்படுகிறதல்லவா? என்ன பிரகாசம்!...எப்படி மிளிர்கிறது! எப்படி அசைந்தாடுகிறது!... என்ன களியாட்டம்! பாருங்கள்; நன்ருகப் பாருங்கள்..இப்போது வாருங்கள். அந்த முகத்தின் அருகே வாருங்கள். அஞ்ச வேண்டாம்!..எங்கே, கையைக் கொடுங்கள். பயமேன்! இல்லே, சுடாது!.. குளுமை! பனித்திவலேகள்போல் குளிர்ந்திருக்கிறது. நம்பிக்கை இல்லேயா? இதோ..பாருங்கள், நான் தொடுகிறேன். சுடர் எப்படி அசைந்தாடுகிறது, என் கைமேல்! எங்கே, இப்போதாவது தொடுங்கள், பார்க்கலாம். பார்த்தீர்களா! குளிர்ச்சியாக இல்லேயா? ஜ்வாலே குளிர்ந்திருக்கிறதல்லவா? சொல்லுங்கள், இப்போதாவது என் பேச்சு உண்மையா இல்லேயா என்று?

நம்பிக்கை பிறந்ததா? ஹூம்! சரி, இனிமேல் உங்கள் மனத்தை என்னிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள். என் பொறுப்புத் தீர்ந்தது. கண்ணேத் திறவுங்கள். இதென்ன, எழுந்துவிட்டீர்கள்? நீங்கள் நினேக்கலாம், 'இந்தப் பித்தனின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தால், இவனுடைய நோய் நம்மையும் பற்றிக்கொள்ளுமே?' என்று. வேண்டாம் அந்தப் பயம். என் பித்தம் தொற்றுநோய் அல்ல. உட்காருங்கள்..உம்..என்ன சொல்லிக்கொண்டிருந்தேன்?..நினேவுக்கு வருகிறது - அவளுடன் பேச்சு.. ஆமாம், எப்படியாவது அவளுடன் பேசிவிடுவதென்று முடிவு செய்துவிட்டேன். அவள் பேசாவிட்டால் என்ன?..நல்லது...என்னவென்று பேசுவது?..பெயர் - ஊர் - பிறகு?.. ஏதாவது பேச்சுத் தொடங்கிவிட்டால் தானுக வளர்கிறது.

இன்று இருபத்திரண்டாவது நாள். இன்று எப்படியாவது பேசியே விடுவதென்று உறுதியாக முடிவு செய்திருந்தேன். ஆனல், அவளேப் பார்த்தவுடன் என் நாவு பின் வாங்கியது. அது என் கண்ணிடம், ''நண்பா, இன்றும் என் வேலேயை நீயே செய்துவிடு; என் உடம்பு ஒரு மாதிரியாக இருக்கிறது'' என்று மன்ருடியது. என் நாக்கு என்னேயே இப்படி ஏமாற்றும் என்று நான் கனவிலும் நினேக்கவில்லே. 'அந்தோ, மோசம் போனேனே!' என்று ஏதோ பிரமை பிடித்து உட்கார்ந்துகொண்டிருந்தேன். தபால்காரன் வந்து ஒரு கடித உறையைக் கொடுத்துச் சென்ருன். பார்த்தேன் - சருவின் கடிதம்! என் நெஞ்சிலே என்னவோ செய்தது. அது என்ன என்பதை நீங்கள் அறிய மாட்டீர்களா? சமயம் நேரும்போது இப்படிச் செய்யுங்கள்; நீங்கள் மாதக்கணக்கிலே வேறு ஊரிலே இருக்கும்போது, உங்கள்

கையைப் பற்றினவள் அல்லது நீங்கள் யார் கையைப் பற்றினீர்களோ அவள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் எழுதும் எட்டுப் பக்கக் கடிதத்துக்கு நீங்கள் இருபது நாளிலோ, இல்லை, மாதம் ஒரு முறையோ, பாதிப்பக்கம் கிறுக்கிப் போடுங்கள். அப்புறம் அவள் ஒரு கடிதம் எழுதுவாள். அதைக் கூர்ந்து படியுங்கள். அப்போது உங்களுக்கு நான் 'நெஞ்சிலே என்னவோ செய்தது' என்று சொன்னேனே, அது புரிந்துவிடும்.

'சருவுக்கு என்னவென்று பதில் எழுதுவது?' என்று சிந்திக்கத் தொடங்கினேன். இந்த இருபது நாளைக்குள் அவளிடமிருந்து ஐந்து, இல்லை, ஆறு கடிதங்கள் வந்துவிட்டன. இது ஏழாவது கடிதம்; சற்றுக் காரமாகவே இருந்தது! நானோ உப்புச் சப்பற்ற ஒரே ஒரு சிறிய கடிதம் எழுதியிருந்தேன். இன்றைய கடிதத்துக்கு என்ன பதில் எழுதுவதென்றே தோன்றவில்லை. என்ன காரணம் சொல்வது? எந்தச் சாக்குச் சொல்வது? அவள் அப்படியே பொரிந்து தள்ளியிருக்கிறாள். அவளுடைய கோபத்தை எப்படித் தணிப்பது? நொண்டிச் சாக்கு ஏதாவது கூறுவதா அல்லது உண்மையான காரணத்தையே எழுதிவிடுவதா? உ-ண்-மை-யா-ன கா-ர-ண-ம்! அதை எழுதினால் என்னவாகும்! சுழல் காற்றுக்கு விருந்தளித்தது போலத்தான் ஆகும். கைப்பிடித்தவளின் காலைப் பற்ற வேண்டி வரும். அதென்னவோ நிச்சயம்! உண்மையான காரணம் என் பித்து! இந்தப் பித்தை அவள் - என் சரு - புரிந்துகொள்ளுவாளா? சிக்கலான சில விஷயங்களைப் பெண்கள் அநாயாசமாகப் புரிந்துகொண்டு விடுகிறார்கள்; எளிய சில விஷயங்களைச் சிறிதும் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். என் பித்தம் இரண்டாவது வகையைச் சேர்ந்தது. சரு கட்டாயம் புரிந்துகொள்ள மாட்டாள்; அதற்கு முயலவும் மாட்டாள். அவள் என்னுடைய இந்த உன்மத்தத்தை ஒருநாளும் ஆமோதிக்க



மாட்டாள். ஆமோதிப்பது ஒரு புறம் இருக்கட்டும்; பொறுக்க மாட்டாள். 'உனக்கே சம்மதமா இந்த உன்மத்தம்?' என்று கேட்பீர்கள். எப்படிச் சொல்ல முடியும், அது சரியா தப்பா என்று? ஒரு முறை 'தவறு' என்று தோன்றினால், நூறு முறை 'சரி' என்று படுகிறது. அவளை அடையவேண்டும், அவளை என்னுடையவளாகச் செய்துகொள்ள வேண்டும் என்னும் ஆசை என் மெய்யுணர்வுடன் இருந்தபோது - நானறிந்த மட்டும் - தோன்றியதில்லை. இருக்கும் ஆசையெல்லாம் 'எந்நேரமும் பார்க்கவேண்டும்' என்பதுதான். இது தவறு? தவறு என்று மனத்தைத் திருத்தினால், 'தவறு' என்று படுகிறது; 'சரி' என்று திருத்தினால், 'சரி' என்றே தோன்றுகிறது. இதன் பிறப்பிடம் மூளையோ, இதயமோ, பித்த கோசமோ அல்லாது ஏதாவது ஒரு தகாத வியாதியோ! எது என்று நான் அறியேன். கிட்டாத ஒரு பொருளின் மேல் அன்பு செலுத்துவதோ அதை விரும்புவதோ நீதிக்குப் புறம்பானது - உண்மை. இதை ஆமோதிப்பவர் எத்தனை பேர்? எதிர்ப்பவர் எத்தனை பேர்? இரு தரப்பிலும் அநேகர் இருக்கக் கூடும். ஏன் இருக்கிறார்கள்? இந்த உண்மை உடலைக் கட்டுப்படுத்தும்; நாவை அடக்கும்; ஆனால் உள்ளத்தை?..கடினம்! மிகவும் கடினம்! இதன் முன் வெகுவாக நீதி சுக்குநூறாகிவிடும். வெண்ணெயைப் போல மிருதுவாகக் கூடியது இந்த மனம் - கல்லைப்போல் கடினம் ஆகக்கூடியது - காற்றைப் போல் லேசாகக்கூடியது-மலையைப் போல் அசையாததாகக்கூடியது - சிறு துளியாகக்கூடியது - பெருங் கடலாகக்கூடியது - அமிழ்தமாகக் கூடியது - கடும் நஞ்சாகக் கூடியது! இது மனத்தின் மாயை! இந்த மாயாவியும் நீதியும் போரிட நேர்ந்தால். வெற்றி யாருக்கு - தோல்வி யாருக்கு?

அவளைப் பொறுத்தவரையில் என் மனநிலை எனக்கே தெளிவு படாமல் இருக்கிறது. என்னுடைய பித்து இன்று இருந்து நாளை மறைந்துவிடுவதா? இல்லை, என் உள்ளத்தின் அடித்தளத்திலே முளைத்து வளர்ந்து வரும் காதலா? எனக்கே தெரியாது. 'இது வெறும் உன்மத்தந்தான்' என்று அடிக்கடி தோன்றுகிறது. எனக்கு அவளிடம் கா-த-லா? ஒரு வேளை அப்படியே காதலாயிருந்தாலும் அதை இதுவரையிலும் உணர்ந்ததில்லை; இருந்தாலும் இருக்கலாம் - இல்லாமலும் இருக்கலாம். ஆனால் இது பித்தந்தான் என்பது சந்தேகமறத் தெரிந்திருக்கிறது. இயல்பாகப் பித்தம் கொண்டவர்கள் 'தாங்கள் பித்தர்கள்' என்பதை உணர்வதே இல்லை; அவர்களுக்கு அவ்விதம் தோன்றுவதே இல்லை. ஆனால் என்னுடைய பித்து இருக்கிறதே, இது சாமானியமானதல்ல. இது என்னுள் நிலைத்து, வியாபித்து, எனக்குத் தன் இருப்பையும் உணர்த்தியிருக்கிறது! இதிலிருந்து எனக்கு விடுதலை? ஒரே வழிதான். தெரியும்; தெரியும்! பித்துப் பிடிக்கச் செய்தவள் அவள்; அவளே தெளியவைக்க வேண்டும்! என் பித்தை நாளுக்கு நாள் அதிகரிக்கச் செய்திருக்கிற அந்த மாயக்காரியின் மௌனம்! ஒரு நாள் - ஒரு போது - ஒரு நிமிஷம் - ஒரு கணம், அவள் என்னுடன் ஒரு வார்த்தை பேசினால், அந்த விநாடியே அந்த ஒரு வார்த்தையே இந்த இருபது நாளின் பித்தையும் அடித்துக் கொண்டு போய்விடும். கடவுளே, அவள் என்னுடன் பேசும்படி - ஒரே ஒரு வார்த்தை போதும் - செய். தலையை அறுத்துக்கொண்டிருக்கிறது இந்தப் பித்து. நான் பேசியே தீரவேண்டும், அவளுடன்! இல்லையென்றால்.... இல்லையென்றால் தாய்நாடு - தாய்நாடு மட்டுமென்ன, என் சரூவும் - என்னை இழப்பது திண்ணம்! திண்ணம்!

இதையெல்லாம் சரூவுக்கு எப்படி எழுதுவது? எழுதினாலும் அவள் புரிந்துகொள்வாள் என்பது என்ன நிச்சயம்....உம்! என்ன ஆனாலும் சரி - எழுதியே விடுவது என்று நிச்சயித்தேன். ஆனால் என்ன எழுதுவது? எப்படித்

தொடங்குவது? முதலும் முடிவும் என்ன, இந்தப் பைத்தியக்காரக் கதைக்கு? வழி புலப்படவில்லை. மிகவும் சிக்கலான விஷயங்களில் வழி புலப்படாவிட்டால் நான் ஒரு பழைய உபாயத்தைக் கையாளுவதுண்டு. என்னவென்றால், கண்ணைப் பாதி மூடிக்கொள்வது; அரைகுறையாகத் திறந்திருக்கும் இமைகளின் ஊடே இரண்டு கண்களாலும் என் நாசியின் நுனியை நோக்குவது; அவ்வளவுதான். அப்போது மனம் ஒரு நிலைப்படும். அறிவு உள் நோக்கும். விஷயம் எவ்வளவு கடினமும் சிக்கலுமாக இருந்தாலும், உரித்த வாழைப் பழம்போல் உடனே எளிதாகிவிடும். தேவையான பதில் மூக்கின் நுனியிலேயே கிடைத்துவிடும்; வெகு தூரம் போகவேண்டியதில்லை. நான் இந்த உபாயத்தை இப்போது கையாண்டேன். வரவர என் பொறிகள் உள் நோக்கியவை ஆயின. 'மன்மத விஜய'த்திலே வரதாசாரியார் தவத்தில் மூழ்கிய பரமசிவனை வர்ணித்திருப்பதைக் கேட்டதில்லையா? நான் பரமசிவனைப்போல் ஆகியிருக்கக்கூடும். என் தவத்தின் பீஜாட்சரம், 'என்ன எழுதுவது? எப்படி எழுதுவது? - எப்படி எழுதுவது? என்ன எழுதுவது?' என்பதே.

இந்தத் தவத்திலே எவ்வளவு நேரத்தைப் போக்கினேனோ தெரியவில்லை. கிட்டத்தட்டப் பத்து நிமிஷம் ஆகியிருக்கலாம். இன்னமும் சிக்கலிலிருந்து விடுபடவில்லை. நான் அந்தச் சிக்கலின் நடுவே அலைந்துகொண்டிருந்தேன். அப்போது வெளியே என் தவத்துக்குப் பங்கம் நேர்ந்ததுபோல் உணர்ந்தேன். ''யார்?'' என்று கேட்டேன், பாதி மூடிய என் விழிகளிடம். அவை, ''அவள்'' என்றன.

''யார்?''

''அவள்! உன்னைப் பித்தாக..''

''ஆ!''

''ஆம்; அவளேதான்!''

தூக்கிவாரிப்போட்டது, எனக்கு. தவத்துக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டுக் கண்களைத் திறந்தேன். ஆம்! அவள்தான்! அ-வ-ளேதான்! ஒரு கணம் என்னால் நம்பவே முடியவில்லை. இது கனவா? நான் கனவு கண்டுகொண்டிருக்கிறேனா?.... என்ன பிரமையா?.. இல்லை, இல்லை! இது கனவானால்.. நான் இருபது நாளாகப் பார்த்துக்கொண்டிருந்ததும்....ஊஹூம்...இருக்காது - இல்லை - இல்லவே இல்லை!.. இங்கே இவ்வளவு அருகில் எப்படி வந்தாள், இருபது நாளாக இல்லாத துணிவுடன்.. இன்று!.. அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்; இதுவரைக்கும் பேச வாய்ப்பில்லை. இன்று என் அறையிலே - என் எதிரே - கையை நீட்டினால் தொடலாம்போல் நிற்கிறாள்!.... 'இந்த வாய்ப்பை விடக்கூடாது!' என்று எண்ணிக்கொண்டேன். இருபது நாளின் ஆசையை இன்று நிறைவேற்றியே விடுவது என்று என்னை நானே உற்சாகப்படுத்திக் கொண்டேன். ஆனால் எவ்வளவு அருகில் நிற்கிறாள்!.. அவளுடைய சமீபம் என் உற்சாகத்தைத் தூளாக்கியது! எழ முயன்றேன்; முடியவில்லை. அந்த மாயக்காரியின் பார்வை என்னை நாற்காலியோடு ஒட்ட வைத்திருப்பது போல் தோன்றியது. பேச முயன்றேன்; அதுவும் முடியவில்லை. என் நாவு கருடனைக் கண்ட நாகம் போல் ஒடுங்கிவிட்டது. 'முதலில் ஒரு வார்த்தை பேசினால் போதும்; அப்புறம் எளிதாகிவிடும்' என்று வெகுவாக முயன்றேன். ஊஹூம்- ஒரு வார்த்தைகூட நாவினால் பேச முடியவில்லை. வாயில் நாவு இருக்கிறதா இல்லையா என்றே ஐயம் ஏற்பட்டது! 'பாம்பு இறக்கக்கூடாது; தடியும் ஒடியக்கூடாது!' - நாவு பேசாது; நானும் விடமாட்டேன்! குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனன், 'போர் புரிய மாட்டேன்' என்றபோது கிருஷ்ண பகவான் அவனுக்கு உற்சாக மூட்டவில்லையா? நானும் அப்படியே என் நாவைத் தூண்டத் தொடங்கினேன். அதுவும் வெகு நேரங் கழித்து, நம்மிடம் பணி புரியும் ஊழியர்களிடம் காணும் தாழ்வுமேலிட்ட பயத்துடன் ஒரு சொல்லை உளறிற்று, ''வ..ந்..தா..யா..?'' என்று.

அப்பா! என்ன இமாலய வெற்றி!

''தெரியவில்லையா?''

அவளும் பேசினாள்! என்ன இனிய குரல், வேய்ங்குழல்போல்! கனவு என்று ஓர் அணுவளவு ஐயம் இருந்தாலும் இந்த வேய்ங்குழல் கானத்தில் அது மறைந்துவிட்டது. இல்லை! இது கனவே இல்லை. எப்படி இருக்க முடியும்? இந்தக் கணமே - கையை நீட்டினால் போதும்! இல்லை! . . இல்லை...! கண் மட்டும் ஏமாந்து போகலாம்; காது தனியாக ஏமாந்துவிடலாம். . ஆனால் இரண்டும் ஒன்று சேர்ந்து. .? இல்லை. கண் ஏமாந்து போயிருந்தால் காது 'கேட்கவில்லையா?' என்று கிசுகிசுக்கும். காது நம்பாமற் போனால், கண் 'பார்க்கவில்லையா?' என்று கேட்கும்.

''தெ-ரி-ய-வி-ல்-லை-யா?''

''ஊம். . . . ஆம், நீ. . வ. . வந்திருக்கிறாய்'' என்றேன்.

இதை மொழிந்ததும் அங்குமிங்கும் - எங்கேயாவது பார்க்கலாம் என்று முயன்றேன். முடியவில்லை. என்ன திக்கற்ற நிலை! அதுவும் அறிமுகமில்லாத ஒரு மங்கையின் எதிரே! அறிமுகமில்லாதவளா? அது எப்படி? இந்த இருபது நாளிலே இருபது வருஷங்களின் அறிமுகம் ஏற்பட்டது போலவே இருக்கிறது. அறிமுகம் இல்லாதவள்! இல்லை; இல்லை! அவளும், ''இல்லை'' என்றே கூறினாள். ஆஹா! எதிரொலி! என் இதயத்தின் அடித்தளத்தில் ஒலிக்கும் குரலின் எதிரொலி!

''என்ன இல்லை?'' என்றேன்.

''அறிமுகமில்லாதவள் இல்லை!''

எத்தகைய மாயக்காரி? எப்படித் தெரிந்தது அவளுக்கு என்னுடைய மிக ரகசியமான எண்ணம்? என் கலவரத்தைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வரும்போல் இருந்தது; ஆனால் அது புன்முறுவலோடு நின்றது. எத்தகைய புன்முறுவல்! . . அந்த விழிகளோ! மாயக்காரியே தான்!

''உனக்கு என். . . . . .''

''நீ என்னிடமிருந்து எதையுமே மறைக்க முடியாது!''

''எதையும் மறை. . .க்க முடி. .!''

''உன் கண் எதையும் மறைக்காது!''

அந்த விநாடியே கையால் கண்ணைப் பொத்திக்கொள்ள முயன்றேன்; முடியவில்லை. இமைகளையும் மூட முடியவில்லை! என்ன அசக்தி! என் மனத்தில் இருக்கும் ரகசியம் பறி போய்விட்டதே! என் உள்ளத்திலே சொல்லுக்கு எட்டாத கலவரம் ஒன்று மூண்டது. எழ முயன்றேன்; முடியவில்லை. இந்த மாயக்காரியின் எதிரே என் முயற்சியெல்லாம் பயனற்றுப் போவது போல் தோன்றியது. அவள் தன் விழிகளை ஒரு விநாடி நேரம் அங்குமிங்கும் பாயவிட்டிருந்தால், நான் எழுந்திருந்திருப்பேன். ஆனால், இல்லை; என்னை வசத்தில் வைத்துக்கொண்டிருந்தன தன் விழிகள் என்பதை அவள் நன்றாக அறிந்திருந்தாள் போல் இருக்கிறது; என் பேரில் அவற்றின் முழு வீச்சையும் செலுத்தியிருந்தாள். ஆனால் மனமிரங்கியோ என்னவோ என் நாவை மட்டும் கட்டுப்படுத்தாது விட்டிருந்தாள். சற்றுப் பொறுத்து வினவினேன்:

''நீ. . இங்கே. . வர. .''

''நீதானே அழைத்தாய்?''

''நான்? நா. . னா?''

மாயக்காரி!

''நீ - உன் நெஞ்சம்-உன் கண்! புரிந்ததா?''

''நா-ன்; என் நெ-ஞ்-சம். . . .''

''இந்த இருபது நாளாக.''

''இ-ந்-த இ-ரு-ப-து-நா-ளா-க!''

''ஆம்! -பின்னே பொய்யா?''

எப்படிப் பொய்யாகும்? ஆனால் அது எப்படித் தெரிந்தது இவளுக்கு?-இந்த மாயக்காரிக்கு?

''பொய் இல்லை. ஆனால், அதை நீ அறிந்த. .''

''அதெல்லாம் ஒரு மாயம்!''

அப்பா! மாயக்காரியே தான்! ஒரு கணம் வாயடைத்துப் போய் விட்டது. பிறகு மறுபடியும் சொன்னேன்:

''எப்படியோ வந்தாயே!''

''மகிழ்ச்சிதானே?''

''நீ பெண்தானே?''

''உன் சரஸ்வதியும் பெண் தானே?''

என் சரஸ்வதி! என்ன கேள்வி?

''என் சரு. . உனக்கு எப். .''

''அந்தக் கடிதமும் அவளுடைய தில்லையா?''

கடிதத்தைக் கசக்கி எறிந்துவிட நினைத்தேன் - முடியவில்லை - திக்கற்ற நிலை! அந்தோ! என் நா ஒன்றுதான் என் வசத்தில் இருந்தது.

''என்ன வென்று பதில் எழுதப் போகிறாய்?''

''என்னவென்று எழுதுவது?''

'''உன்னை மிஞ்சிய அழகி ஒருத்தி கிடைத்திருக்கிறாள்' என்று எழுது.''

''அது எப்படி?''

''அது அப்படியில்லை யென்றால், நீ இப்படி ஆவாயா?''

''எப்படி?''

''பித்தம் கொண்ட விட்டிலாக.''

பித்தம்! விட்டில்! என் ஒருவனுக்கு மட்டுந்தான் தெரிந்த ரகசியம் என்று சொல்லிக்கொள்ள ஒன்றுமே இல்லாமல் போய் விட்டது, இந்த . . இந்தக் குளிர்ந்த ஜ்வாலையினால்.

''ஆம்! ஆம்!! நீ குளிர்ந்த ஜ்வாலையேதான்!''

''உண்மையாகவா?''

''ஆம்; சத்தியமாக.''

''உன் சரூமேல் ஆணையாகவா?''

என் சரூமேல் ஆணை - என்ன சாட்டையைப் போன்ற கேள்வி! இதற்கு என்ன வென்று பதிலுரைப்பது? என் சரூ எங்கே? ஓ! என்ன வென்று சொல்லுவது?

''அப்படியானால் நீ செய்து கொண் டிருப்பது நியாயந்தானா?''

''எது?''

''துரோகம்-சரஸ்வதிக்கு - கைப் பிடித்த மனைவிக்குத் துரோகம்!''

''எது துரோகம்?''

''துரோகமில்லாமல் வேறென்ன? என்னிடமிருந்து எதையுமே எண்ணத்தின் ஒரு துளியைக்கூட நீ ஒளித்து வைக்க முடியாது. சொல். உனக்கு என்னிடம் விருப்பம். அவ்வளவு தானே?''

''பேசவேண்டும் என்று விருப்பம்-அவ்வளவுதான்.''

''அவ்வளவுதானா? அவ்வளவே தானா?''

''ஆம். அவ்வளவேதான்.''

''அதன் மறைவில் வேறொன்றுமே கிடையாதா?''

''இருந்தால் உனக்குத் தெரிந்திருக்காதா?''

''தெரியாமல் என்ன?''

''அப்படியானால் அதென்ன சொல்லிவிடு!''

''உனக்கு நான் வேண்டும். என்னை அடையவேண்டும் என்ற கட்டுக்கடங்காத ஆசை உனக்கு!''

''உன்னைக் கண்ட யார்தான் அந்தமாதிரி ஆசையை அடக்க வல்லவர்கள்.''

''விவேகமுள்ளவர்கள்.''

''அந்தக் கண்களின் எதிரே எந்த விவேகந்தான் எம்மாத்திரம்?''

''நீ ஈடுபட்டிருப்பது பைத்தியக் காரச் செயல்! நீ பித்தன்! முழுப் பைத்தியம்! முழுப் பைத்தியம்!!''

''பித்தனிடம் ஏன் வந்தாய்?''

''பாடம் கற்பிக்க.''

''என்ன துணிவு!''

''துணிவென்ன?''

''இங்கே-நான் தனியன்! மேலும், உன் பேரில் உன்மத்தம் கொண்டவன்! துணிவில்லையா இது?''

''நீ என்னை ஒன்றுமே செய்ய முடியாது! என்னைத் தொடவும் உன்னால் ஆகாது.''

''என்ன இவ்வளவு அருகே இருந்தும் நான் உன்னைத் தொட முடியாதா? இப்போதே . .''

''ஓ! அது அவ்வளவு எளிதில்லை!''

''அது எளிதில்லை யென்றால், உலகிலே பின் எதுதான் எளிது?''

''நீ ஒரு பித்தன்!''

''நீதான் என்னைப் பித்தனாக்கினாய்!''

''நானே தெளியவைக்கிறேன்!''

''உயிரையும் விட்டுவிடலாம்; ஆனால் இந்தப் பித்தம் தெளியாது.''

''நான் போகிறேன்.''

''எங்கே?''

''உன் சரூவிடம்!''

''எதற்கு?''

''உனக்குப் பாடம் கற்பிக்கத்தான் - உன் பித்தத்தைத் தெளிய வைக்கத்தான். இதோ போகிறேன்!''

''வேண்டாம்; போகாதே! நீ இங்கேயிருந்து போகமுடியாது.''

''ஏன்?''

''நான் தடுக்கிறேன்! என்னிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியுமா உன்னால்?''

''உன்னால் என்னைத் தடுக்க முடியாது! தப்பித்துக்கொள்வதா? உன் கையில் சிக்கினால் அல்லவா? அட பைத்தியமே! இதோ பார்! போகிறேன்!''

என் விழிகளையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு அவள் மெதுவாக இரண்டடி பின்னால் வைத்தாள். இப்போது நழுவி விடுவாள்! இனி என் அருகில் வரவே மாட்டாள்!

இந்தப் பொன்னான நேரத்தை நான் இப்போது நழுவவிட்டால் மறுபடியும் இதை என் வாழ்நாளில் காணவே முடியாது. நான் எழுந்துவிட வேண்டும்!....எழுந்தேன். அவள் இன்னோர் அடி பின்னுக்கு வைத்தாள். நான் முன்னேற முன்னேற அவள் பின் வாங்கிக்கொண்டே இருந்தாள். இருபது நாளாக என் உள்ளே அடைந்து கிடந்த ஆசையெல்லாம் திரண்டு பேரலையாய்ப் பொங்கியெழுந்தது. அந்த ஒரு கண நேரத்திலே!....கைகளை நீட்டி - அவள் விழியுடன் விழி பதித்தேன். அடி மேல் அடிவைத்துப் பின்வாங்கிக் கொண்டிருந்தாள் அவள்! இனிப் போய்விடுவாள்! ஓடிப் போய்விடுவாள்! கைகளை நீட்டிக்கொண்டு சட்டென்று முன்னேக்கிப் பாய்ந்தேன்! நான் பாய்ந்ததும் அவளும் 'சிவ்' என்று மேல் நோக்கி எழும்பினாள்! எழும்பிச் சுவரிலிருந்த சட்டத்தில் புகுந்துவிட்டாள். என் தலை சுவரிலே மோதுண்டது!

தலையைத் தேய்த்துக்கொண்டே அவளுடைய ஓவியத்தைப் பார்த்துக்கொண் டிருந்தேன் - நான் இருபது நாளாகப் பார்த்துக்கொண் டிருந்த அந்த ஓவியத்தைத்தான்! அதுதான் அவளுடைய அழகு ஓவியத்தை!!

கடைசியாக ஒரு வார்த்தை; சிரிக்காதீர்கள் !

இன்னமும் அந்த என் பித்தம் தெளியவில்லை!!

சரியான டாக்டர்

''அம்மா, எனக்கு உதவி செய். என்னை மறுபடியும் சிறு பையனைப்போல் பாவித்து நடத்து. நீயே ரொட்டியும் பாலும் கொடு. முன்போல் கதைகள் சொல்லு. படுக்கவிட்டுப் பிரார்த்தனை செய்.''—இப்படியெல்லாம் வேண்டித் தாயின் உதவியை நாடினார் ஒரு பெரிய பத்திரிகாசிரியர். அவரை அமெரிக்காவெங்கும் தெரியும். 'அட்லாண்டா கான்ஸ்டிட்யூஷன்' என்பதன் ஆசிரியரான ஹென்றி டபிள்யூ. கிரேடி என்பவரே அந்த ஆசிரியர். அந்தப் பத்திரிகையின் சொந்தக்காரரும் அவரே. சிறந்த பிரசங்கி.

அவருடைய புத்திசாலியான தாயும் அப்படியே, சின்னஞ்சிறு குடிசையில், அமைதியாக, அன்போடு உதவினாள். சிறு வயசில் அவரைப் போற்றி வளர்த்து ஆளாக்கிவிட்டவள் அவளே.

ஆசிரியர் நிம்மதியும் நம்பிக்கையும் குலைந்து நோயுற்றபோது, தம் தாயே சரியான டாக்டர் என்று எண்ணி அவளுடைய உதவியை நாடினார். அவளும் அதை அளித்தாள். அவர் அமைதியும் ஆரோக்கியமும் பெற்றார். இதேமாதிரி தாயின் அன்பு நமக்கும் பல சமயம் நலன் தரும்.

—எச். எம். எஸ். ரிச்சர்ட்ஸ், 'ஹெரால்ட் அவ் ஹெல்த்'.

புஸ்தகச் சுருக்கம்:

நேபால யாத்திரை

★

தருமபுர ஆதீனம் 25-ஆம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், தம் பரிவாரத்தில் சிலரோடு 'பசுபதிநாத்' தரிசனம் செய்து வந்தது பற்றிய யாத்திரை நூல் இது. சந்நிதானத்தின் அருளாணையின் வண்ணம் இதை வெளியிட்டுள்ள வித்துவான் சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் தம் முன்னுரையில் இந்த நூலை எழுதியவர் திரு அ. கல்யாண சுந்தர தேசிகர் என்று குறிப்பிட்டு வாழ்த்தியிருக்கிருர். நூல் மிகச் சுவையுடன். நல்ல நடையும் பொருளும் பொருந்தி அமைந்திருக்கிறது.

காப்பிரைட். வெளியிட்டது: தருமபுரம் ஆதீன சமயப் பிரசார நிலயம், சென்னை-17. விலை குறிக்கவில்லை.

நேபால யாத்திரை

★

நாள் குறித்தாயிற்று.

குரு மகாசந்நிதானம் அவர்களும் பல பணியாளரும் அடியார்களும் சென்னை சென்று சென்னையிலிருந்து ரெயிலில் கல்கத்தா வழியே ஸ்ரீ காசி செல்ல வேண்டுமென்பது திட்டம். 20-3-'58 அன்று தருமையை விட்டுப் புறப்பட்டுச் சென்னை சேர்ந்தார்கள். மதுரைக்கு அருளாணை பிறந்தது. சிவதரும பாஸ்கரர் சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டர் அவர்கள் மற்றும் சில அடியார்களுடன் விரைந்தார். உடன் செல்லும் புண்ணிய வாய்ப்பு அடியேனுக்கும் கிடைத்தது.

சென்னை சேர்ந்த மறுநாட் காலையில் மயிலாப்பூர், திருவொற்றியூர் ஆலயங்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபட்டார்கள். மயிலை, திருவொற்றியூர்த் தரிசனம் முடித்து வந்தார்கள். சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டரவர்கள் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தின் திருவுளப்படி காசி யாத்திரைக்குத் தம் உறவினர் சிவஸ்ரீ சொக்குப்பட்டர் அவர்களையும், நண்பர் திரு. நாராயணன் செட்டியார் அவர்களையும் அழைத்து வந்திருப்பதாக அறிவித்தார்கள். வழி நெடுகிலும் சிந்தனை சிவசிந்தனையாக, பேச்சு எல்லாம் ஞானப் பேச்சாகக் கழிந்தன. இரண்டு இரவு; ஒன்றரைப் பகல். கல்கத்தா வந்தோம்.

வழக்கம்போல அன்று மாலை காளிகோவில் தரிசனம் செய்து மீண்டோம். ஸ்ரீ காளிக்குச் சண்டி, பயிரவி என்ற வேறு நாமங்களும் சொல்லி அங்கே வழிபடுகிறார்கள். திருவுரு நான்கு திருக்கரங்களை உடையது: கத்தி, கபாலம், அபயம், வரதம். குண்டலம்-பிரேத குண்டலம். தலைமாலை அணிந்திருக்கிறாள். பிரேதக் கைகள் கோத்த ஆடை, நாக்கு வெளியே துருத்திக்கொண்டிருக்கிறது. கண் விழி சற்று வெளியே பிதுங்கிக் கொண்டிருக்கிறது. கோலம் நிருத்த கோலம்; அதிலும், பரமசிவன்மேல் நின்றாடும் திருக்கோலம். ஒரு கால் பரமசிவன் மார்பின் மீதும், மறு கால் ஒரு துடையின்மீதும் நின்று ஆடும் காட்சி. முகமெல்லாம் சிந்துரமும் வெண்ணெயும் குழைத்துப் பூசியிருக்கிறார்கள். நரபலியும் ஒரு காலத்தில் இங்கே நடைபெற்றது. இப்போது எருமைக் கடா, ஆடு, கோழி பலியிடுகிறார்கள். மது நிவேதனமும் உண்டு. மக்கள் பக்திபரவச நிலையில் வந்து வழிபடுகிறார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் கூட்டம் அதிகம்.

இது சாக்தேயத்தின் தலைநகரம். அவர்களுடைய ஐதிகத்தின்படி தேவியின் திருவுரு அமைந்து விளங்குகிறது. இங்கே வழிபாட்டுக்கு வருவோர் சிலர் தங்கத்தாலோ வெள்ளியாலோ ஊசி வைத்துக்கொண்டு, தம்முடைய உறுப்புக்களில் குத்தி, அதனால் வழியும் ஒரு சொட்டு ரத்தத்தையாவது ஸ்ரீ காளியின் திருவடிகளில் அர்ப்பணிப்பதும் உண்டு. இந்த ரத்ததானம் இங்கே மிக்க சிறப்புடையது. இதனால் காரியசித்தி நிகழும் என்று நம்புகிறார்கள்.

சிவராத்திரியும் நவராத்திரியும் விசேஷம். ஒரிஸ்ஸா, வங்காளப் பக்கத்துச் சைவத்துக்கு மது, மாமிசம் விலக்கு இல்லை. அவற்றை நிவேதனம் செய்து சிறப்பாக விழாக் கொண்டாடுகிறார்கள். இதே மூர்த்தியைச் சிவராத்திரியில் பரமசிவனாகவும் நவராத்திரியில் சக்தியாகவும் விசேஷமாகக் கொண்டாடி வழிபட்டு வருகிறார்கள்.

நாங்கள் கல்கத்தா சென்ற நாள் ஞாயிற்றுக்கிழமை. மக்கள் சாரி சாரியாக விரைந்துகொண்டிருந்

தார்கள். ஆனந்தமாக நெற்றியில் குங்குமக் கீற்றேடு எல்லாரும் திரும்பிக்கொண் டிருந்தார்கள். வங்காள நாட்டின் அரசியல் வேகம் உலகம் அறிந்த ஒன்று. தொழில் வளத்திலும் தொழிற் கிளர்ச்சி அடிப்படையிலும் மொழி அடிப்படையிலும் முக்கியமான இடம் வகிக்கும் இந்தியக் குடிமக்கள் வாழும் இடமல்லவா வங்காளம்! சிறந்த செயல் வீரர்களும் சுதந்தர இயக்கத்தின் ஆதிகர்த்தாக்களும், ஸி. ஆர். தாஸ், நேதாஜி, சரத் சந்திரர், பங்கிம் சந்திரர், டாகுர், விவேகானந்தர் போன்ற பெரு மக்களும் சிறந்து விளங்கிய நாடாயிற்றே! ஆயினும் அரசியல் உத்வேகத்தோடு மதபக்தியும் செறிந்தவர்கள் அந்த மக்கள் என்ற உண்மை இப்போதுதான் எனக்கு விளங்கிற்று.

தரிசனம் முடித்துக்கொண்டு வரும் வழியில், ஜைனர் கோவில்களில் பக்தர் கூட்டம். பிற மதங்களின் ஆலயங்களிலும் மக்கள் திரண்டு திரண்டு வழிபட்டு மன முருகி நிற்கும் காட்சியைப் பார்த்தபடி திரும்பிக்கொண் டிருந்தோம். ஹுக்ளி நதியின் கரையோரமாகப் புகைவண்டி நிலயத்துக்கு வரும் வழியில் மேலும் அரிய காட்சி. தேவியை அலங்கரித்து உலா வரும்படி செய்துகொண் டிருந்தார்கள். ஆண், பெண், குழந்தை அனைவருமாகத் தெய்வ சாந்நித்தியத்தில் ஈடுபட்டு வருவது கண்ணுக்கு நல்ல காட்சி; நெஞ்சுக்கும் நல்லதாயிருந்தது. தொழில், அரசியல் கிளர்ச்சிகளுக்குப் பெயர் போன வங்காளம் தெய்வ பக்தியிலும் பின்னிடவில்லை யென்பதைக் கண்கூடாகக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் காசி யாத்திரைக்கு எழுந்தருளும் செய்தி திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்களுக்கு அறிவிக்கப் பெற்றிருந்தது. செய்தி தெரிந்தவுடன் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ காசியில் உள்ள ஸ்ரீ குமாரசாமி மடத்து ஏஜண்டுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். வழக்கம்போல் ஹாவுரா வந்ததுமே ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தை எதிர்கொண்டு வரவேற்று அழைத்துச் செல்லும் பொறுப்போடு ஸ்ரீ குமாரசாமி மடம் கணக்கர் திரு. சுப்பிரமணிய பிள்ளை காத்திருந்தார். கல்கத்தாவிலும் உடனிருந்து எல்லா வசதிகளும் செய்து கொடுத்ததோடு, எங்களோடு ஸ்ரீ காசிக்கும் வந்தார். நாங்கள் வந்த வண்டி பெனரஸ் கண்டோன்மெண்டுக்கு 10-45-க்கு வந்து சேர்ந்தது. அங்கே ஸ்ரீ காசி மடத்து (ஸ்ரீ குமாரசாமி மடத்து) ஏஜண்ட் திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை வந்து வரவேற்றார். பிரம்மஸ்ரீ சூரிய நாராயண சாஸ்திரிகளும் வந்திருந்தார். அது ஒரு சோமவார தினம்.

ஸ்ரீ குமாரசாமி மடத்துக்கு வந்ததும் வழக்கம்போல ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைக் கொலுவிலிருத்தி வணங்கிப் பிரசாதங்கள் பெற்றுக்கொண்டார்கள். நல்ல கூட்டமும் வந்திருந்தது. காசியில் உள்ள பிரபல வழக்கறிஞரும் தொழிலதிபருமான திரு. பி. எம். வீரப்பன் அவர்களும் வந்திருந்தார்கள். மாகேசுவர பூஜையும் சிறப்பாக நடைபெற்றது. நகர மடத்திலிருந்தும் மரியாதைகள் அனுப்பியிருந்தார்கள். அன்றைய நாளிலிருந்து காசியில் தங்கிய எல்லா நாட்களிலும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து உபசரிப்பிலே நாங்கள் எல்லாரும் தங்கியிருந்தோம்.

செவ்வாய்க்கிழமை அன்று கேதாரேசுவரருக்கு ஏகதின லட்சார்ச்சனை, கார்த்திகேயருக்கு ஷண்முகார்ச்சனை, அம்பிகைக்கு ஸஹஸ்ரநாமார்ச்சனை எல்லாம் நடந்தன. அந்தப் பக்கத்து மக்கள் திரள்திரளாக வந்து கண்டு இன்புற்றார்கள்.

மறு நாள் ஸ்ரீ காசிவிசுவநாதருக்குப் பெரிய அபிஷேக ஆராதனைகள் நடந்தன. பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரானைப் பாற்கடலில் எழுந்தருளச் செய்து, ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் வழிபட்டார்கள்.





1. காளி; 2. காசியில் விசுவேசுவரருக்குப் பால் அபிஷேகம்;
3. பாட்ஞ மியூசியத்தில் ஜாவா நரசிம்மன்.



1. நந்தியும் பசுபதிநாதர் மேற்கு வாயிலும்;
2. பசுபதிநாதர்; 3. வைத்தியநாதர் விமானம்.





1\. வைத்தியநாதம் ஸ்ரீ கிருஷ்ணர் கோயில்.
2\. நேபால அரசாங்கக் கொடி.





1. நேபால அரசரின் அரண்மனை வாயில்; 2. மந்திரியின் அரண்மனை.

வெள்ளிக்கிழமை ஸ்ரீ காசியிலுள்ள எல்லா அகாடாக்களிலும் (மடங்களில்) உள்ள சாதுக்களுக்கு அழைப்புக்கள் அனுப்பி விருந்து நடந்தது. நல்ல உயர்ந்த சாதுக்கள், தவ சிரேஷ்டர்கள். அகாடாக்களில் இருந்து விளங்குகிறார்கள். இந்துசமயப் பிரிவுகள் எல்லாவற்றையும் சேர்ந்த பெரியோர்கள் அவரவரும் அவரவருக்கேற்பட்ட அகாடாவில் தங்கியிருக்கிறார்கள். காபாலிகர்கள், பாசுபத மதத்தார், அத்வைதிகள், சைதன்ய மதத்தைச் சார்ந்தவர், வல்லபர் வழி நிற்பவர்கள்-இப்படியாகப் பல வழிகளிலும் நின்று ஆன்ம அநுபவம் பெருக்கும் பெரியார்கள் அங்கங்கே உண்டு. அந்த நல்ல பெரியோர்கள் விருந்தேற்கக் குமாரசாமி மடத்துக்குக் குறித்த காலத்தில் வந்து சேர்ந்தார்கள்.

ஒரு நாளைக்கு ஒரு முறை உணவு ஏற்பார்கள் அவர்கள். அதுவும் அந்த நாட்டு முறையில் அமைந்ததாக இருக்கும். பூரி, டால், கீர், கச்சோடி, சூடி, லட்டு இப்படியாகப் பலதரப்பட்டவை. எல்லாம் நல்ல நெய்யில் கைதேர்ந்த பணியாளர்களைக் கொண்டு செய்திருக்க வேண்டும். அநுபவம் மிக்கவர்கள் இருந்து உபசரிக்க வேண்டும். பந்தியில் அமர்வது ஒரு குறிப்பிட்ட தகுதி முறையில்; அவரவர் தவமேன்மைக்கு ஏற்றபடி இடம் அமைத்து அமர்கிறார்கள். உணவு வகைகள் அவரவரும் போதுமென்று சொல்லுமளவுக்குப் படைக்க வேண்டும். ஒரு சிறு குறை கண்டாலும் அவர்களுக்குக் கோபம் மிக உண்டாகும். ஆகவே, சிறு குறைபாட்டுக்கும் இடமில்லாது மனம் உவந்து மனத்தில் அன்பு கொண்டு அளிக்கும் விருந்துகளை மட்டும் மகிழ்ச்சியோடு ஏற்று ஆசி வழங்கிச் செல்வார்கள்.

தொடக்கத்தில் எல்லாருமாகச் சேர்ந்து நாமபஜனை செய்துவிட்டுச் சில உபநிஷதப் பகுதிகளையும் சொல்லிப் பிறகுதான் உணவுக் கலனில் கை வைப்பார்கள். அப்படி அவர்கள் உணவு ஏற்கும்போதும் இங்கொருவர் அங்கொருவராகத் தொடர்ந்து வேத உபநிஷத வாக்கியங்களையும் சிறந்த தோத்திரங்களையும் சொல்லிக்கொண்டேயிருப்பார்கள்; மற்றவர் உணவு கொள்வார்கள்.

இந்தச் சாதுக்கள்விருந்து நடக்கும் போது, ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வந்து எல்லாருக்கும் பரிவாக உபசாரம் செய்தார்கள். பாஷை புரியாவிட்டாலும், மலர்ச்சி இருந்தபடியால் திருப்தியாக அவர்கள் விருந்தேற்றார்கள். 'படே சுந்தர்மூர்த்தி ஹை! படே தவ சிரேஷ்ட்!' என்று ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானத்தைப் பார்த்து அவர்களுக்குள் பேசி மகிழ்ந்தார்கள். தங்களுடைய தவம் இதுபோன்ற பெரியோர்களின் கூட்டுறவால் மிகுபலன் அளிக்குமென்று நம்புவதாகச் சொல்லி விடை பெற்றுச் சென்றார்கள். அன்று அங்கே கண்ட காட்சி சிவலோகக் காட்சியாக இருந்தது.

நல்ல புண்ணிய வசம் இருந்தாலொழிய அப்படிப்பட்ட சிறந்த தவசீலர்களைக் காண்டலும் அரிதேயாகும். அந்தத் திருக்கூட்டத்திலே எல்லோரும் எளிதிற் கலந்துவிட முடியாது. நைஷ்டிக பிரமசரியமும், பெரிய படிப்பும், ஒழுக்கமும், சாதுக்களின் சேர்க்கையும், தொண்டு செய்யும் மனப்பண்பும் நிறைந்தவர்கள்; பெரிய சாதுக்களிடம் உரிய முறையில் உபதேசம் பெற்றுத் தவம் பெருக்கி, தவப் பெருமையினாலே சாது மஹாராஜாக இருந்தவர், மண்டலேசுவரர், மஹாமண்டலேசுவரர் என்ற பெருமை அடைந்து உயர்பதவி பெற வேண்டும். துவராடை உடுத்ததாலோ, பிற புறத்தோற்றங்களாலோ யாரும் அந்தத் திருக்கூட்டத்தில் சேர்ந்துவிட முடியாது பொதுவாக வடநாட்டு மக்கள் சந்நியாசிகளை, துறவிகளைத் தங்கள் குடும்பப் பெரியோர்களாக, கடவுளின் பிரதிநிதிகளாகக் கருதி விரும்பி வணங்கி உபசரிக்கும் பண்பாடு உடையவர்கள். துறவிகளின் மனம் கோணாது அவர்கள் வேண்டியவற்றை

உடனே செய்துகொடுத்து ஆசி பெறுகிறுர்கள்.

ஸ்ரீ காசிக்கு வாரணசி, மகா மயானம் என்ற பல பெயர்கள் வழங்குகின்றன. சிவ சூல வடிவில் அமைந்தது காசி. கங்கையைத் தவிர, பிஷக்மோஹன், அகஸ்திய குண்டம், ஞானவாவி அமிர்த குண்டம், தன்வந்தரி தீர்த்தம், நாககுண்டம் முதலிய சிறந்த தீர்த் தங்களும் இந்த நகரில் உண்டு. பேய், பிசாசு நீக்கம் கருதி பிஷக் மோஹனில் மக்கள் தீர்த்தமாடு வார்கள். அது மணிகர்ணிகா கட்டத்துக்குப் பக்கத்தில் அமைந் திருக்கிறது. காசியிலுள்ள பலரும் எப்போதும் விரும்பி இங்கே வரு வார்கள். அமிர்தகுண்டம் - நோய் நீக்கத்துக்குத் தீர்த்தமாடுமிடம். தன்வந்தரி தீர்த்தம் - இந்தத் தீர்த்தத்திலிருந்து எடுக்கும் நீர் கைகண்ட மருந்து. வயிறு முட்டக் குடித்து நோய் நீக்கம் பெறுகிறுர் கள். நாக தீர்த்தம் - இங்கே வருஷத்துக்கொரு மேளா நடை பெறுகிறது; மிக விசேஷமானது. இங்கே விஷ நீக்கம் கருதி வந்து பலனடைகிறுர்கள்.

க்ஷேத்திர விசேஷமாக விசுவே சுவரம், பிந்துமாதவம், அமிர் தேசுவரம், ரத்னேசுவரம், விருத்த காலேசுவரம், சித்ராங்கதேசுவ ரம், நீலகண்டேசுவரம், ஹரம் பாபேசுவரம் போன்ற பல பெருந் தலங்களும் காசியில் இருக்கின் றன. பொதுவாகச் சிவசக்தி பேதங்கள் எல்லாவற்றுக்கும் ஸ்ரீ காசியில் ஆலயங்கள் அமைந்திருக் கின்றன. காசியிலேயே உள்ள வருக்கு இந்த விசேஷ பலன்கள் தெரியவரும். வெளியிலிருந்து வரு வோருக்கு இந்தப் பெருமைகள் தெரிவதற்கில்லை.

காசி க்ஷேத்திரத்தில் பல சிவாலயங்கள் இருந்தாலும் முத் தேசுவரர், ரத்தினேசர், ஓங் காரேசுவரர், விசுவேசர், விருத்த காலேசுவரர் முதலிய முப்பத் தாறு லிங்கங்கள் பெருமை மிக்கவை.

ஸ்ரீ காசியில் தங்கியிருந்த காலத் தில் கங்கை அறுபத்துநான்கு கட்ட தரிசனம், முக்கியமான கட் டங்களில் ஸ்நானம் முதலியவை ஸ்ரீ முறையாக நடைபெற்றன. ராமநவமிக்கு முதல் நாள் அன்ன பூர்ணுஷ்டமி என்ற விழாவை ஸ்ரீ காசியில் மிகச் சிறப்பாகக் கொண் டாடுகிறுர்கள். அன்று பல லட்சக் கணக்கான ஆண்களும் பெண் களும் அன்னபூர்ணு தேவியின் ஆல யத்துக்குச் சென்று வழிபடுகிறுர் கள். திருமணமாகாத பெண்கள் அங்கே நாள் முழுவதும் தங்கித் தோத்திர பாராயணம் செய்கிறுர் கள். அதன் விளைவாக அவர்கள் விரைவில் திருமணம் முடிக்கப் பெறுவார்கள் என்ற நம்பிக்கை பரவியிருக்கிறது. ஸ்ரீ ராமநவமி யன்று கங்கா ஸ்நானமும் விசு வேசர் தரிசனமும் செய்வது மிகச் சிறந்தவை யென்று கருதி அந்த மக் கள் அவ்வாறே செய்து மகிழ்கிறுர் கள்.

ஸ்ரீ காசியில் மரணம், காசி எல்லை யில் மரணம், கங்கைக் கரையில் தகனம். இவை இந்துக்கள் எல் லாரும் மோட்ச சாதனமாகக் கரு திச் செய்து வருகிறவை. பெரும் பாலும் ஸ்ரீ காசி நகரத்தின் சுற் றுப் புறத்தில் இறப்பவர்களின் சடலங்களை எல்லாம் ஸ்ரீ காசிக்கு ஆள் மூலமும் படகு முதலியவற் றின் மூலமும் எடுத்துவந்து கங் கைக்கரையில் மணிகர்ணிகா கட் டம் அல்லது அரிச்சந்திர கட்டத் தில் வைத்து நெருப்பில் இடுகிறுர் கள். பிணங்களைத் தூக்கிச் செல் கிறவர்கள் உயிரோடு உலவும் மக்க ளுக்கு ஓர் அறிவுரை வழங்குகிறுர் கள். 'ராம் நாம் சத்ய ஹை' என் பதுதான் அந்த உபதேசம். உல கத்தில் காணும் எல்லாப் பொருள் களும் அநித்தியம். கடவுள் நாமம் ஒன்று மட்டுமே நித்தியம். ராம நாமம் இங்கே கடவுளினுடைய பொதுப் பெயராக வழங்குகிறது. ஆகவே, நம்முடைய உயிர் இந்தக் கூட்டில் வாழும் காலத்தில் இயன்ற மட்டும் கடவுளின் நாமாவளிகளை உச்சரித்து உய்யவேண்டும் என்பது அந்த உபதேசத்தின் உட்பொருள்.

ஸ்ரீ காசி சென்ற அன்றே, கேச வப் பிரசாத் என்ற முதல் வகுப்பு நீதிபதி ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நி தானத்தைத் தரிசித்துப் பேசிக்

கொண்டிருந்தபோது நேபாலம், கயிலை யாத்திரை போன்ற பெரிய யாத்திரைகளுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்து வருவதாகச் சொன்னார். நேபால யாத்திரை போகிறவர் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டிடம், 'யாத்திரிகர் நன்னடத்தை உள்ளவர்; பாரத நாட்டுக் குடி' என்று நற்சாட்சிப் பத்திரம் பெற வேண்டும். வருமான வரி ஒன்றும் பாக்கி இல்லை என்றும் சான்றுப்பத்திரம் பெற வேண்டும். புகைப்படம் வேண்டும். அந்தப் புகைப்படத்தில் யாத்திரை செல்வோர் கையெழுத்திட்டு, முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டின் முத்திரையும் மேலொப்பமும் பெறவேண்டும். இவை யல்லாது சுகாதாரச் சான்றுப் பத்திரங்களும் தேவைப்படும். இப்படிச் சான்றுகள் பெறுவதில் கேசவப் பிரசாதினுடைய உதவி அவருடைய நற்சான்று மூலம் கிடைப்பதாகும். அடியார்களிடம் ஈடுபாடும் கடவுள் பக்தியும் உள்ளவர் அவர். அடியார்களாக உள்ள பெருமக்கள் நேபால கயிலாய யாத்திரை செல்வதாக இருந்தால், நற்சான்று வழங்குவதில் உற்சாகத்தோடு உதவி செய்கிறார். 'வந்திருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்' என்று தென்னாட்டுப் பெரிய மஹந்த் (மதகுரு), அதாவது ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் பணித்தபடி, எல்லாம் குறைவின்றி நிறைவுறத் தம்மாலான எல்லா உதவிகளையும் கேசவப் பிரசாத் தயக்கமின்றிச் செய்து கொடுத்தார். இரண்டொரு நாளில் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தோடு செல்வதாக இருந்த அத்தனை பேருக்கும் பிரயாண அநுமதிச் சீட்டுகள் மிக எளிதில் பெற வாய்ப்பாயிற்று.

ரெக்சோலிலிருந்து பாரத நாட்டிலுள்ளவர் மலைப்பாதை வழியே செல்ல வழியுண்டு. இரண்டொரு வருஷத்துக்குமுன் இந்தியப் படையைச் சேர்ந்த எஞ்சினீர்கள் மிகுந்த திறமையுடன் அந்தப் பாதையைச் செப்பனிட்டு எல்லா வாகனங்களும் எளிதில் செல்லும்படியாக அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு உலகப் பாராட்டும் கிடைத்திருக்கிறது. ஆனாலும் இமயமலைப் பகுதிகள் வெறும் கல் அல்ல; கற்பகுதி பல நூற்றுக்கணக்கான அடிகளுக்குக் கீழே இருந்தாலும் மேல்புறம் பெரும்பாலும் கல்லும் மண்ணும் கலந்தே இருக்கும்.

மலைச்சரிவினூடே வளைந்து வளைந்து மலையையொட்டியே பல சிகரங்களையும் சுற்றி வளைத்துக் கொண்டு அந்தப் பாதையை அமைத்திருக்கிறார்கள். கீழே பல நூற்றுக்கணக்கான அடி ஆழமுள்ள பள்ளப்பகுதியோ மலையாறோ இருக்கிறது; இந்தப் புறம் பல ஆயிரக்கணக்கான அடி உயரமுள்ள மலைப்பகுதியும் அடர்ந்த காடும் உயர்ந்த சிகரங்களும் நம் முன்னே காட்சியளிக்கும். பாதை அமைத்து இரண்டொரு வருஷமேயானாலும், அதன் வழியே பல லாரிகளும் பஸ்களும் செல்கின்றன. நேபால நாட்டுக்குத் தேவையான பொருள்களைப் பாரதத்திலிருந்தும், பாரதத்தில் விற்பனைக்கு வரும் பொருள்களை நேபாலத்திலிருந்தும் திபேத்திலிருந்தும் எடுத்துச் செல்ல நல்லதொரு பாட்டை அது. ஆனாலும் இமயப் பகுதியில் அப்போது பெய்யும் பெருமழையினால் அடிக்கடி மலைச் சரிவுகள் ஏற்படுவதுண்டு. பல பகுதிகள் அடைபட்டுப் பல நாட்கள் போக்கு வரத்தில்லாமல் போவதும் உண்டு. தவிர, அந்த மலைப்பாதையில் ஓட்டிப் பழகிய காரோட்டிகளால் மட்டுந்தான் அந்த வழியே கார்களை ஓட்டிச் செல்ல முடியும். அவர்களுக்குக் கூட மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வைத்தியப் பரிசோதனை நடக்கிறது. கண் பார்வை, காது கேட்டறியும் சக்தி, உடல் நிலை இவை சரியாக இருக்கின்றனவா என்ற வைத்தியப் பரிசோதனை செய்து நல்ல நிலையில் இருப்பதாகக் கண்டாலொழிய அநுமதி கிடையாது. தனிப்பட்டவர்களின் கார் மூலமாக அங்கே செல்ல விரும்புவோர் இந்திய அரசாங்கத்தின் மூலம் அநுமதி பெற்றுச் செல்ல வேண்டும். இப்படிச்

செல்வதுங்கூடப் பல மணி நேரம் ஒருவழிப் பாட்டையில் நின்று நின்று செல்ல வேண்டி வரும்.

இந்தத் தொல்லைகள் ஒழிய, பிஹார் ராஜ்யத்தின் தலைநகரான பாட்ணு நகரிலிருந்து விமான மூலமாக மிக எளிதில் ஒரு மணி நேரத்துக்குள் நேபாலத் தலைநகரான காட்மண்டு சென்று விட முடிகிறது. அங்கே நாம் வரும் செய்தியை யாராவது ஒருவருக்கு அறிவித்துவிட்டால் அவர் விமான நிலையத்துக்குக் கார் எடுத்து வந்து நம்மை அழைத்துப் போகிறுர். இப்போது அங்கே பல பெரிய ஹோட்டல்கள் இருக்கின்றன. தெரியாத எவருக்காவது முன் கூட்டியே செய்தி தெரிவித்துவிட்டாலும் போதும்; வந்து அழைத்துச் செல்வதுடன், வாய்ப்பாகப் பிற வசதிகளும் அவர் செய்து கொடுக்கிறுர். இயன்றவர்கள், இந்தியத் தூதுவராலயத்தின் மூலம் இங்கிருந்தே ஏற்பாடு செய்துகொண்டு போனுல், அந்த நாட்டில் நமக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

விமானப் போக்கு வரத்தில் எந்த இடத்திலிருந்து எந்தப் பகுதிக்குப் போகவேண்டி யிருந்தாலும், விமானக் காரியாலயத்தின் மூலம் எந்த இடத்திலும் செய்தி தெரிந்து பிரயாணச் சீட்டுக்கள் பெறலாம். எந்த ஊரிலிருந்து எந்த ஊருக்குப் போக வேண்டுமோ அதற்குத் தந்தி மூலம் பேசித் தெரிந்துகொண்டு பிரயாணச் சீட்டுக்களைக் குறிப்பிட்ட தேதியில் வழங்கிவிடுகிறுர்கள். அப்படி வழங்குவதில் போவதற்கும், அதே வழியில் திரும்புவதற்குங்கூட இங்கேயே 'ரிட்டர்ன் டிக்கட்' அளித்துவிடுகிறுர்கள். டெலிபோனில் பேசும் செலவைப் பிரயாணச் சீட்டைப் பெறுவோர் ஏற்றுக்கொண்டால், இது மிக எளிதில் நடைபெறக் கூடியது. ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி பாட்ணுவிலிருந்து காட்மண்டுவுக்குச் செல்லப் பிரயாண வசதி இருக்கிறதென்று தெரிந்து அதன்படியே சீட்டு வாங்கிக்கொண்டோம்.

காட்மண்டுவிலிருந்து திரும்பி வருவதற்குத் தேதி குறிக்க மறுத்து அதைக் காட்மண்டுவிலேயே தெரிந்துகொள்ளும்படி அறிவித்து விட்டார்கள். அதற்கிணங்கியே நாங்கள் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டோம். பிறகு வைத்தியநாத தரிசனம் முடித்துக் கொண்டு, பாட்ணுவில் வந்து விமானம் ஏறுவதாகத் திட்டம் செய்துகொண்டோம்.

குறித்த நேரத்தில் பாட்ணு விமான நிலயம் வந்தோம். அங்கே நமது பாரத நாட்டுச் சுங்கச் சோதனை அதிகாரிகள் இருக்கிறுர்கள். நாம் கொண்டு போகும் எல்லாப் பொருள்களுக்கும்-பொதுவாகக் காமிரா, துப்பாக்கி, ஆபரணங்கள், புத்தாடைகள் இவற்றுக்கும் மற்றச் சாமான்களுக்கும்-எண்ணிக்கை விவரம் கொடுக்கவேண்டும். அதற்குக் குறிப்பிட்டதொரு நமூனுவில் கையெழுத்திட்டு உறுதி செய்யவேண்டும். நாம் முன்னே பெற்று வைத்திருக்கும் வருமான வரி ரசீது, நற்சான்றுப் பத்திரங்கள் முதலியவற்றையும் அவர்கள் பார்ப்பார்கள். கையிருப்புப் பணம் எவ்வளவு என்பதையும் அறிவிக்க வேண்டும். அவர்கள் விரும்பினுல் நம்முடைய பெட்டி படுக்கை முதலியவற்றைக்கூடச் சோதனையிட்டுத் திருவார்கள். இவ்வளவு வேலை இருப்பதனுல் விமானம் புறப்படுவதற்கு 2 மணி முன்னுலேயே சென்றுவிடுவது நலம். இந்தச் சோதனையில் ஒரு சிறு சந்தேகம் இருந்தாலும் அவர்கள் நம்முடைய பிரயாணத்தை நிறுத்தி விடலாம். அதற்கு இடம் நேராத வகை நாம் ஏற்பாடாக இருக்கவேண்டும். 3 மணிக்குப் புறப்படும் விமானத்தைப் பிடிப்பதற்கு நாங்கள் 1-30 மணிக்கே நிலயத்துக்குச் சென்று விட்டோம். சுங்க அதிகாரிகளின் சோதனை எல்லாம் விரைவில் முடிந்தன.

பாட்ணுவில் விமானத்தில் ஏறியவுடன் நகர எல்லையாக ஓடும் கங்கைப் பெருநதியையும் அதில் கலக்கும் கண்டகியையும் கண்டு

தரிசித்துக்கொண்டோம். மேலே செல்லச் செல்ல நம் நாட்டு எல்லே இமய அடிவரையாக நமக்குத் தெரிகிறது. நல்ல பசிய சோலே களும் மலேயடுக்குச் சிகரங்களும் காடுகளும் மலேயருவிகளுமாகப் பலவும் நமக்குக் காட்சியளித்துக் கொண்டே நம்மை வரவேற் கின்றன. எவரெஸ்டும் காஞ்சன சிருங்கமும் (பொற்கோட்டிமயம்) தவளகிரியுமாகப் பனி மூடிய கொடுமுடிகளேத் தூரத்தே காணப் போகிருேம் என்ற உள்ளக் கிளர்ச்சி உவகை ஊட்டுகிறது. பாட்ஞவிலிருந்து புறப்படும் பொழுது பெரும் புழுக்கமும் சோர்வுங்கூட இருக்கும்.

ஆனுல் நேபால எல்லேயை எட்டி யதும் இமய மலேச் சரிவின் மேலே செல்லச் செல்ல வெப்பநிலே குறைந்துகொண்டே வருகிறது.

தொலேவில் காட்மண்டு இப் போது நமக்குத் தெரிகிறது. சுற்றி லும் பசுஞ்சோலேயும் விளே நிலமும் சூழ்ந்த ஓர் ஆலய விமானம் நமக் குக் காட்சியளிக்கிறது. நாம் அதைப் பார்க்குமுன்னே அதி லிருந்து இரண்டு கண்கள் நம்மை ஊடுருவிப் பார்க்கின்றன. இதல் லாது பண்பட்ட நிலமும் சிறிய நகரமும் நம் கண்முன்னே காட்சி யளிக்கின்றன. காட்மண்டு விமான நிலயத்தில் இறங்கும்பொழுது இவை இரண்டும் நம் பார்வையி லிருந்து மறைந்துவிடுகின்றன. அங்கே எதிர்நோக்கிய கண்கள் யாருடையவை? எதற்காக அப்படி ஒரு காவல்?

நிலயத்தை விட்டு ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தில் நேபால நாட் டின் தலேநகரான காட்மண்டுவில் அமைந்த அந்த நாட்டின் உயிரான காவற் கடவுள் பசுபதிநாதரைக் காண வருகிருர்கள். பெரியவர் களுக்குரிய சிறப்புக்களோடு அவர் களே வரவேற்று உபசரிக்க வேண் டும் என்று ஸ்ரீ காசி அன்பர் ஒருவர், பசுபதிநாத ஆலயத்தில் வாசுகி பூஜை செய்யும் பூஜகருக் குச் செய்தி அறிவித்திருந்தார் என்று தோன்றுகிறது.

மிகப் பழைய கார் ஒன்று விமான நிலயத்தில் வந்து காத் திருந்தது. இதுவல்லாது பல புத்தம் புதிய கார்களும் காத் திருந்தன. எங்களோடு அமெரிக்க நாட்டு மக்கள் பலர் அந்த விமா னத்தில் வந்தார்கள். அப்படி விமானத்தில் வந்தவர்களே எதிர் கொண்டு வரவேற்க, அமெரிக்கத் தூதுவராலயத்தின் அதிகாரிகள் பலரும் அந்த நிலயத்தில் காத் திருந்தார்கள். விமானத்தை விட்டு நாங்கள் இறங்கியதும் எங் களுக்கும் அப்படி ஒரு வசதியான கார் வந்திருக்கும் என்ற நம்பிக் கையில் வெளிவந்தோம். நேபாலச் சுங்க அதிகாரிகள் விமான நிலயத் தில் எங்களேப் பிடித்துக்கொண் டார்கள். பாட்ஞவில் எழுதிக் கொடுத்ததுபோல இவர்களுக்கும் விவரங்கள் பலவும் கொடுத்து, நல்லவர்கள், இந்தியப் பிரஜைகள் என்ற நற்சான்றுப் பத்திரங்களே யும் காட்டி அவர்களுடைய அநுமதியின்பேரில் வெளி வந்தோம்.

விமானக் கூட வாசலில் இடுப் பில் பட்டுடுத்துச் சட்டை அணிந்து போர்வை போர்த்துத் தலேயில் முண்டாசுடன் ஒருவர் எங்களே வரவேற்ருர். அவர்தான் வாசுகி பூஜை செய்யும் பண்டா. ''ஸ்ரீ காசி யிலிருந்து வருவதாக அறிவிக்கப் பெற்ற மஹந்த் தாங்கள்தானே?'' என்று ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதா னத்தை இந்தியில் அவர் கேட்டார். உடன்வந்த ஸ்ரீ காசிமடம் ஏஜண்ட் திரு. கல்யாணசுந்தரம் பிள்ளே, ''ஆமாம். கார் வந்திருக்கிறதா?'' என்ருர். ''எல்லாம் சித்தம்'' என்ருர் அவர்.

''காரை எடுத்து வாரும்'' என் ருேம். விமான இரைச்சலோடு போட்டி போட்டுக்கொண்டு பழைய கார் ஒன்று வந்து நின்றது. ''இதில் சாமான்களே ஏற்றிவிட்டு ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்துக் குள்ள காரை எடுத்து வாருங்கள்'' என்ருேம். ''சாமான்களே இங்கே யாராவது பார்த்துக்கொள்ளட் டும். முதலில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை இதில் அழைத்துச் சென்று இருப்பிடத்தில் விட்டு விட்டு அடுத்த முறை வந்து பொருள்களே எடுத்துச் செல்ல

லாம்'' என்றார் பண்டா. ''அதோ புதிய கார்கள் நிற்கின்றனவே; ஒன்றைத் திட்டம் செய்து வாரும்'' என்றோம். ''அது இயலாது. இந்த நாட்டில் வாடகைக்கு வரக்கூடிய நல்ல கார்களில் நான் கொண்டுவந்திருப்பதும் ஒன்று. பிற கார்கள் தூதுவராலயத்திலிருந்து வந்திருப்பவை'' என்று அவர் சொல்லிவிட்டார். எப்படியோ எல்லாச் சாமான்களையும் அதில் ஏற்றிவிட்டு, ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தோடு இரண்டொருவரை மட்டும் அதில் அமர்த்தி மற்றவர் நடந்து செல்ல முடிவு செய்தோம். ஆனால், சாலை வழியாகச் சென்றாலும் பசுபதி நாதரின் ஆலயம் மூன்று கல் தொலைவுக்குமேல் இருக்கும். சாலை அப்படிச் சுற்றி வருகிறது. நடந்து சென்றாலோ ஒரு கல் தொலைவுக்கு மேல் இராது. நடந்து சென்று நாங்கள் இருப்பிடத்தை அடைவதற்கும் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் வந்த கார் அந்த இடத்தை அடைவதற்கும் சரியாக இருந்தது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தங்குவதற்காகத் திட்டம் செய்திருந்த இடம் மிக மோசமாக இருந்தது. அங்கே ஒருவிதத் தீய நாற்றம் வீசியது. வெளிச்சமும் காற்றுங்கூடப் போதவில்லை. அந்தத் தெரு அமைப்பும் நம் பக்கத்தில் உள்ள சுகாதாரக் குறைவான தெருக்களைவிட மோசமான நிலையில் இருந்தது. அந்தச் சூழ்நிலையில் அங்கே காலெடுத்து வைக்கவும் எங்களுக்குக் கூசியது. ''ஐயா, இதைவிடச் சிறந்த இடம் வேறொன்றும் இல்லையா?'' என்று பண்டாவைக் கேட்டோம். ''என்னால் செய்யக்கூடிய சிறந்த ஏற்பாட்டைத்தான் செய்திருக்கிறேன். இதற்குமேல் என்னாலாவது ஒன்றும் இல்லை'' என்றார் அவர். என்ன செய்வதென்றே எங்களுக்குப் புரியவில்லை. கல்யாணசுந்தரம் பிள்ளை முன் ஒருமுறை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகளுடன் பசுபதிநாதர் தரிசனத்துக்கு வந்திருக்கிறார். கோவில் தலைமைப் பூஜகர் ராவல் ஸ்ரீ சுப்ரமண்ய பட் அவர்களுடைய உபசரிப்பில் தங்கியிருக்கிறார். அந்த நினைவில் அந்தப் பெரியவரிடம் சென்று வசதி செய்து வரலாமென்ற நோக்கத்தோடு பிள்ளை விரைந்து சென்றார். கார் நின்ற இடத்திலேயே ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் இருந்தார்கள். அவருடன் அங்கே சிலர் இருந்தார்கள். நாங்கள் பிள்ளையுடன் சென்றோம்.

ராவல் ஸ்ரீ சுப்ரமண்ய பட் சிறந்த படிப்பாளி; ஒழுக்கம் மிக்கவர்; அமைதியே உருவானவர்; வயசு முதிர்ந்த அநுபவசாலி. அவரிடம் அந்த நாட்டு மக்கள் மிகுந்த மரியாதை காட்டுகிறார்கள். அவர் சொல்வதையெல்லாம் 'உத்தரவு, உத்தரவு' என்று கேட்டு மெதுவாகப் பதில் சொல்லி, பேசி முடிந்ததும் அவருடைய பாதங்களைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு உத்தரவு பெற்றுச் செல்கிறார்கள். அவரும் மிகத் தாழ்ந்த குரலில் மெதுவாக வார்த்தை வார்த்தையாக எண்ணி எண்ணிப் பேசக் கூடியவர். நல்ல பக்திமான். சிவ பூஜையில் சிறந்தவர். சங்கர மதத்தில் ஆழ்ந்த பற்றுதல் உடையவர். 'ஆதி சங்கரர்' என்ற பெயரைக் கேட்டாலே அவருடைய தலை தானே தாழும். பசுபதி நாதரைவிட மேலான தெய்வம் வேறில்லையென்று அழுந்திய நம்பிக்கை உள்ளவர். மூர்த்தியைத் தொட்டு அபிஷேகம் செய்யும் உரிமை உள்ளவர். அவருக்கு உதவியாக நாலு பூஜகர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் ராவல் இல்லாமல் பூஜை வழிபாடுகள் செய்ய முடியாது. மற்றவர் தீபாராதனையும் அர்ச்சனையும் மட்டும் செய்யலாம். பெருமானைத் தொட்டுப் பூஜிக்க ராவல் வராத நாட்களில் அவருடைய அநுமதி பெற்றே மற்றவர் செய்ய முடியும். அந்த நாட்டு மன்னன் சிறந்த சிவபக்தன். 'கோரக்நாதர் துணை! பசுபதிநாதர் துணை!' என்று அந்தத் திருவடிகளையே நம்பியவன். மாதம் ஒரு முறையாவது பசுபதிநாதரின் தரிசனத்துக்கு வரத் தவறுவதில்லை. அப்படி

அவன் வந்தால் உடனிருந்து பூஜை செய்து பிரசாதம் கொடுப்பது பிரதம பூஜகரான ராவல்தான். மற்றவர் உதவியாக அமைய முடியுமே ஒழிய, அரசனுக்கு ஆசி சொல்லிப் பிரசாதம் வழங்குவதென்பது முடியாது. ராவல் அவ்வளவு பெருமை மிக்கவர். ஒரு வருஷத்துக்குச் சராசரி நேபால ரூபாயில் 1½ லட்சம் (பாரத ரூபாயில் கிட்டத்தட்ட 1 லட்ச ரூபாய்க்குச் சமமான தொகை) பெறக்கூடிய பாக்கியம் பெற்றவர். அவர் கன்னடியர். 'அடிக' என்னும் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். 'ராவல் சுப்ரமண்ய பட் அடிக' என்ற பட்டம் பெற்றவர்.

திரு. பிள்ளை ராவல் வீட்டுக்குச் சென்று, வந்த காரியத்தைச் சொல்லி வணக்கம் புரிந்தார். ராவல் சாவதானமாக, "பெரியவர்கள் வந்திருக்கிறார்களா? வரட்டுமே" என்றார். வேறொன்றும் சொல்லவில்லை.

'பெருமைமிக்க ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் இங்கே வந்திருக்கிறார்களே! அவர்களுடைய அருமை தெரியாத ஓரிடத்தில் அழைத்து வரவேண்டியிருக்கிறதே மிகப் பழகியவர்போலப் பிள்ளையவர்கள் இந்த ராவல் வீட்டுக்கு அழைத்து வருகிறாரே; வரட்டுமென்று சொன்னவர், உற்சாகம் காட்டிப் பரபரப்பாக ஒன்றும் சொல்லவில்லையே?' என்று நான் எண்ணினேன். "ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளோடு வந்தவர் தாங்கள்; அது ராவலுக்கு நினைவிருக்குமா?" என்று பிள்ளையிடம் சொல்லிவைத்தேன். அவரும் சென்ற ஆண்டு ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுடன் தாம் வந்து ராவல் வீட்டில் தங்கியிருந்த செய்தியை ராவலுக்கு நினைவூட்டினார். "ஆம்" என்றார் சாஸ்திரியார். அதற்குப் பிறகாவது எழுந்து வந்து ஏற்பாடுகள் செய்வதாகத் தோன்றவில்லை. ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்களை எங்காவது ஒரு நல்ல இடத்தில் அமர்த்திவிடவேண்டும் என்ற ஒரே எண்ணத்தில், காரைத் திருப்பி ராவல் வீட்டுக்குக் கொண்டுவந்து இறக்கினோம். ராவல் தங்கியிருந்த மாடியில் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானமும் எழுந்தருளினார்கள். அப்போதும் ராவல் கலகலப்பாகப் பேசவில்லை. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் இவற்றை ஒன்றும் பாராட்டாது, திருமஞ்சனத்துக்கும் ஆலய வழிபாட்டுக்கும் எழுந்தருளிவிட்டார்கள்.

நானும் திரு. பிள்ளையவர்களும் சற்றுப் பின்தங்கிவிட்டோம். கீழே இறங்கி வந்தோம். ராவல் தம் வீட்டின் முன்னால் இருந்த சிறு கோவில் முன்றிலில் இருந்து சிலரோடு பேசிக்கொண்டிருந்தார். அது நேபால பாஷையில் இருந்ததால் புரியவில்லை. அதிலும் சாந்த குணம் படைத்த அவர் மிக மெதுவாக எதிரே நின்றவரிடம் சொல்லிய செய்தி என்ன என்று புரிந்து கொள்ளக் கூடவில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் இந்தியில் அவருடைய சுபாவமான தாழ்ந்த குரலில் திரு. பிள்ளையிடம் ஏதோ சொல்லிவந்தார். நடுநடுவில் நான் புரிந்துகொள்ள முடிந்தது. 'தங்கள் பிள்ளை ஸ்ரீ காசியில் கூடப் படித்தவர்; சரி - அப்படியே ஆகட்டும்-சந்தோஷம்- நன்றி-வணக்கம்' என்ற இதுமட்டுமே. திரு. பிள்ளை என்னைப் பார்த்து, "தாங்கள் சற்று இருங்கள்; வருகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டார். ராவலோடு பேசிக்கொண்டு நின்றவர்களில் வயசான ஒருவரும் அவரோடு புறப்பட்டார்.

பிள்ளையும் ராவலும் பேசியது அவர்களுடைய குடும்ப நலனைப் பற்றியதாகவும், அன்று மாலை பசுபதிநாதரின் வழிபாட்டைக் குறித்ததாகவும் இருக்குமென்று எண்ணிப் பிள்ளையவர்களுக்காகக் காத்து நின்றேன். இதற்குள் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் திருமஞ்சனத்துக்கு எழுந்தருளியாகி ஒரு மணி நேரத்துக்குமேல் இருக்கும். 'நேரமாகிறதே; நாமும் சென்று பக்கத்திலுள்ள நதியில் நீராடி வழிபாட்டுக்கு ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்துடன் வர வேண்டாமா? பிள்ளையவர்களைக் காணோமே' என்று நினைத்து வருந்தினேன்.

இதற்குள் பிள்ளையவர்கள் இரண்டோர் ஆட்களுடன் வந்தார். மாடியிலிருந்த சாமான்களைக் கீழே இறக்கினர். ''வாருங்கள்; நாமும் போவோம்'' என்றார். எனக்கு எல்லாம் புதிராக இருந்தது. ''எங்கே செல்கிறோம்? எதற்காகச் செல்கிறோம்? இந்தப் பெரியார் நம்மை இங்கே அநுமதிக்க வில்லையா?'' என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனேன். ''நேரமாகிறது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் வந்துவிடப் போகிறார்கள். அங்கே வந்து எல்லாம் கூறுகிறேன்'' என்று பிள்ளை அவசரப்படுத்தி அழைத்துச் சென்றார். சிறிது தொலைவு சென்றதும் மற்றொரு கோவிலை அடுத்துள்ள ஒரு வீட்டில் இரண்டாவது மாடியில் எங்கள் சாமான்களைச் சேர்த்தோம்.

''இந்த இடந்தான் நமக்கு இப்போது திட்டமாகி யிருக்கிறது. இங்கே எல்லாம் வசதியாக இருக்கும். ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்துக்கு எந்த விதக் குறைவும் இல்லாமல் தங்க வசதியாக உள்ள இடம். ஆகவே, அவர்கள் வரும் வரையில், தாங்கள் இங்கே இருங்கள். நான் சென்று அவர்களை அழைத்து வருகிறேன்'' என்று சொல்லிப் பிள்ளை வெளியே சென்று விட்டார். நிகழ்ச்சிகள் எல்லாம் எனக்கு வியப்பூட்டின. கதைகளில் நிகழும் மர்மச் செய்திகள் போல் தோன்றின.

ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தை அழைத்துக்கொண்டு பிள்ளை சற்றைக்கெல்லாம் வந்தார். அவராகவே என்னை அழைத்து, ''இதுவும் ஒரு பூஜகர் வீடுதான். பசுபதிநாதரைப் பூஜை செய்யும் ஐந்து பேரில் இவரும் ஒருவர். பெயர் அனந்த பத்மநாப அடிக. ராவலுக்கு மிகவும் நெருக்கமாக வேண்டியவர். நல்ல பண்பாடுள்ள இளைஞர். இவருடைய குடும்பத்தினரும் கீழே முதல் மாடியில் தான் இருக்கிறார்கள். உயர்குணம் படைத்த நல்ல குடும்பம் இது. அதிதி உபசரணையில் ஆர்வம் அதிகம் உடையவர்கள். ராவல் சொல்லியிருக்கிறார். எல்லாம் வசதியாகவே நடக்கும்; கவலை வேண்டாம்'' என்றார்.

''சரி, ராவலைப்பற்றி மிக உயர்வாகப் பேசினீர்களே! வந்தவர்களை உரிய மரியாதைகளோடு வரவேற்க - பேசவும் கூடத்தான் - அவருக்குத் தெரியவில்லையே! அதற்குக்கூடப் பஞ்சமா?'' என்றேன்.

''அவசர முடிவு உங்களுடையது. விஷயம் முழுவதையும் சொன்னால் நம் செய்கை குறித்து நாம்தான் வருந்தவேண்டி வரும்'' என்று பிள்ளை எச்சரித்தார்.

''அப்படியானால் என்ன செய்தி?'' என்று கேட்டேன்.

''ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் நேபாலத்தில் எழுந்தருளியிருக்கும் செய்தி தெரிவித்ததுமே ராவல் மிக மகிழ்ச்சி கொண்டார். என்றாலும், அவருடைய குடும்பம் இப்போது உள்ள நிலையில் தாமே இவ்வளவு உயர்ந்த பெரிய சாதுவை ஏற்று உபசரித்து அனுப்ப முடியவில்லையே என்ற வருத்தம் அவரை வாட்டி வருகிறது. அவருடைய ஒரே மகன் நோய்வாய்ப்பட்டு எமனோடு போராடும் நேரத்தில், வந்தவர்களை எப்படி உபசரிக்க முடியும்? ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் தம் வீட்டில் தங்கியிருக்கும்போது ஏதாவது விபரீத நிகழ்ச்சி ஏற்பட்டு விட்டால் பெரியோருக்குக் கொடுத்த வாக்குப் பிழைக்குமே, பெரியோர் பெருமை அறிந்து எல்லாம் முறையாக நடக்கவேண்டுமே என்ற கவலைதான் அவரைப் பேச இயலாமல் செய்தது. அதனால் அவரே பத்மநாப அடிகவுக்கு ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தின் பெருமையைச் சொல்லி அவருடைய வீட்டில் மிக வசதியாகத் தங்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொண்டார். அடிகவும் பெரு மகிழ்ச்சி கொண்டு வீட்டுப் பகுதியில் சிறந்த ஒன்றை ஒழித்துக் கொடுத்தார்; ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானத்தை வரவேற்கவும் சில விநாடிகளில் ஏற்பாடுகள் செய்துவிட்டார். தம்முடைய இரங்கத் தக்க நிலையை ராவல்

என்னிடம் கூறி, அடிகவின் வீட்டு ஏற்பாட்டைச் சொல்லி, திருமஞ்சனம் ஆகிவருவதற்குள் சாமான்களை யெல்லாம் அடிக வீட்டுக்கு அனுப்பிவிட்டால் திருவுள்ளம் வருந்தாதபடி செய்யலாம் என்று சொல்லி ஆட்களையும் அனுப்பி உதவி புரிந்தார். ராவவின் ஒரே மகன் காசி இந்து சர்வகலாசாலையில் பி. எஸ்ஸி - யில் முதல்வராகத் தேர்ந்து பாட்னு சர்வகலாசாலையில் எம். பி. பி. எஸ். படித்து அதிலும் முதல்வராகத் தேர்ந்தவர். குணநலம் வாய்ந்தவர். திருமணமும் ஆகியிருக்கிறது. அழகான தோற்றம் உடையவர். பேச்சில் கவர்ச்சியும் நல்ல தொழில் பெருக்கமும் உடையவர். இவ்வளவு சிறந்த தம் மகன் அப்போதோ சிறிது நேரத்துக்குள்ளாகவோ இறந்துவிடக் கூடும் என்ற நிலையில் இருந்தால் அச்சமும் துன்பமும் தந்தையை வாட்டுவது இயல்புதானே? அந்த நிலையிலும் அவர் நன்ருகச் சிந்தித்து இவ்வளவு சிறந்த ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருப்பது பாராட்டத் தக்க செயலல்லவா? அவருடைய மகன் கபஜுரத்தால் வருந்துகிருர். உச்ச வரம்பான 105 - டிகிரிக்கு மேல் காய்கிறது. 'பசுபதிநாதருடைய அருளும், வந்திருக்கும் மகாசாதுவின் ஆசியும் என் மகனைக் காத்து இந்த வயோதிக நிலையில் எனக்கு ஆறுதல் அளிக்க வேண்டும். அந்த மகாபுருஷரிடம் சமயம் பார்த்துச் செய்தி சொல்லி எனக்கும் என் மகனுக்கும் அவர்களுடைய பூரண ஆசியும் பெற்றுத் தரவேண்டும்; என் மகன் பிழைத்திருந்தால், நாளைக் காலையில் நான் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்துக்குப் பசுபதிநாதருடைய தரிசனம் சிறப்பாக நடத்தி வைக்கிறேன். அதற்கு ஆண்டவன் எனக்கு அருள் புரியவேண்டும்' என்று ராவல் என்னிடம் சொல்லியனுப்பியிருக்கிருர். இவ்வளவு நல்ல மனிதரைக் காண்பது அரிது அல்லவா?'' என்று கூறி முடித்தார் பிள்ளை.

''முதலிலேயே இந்த ஏற்பாட்டை அவர் செய்துகொடுத்திருந்தால் இந்த நினைவுகளுக்கு இடம் கொடுத்திரா தல்லவா?'' என்றேன்.

''அதற்கும் பதில் ராவல் சேர்த்துச் சொல்லிவிட்டார். பெரியவர்களை எங்கேயோ ஓரிடத்தில் நிற்க வைக்கலாமா? அவர்களை முதலில் வந்து அமரச் செய்து, விரைவில் வேறு வசதியான ஏற்பாடு செய்துவிட வேண்டுமென்ற எண்ணத்தால்தான் முதலில் தம் வீட்டில் வந்து இறங்கிச் சாமான்களை வைத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்து, அதனிடையில் சிந்தித்து அதைவிட மேலான வசதியுள்ள இடத்துக்கு அனுப்பி வைத்தார். தாம் இருக்கும் இடத்தில் மகான் ஒருவர் வந்து வசதியில்லாமல் வருந்துகிருர்கள் என்ற செய்தி முதலில் அவருக்கு வருத்தம் தந்தது'' என்ருர் பிள்ளை.

பிறகு பசுபதிநாதருக்கு எப்போதெப்போது வழிபாடுகள் நிகழும் என்று விசாரித்து, 'மாலையில் தீபாராதனை மட்டும் உண்டு; தரிசனம் செய்யலாம். பிறகு காலை 8 - 30 - க்குத் தொடங்கி 11 - 30 வரை அபிஷேகமும் அப்புறம் 2 மணி வரை ஆராதனைகளும் நடைபெறும்' என்று தெரிந்துகொண்டோம். இந்த நிலையில், 'ராவலுக்கு எந்த விதமான துன்பமும் நேராது ஆண்டவனருளால் அவருடைய மகன் பிழைத்தெழவேண்டும்; நல்லவர் மனம் வருந்தக்கூடாது. அவர் வந்திருந்து ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்து வழிபாட்டை நிறைவேற்றித் தருவது சிறப்பாகும். அவர் இல்லாத வழிபாடு சிறப்பாக இராது' என்ற முடிவுக்கு வந்தேன்.

மறுநாள் அதிகாலையில் நாங்கள் எல்லாரும் பசுபதிநாதரின் ஆலயத்துக்கு முன்னுல் ஓடும் வாங்மதி நதியில் ஸ்நானம் செய்தோம். தண்ணீர் மிகக் குறைவாக இருந்தாலும், தெளிவாக - ஆனுல் வேகமாக-ஓடிக்கொண் டிருந்தது. காலை வைத்தவுடன் விறைக்கும் குளிர். இரண்டொருவர் முதலில் இறங்கிக் குளிப்பதற்கு அஞ்சினுலும் மனத்தில் தைரியம் கொண்டு இறங்கிக் குளித்தார்கள். அப்படிக் குளித்

தெழுந்து சுமார் அரைமணி நேரம் வரையிலும் நம்முடைய உறுப்புக்கள் சுவாதீனத்துக்கு வருவதில்லை. அவ்வளவு கடுங் குளிர்நீராக இருந்தது. குளித்து அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பசுபதிநாதரைத் தரிசனம் செய்ய மேலே சென்றோம். பெரிய கூட்டம். எல்லாரும் சந்நிதி முன்னிலையில் அடித்து நெருக்கி நின்றுகொண்டு தோத்திரம் செய்தார்கள். அழகான வடமொழித் தோத்திரங்களைச் சொற்சோர்வின்றிப் பாடிப் பரவச நிலையில் அவர்கள் நின்றது கண்கொள்ளாத காட்சி. காலை 4 மணி முதல் மேலைச் சந்நிதி - அதாவது, மேற்கு நோக்கிய திருமுக தரிசனம் - கிடைக்கிறது.

அந்தச் சந்நிதியில் பெரிய நந்தி ஒன்று, மேல் நோக்கிய முகத்தோடு அமைந்திருக்கிறது. மேலே பொன் முலாமிட்டுத் தங்கமயமான அந்த நந்தி படுத்திருப்பது கம்பீரத்துடன் அழகாகக் காட்சியளிக்கிறது.

பசுபதிநாதருடைய கர்ப்பக் கிருகம் நான்கு வாயில்களை உடையது. வெளிச்சுற்று ஒன்று உண்டு. இரண்டாவது திருச்சுற்றில் மேலைச் சந்நிதி நீங்கலாக மற்ற மூன்று புறங்களிலும் சுற்றி வரலாம். அதற்குள்ளே கர்ப்பக்கிருக அமைப்பாகப் பசுபதிநாதர் எழுந்தருளியிருக்கிறார். மேலைச் சந்நிதியில் ஒரு புறம் அந்த நாட்டு அரசியும் மற்றொரு புறம் அரசனுமாக மிக அழகிய வேலைப்பாடமைந்த செப்பு உருவங்கள் கும்பிட்ட நிலையில் அமைந்திருக்கின்றன.

நின்ற திருக்கோலத்தில் எதிரே எழுந்தருளியிருக்கிறார் நந்தி. மரத்தால் அமைந்த கோயில். மலையாளத்துக் கோவில்களைப் போல அடுக்கு நிலைகள் அமைந்த விமானம். அந்த விமான வாரியைத் தாங்கி நிற்கும் சட்டங்களில் அழகிய புராண இதிகாச ஐதிகச் சிற்ப வேலைகள் அமைந்திருக்கின்றன. கூரை முழுவதும் பொன் வேய்ந்திருக்கிறது. சுற்றிலுமுள்ள அடைப்பில் வெள்ளித் தகடு வேய்ந்து மிகமிக நுட்பமான கொடி வேலைப்பாடு செய்திருக்கிறது. சுவாமி கர்ப்பக்கிருக விதானத்தில் வெள்ளித் தகடு பதித்து மிகக் கைதேர்ந்த அழகிய வேலைப்பாடு செய்திருக்கிறது.

சந்நிதியில் புழங்கும் பாத்திரங்களும் பிற உபகரணங்களும் வெள்ளி. பெருமானுடைய ஐந்து திருமுகங்களுக்கும் தங்கக் கிரீடங்களும், சர்ப்பாபரணங்களும், குடைகளும், விலை மதிப்பு அதிகமுள்ள திருவாபரணங்களும் சார்த்தியிருக்கிறார்கள். ஐந்து திருமுகங்களை உடையவனாகப் பெருமான் எழுந்தருளியிருக்கிறான். ஈசானம் (ஊர்த்துவ முகம்) நீங்கலாக மற்ற முகங்கள் லிங்கத் திருவுருவில் அமைந்திருக்கின்றன. ஈசான முகம் மறைவாக இருக்கிறது. நான்கு திசைகளையும் நோக்கியவையாக நான்கு திருமுகங்களும் அமைந்திருக்கின்றன.

பசுபதிநாதராலயம் வாங்மதி (பாக்மதி), அதாவது, சரஸ்வதி நதியின் மேல்கரையில் அமைந்திருக்கிறது. ஆறு வடக்கிலிருந்து தென்முகமாக ஓடுகிறது. பசுபதிநாதர் திருச்சுற்றில் பல மூர்த்தங்கள் அமைந்து விளங்குகின்றன. கால பயிரவர் மிகுந்த உக்கிரமாக எழுந்தருளியிருக்கிறார்; நல்ல தைரியசாலிகளும் பயப்படக்கூடிய உருவில் பசுபதிநாதருடைய தென்முகத் திருவாயிலுக்கு முன்னால் உள்ள திருமண்டபத்தில் மேற்கு நோக்கி நின்ற கோலத்தில் காட்சி வழங்குகிறார். ஆடு, கோழி பலி உண்டு. வடக்கு நோக்கிய திருவாயிலுக்கு முன்னே திரிசூலமும், அதில் கட்டிய தமருகமும் அமைந்திருக்கின்றன. அவை இரண்டுக்கும் தங்கமுலாம் பூசியிருக்கிறது. சுமார் 30 அடி உயரமுள்ளது திரிசூலம்; அதற்கேற்ற அளவுள்ளது தமருகம். ஈசானத்தில் வாசுகிநாதர் எழுந்தருளியிருக்கிறார். கிழக்கு வாசலை அடுத்துப் பாலகண்டீர பாலாஜி (பாற்கடல் பள்ளி கொண்ட பெருமாள்) எழுந்தருளியிருக்கிறார். புராண அறை, பஜனை மண்டபம் போன்ற பல மண்டபங்களும் இருக்கின்றன. பல சாதுக்களும் அன்பர்களும் கூடிப்

புராண படனம் செய்கிறார்கள். நித்திய புராண படனம் செய்பவர் ஒருவர். பஜனை செய்வோர் நாலைந்து பேர் உண்டு. மேளம் முதலிய வாத்திய மண்டபமும் உண்டு.

பசுபதிநாதரைத் தரிசித்துவிட்டு இருப்பிடம் வந்து சேர்ந்தோம். காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு சக்தி ஆலயங்களுள் சிறப்பானதும் நேபால நாட்டினர் மிகுதியாகச் சென்று வழிபடுவது மான குஹ்யேசுவரி ஆலய தரிசனம் செய்யப் புறப்பட்டோம். மலையில் உயர ஏறிச் செல்ல வேண்டும். அரசர்களும் மற்றவரும் செல்ல வேண்டி யிருப்பதால், அழகாக அகலமான படிக்கட்டுகளும் கைப்பிடி சுவரும் கட்டி விட்டிருக்கிறார்கள். அங்கங்கே தண்ணீர்க் குழாய்கள் அமைத்திருக்கிறார்கள். இரு புறமும் அடர்ந்த சோலை நம் களைப்பை மாற்றுகிறது. தேவியின் ஆலயம் ஒரு கல் தொலைவு இருக்கலாம். நடுவில் கோரக்கர் (கோரட்சகர்) ஆலயம் இருக்கிறது. வட நாட்டில் எல்லாரும் சென்று திருமேனி தொட்டு வழிபாடு செய்வது போலப் பசுபதிநாதர், கோரக்கர் ஆலயங்களில் செய்ய முடியாது. குறிப்பிட்ட பூஜகர்களைத் தவிர மற்றவர் எவரையும் கர்ப்பக்கிருகத்துக்கு உள்ளே விடமாட்டார்கள். சந்நிதி திறந்திருக்கும்போது ஆலயங்களைப் புகைப்படம் எடுக்கவும் விடமாட்டார்கள். கூர்க்கக் காவலாளிகள் விழிப்புடன் காத்து வருகிறார்கள். கோரக்கர் சந்நிதி தாண்டிக் குஹ்யேசுவரியின் ஆலயம் சென்றடைந்தோம்.

குஹ்யேசுவரி ஆலயத்தின் மேலே விமான அமைப்புக் கிடையாது. திறந்த வெளிதான். இருந்தாலும் சுற்றிலும் சுமார் 10 அடி உயரமுள்ள மர அடைப்பு அமைத்து, மேலே தகடு வேய்ந்திருக்கிறது. நான்கு மூலைகளிலிருந்தும் நான்கு பெரும்பாம்புகள் சீறியெழுந்து மேலே மண்டப அமைப்பாகப் பின்னிக்கொண்டு தலையை நான்கு புறங்களிலும் நீட்டி விழிப்புடன் பார்த்திருப்பதுபோல வேலைப்பாடு செய்திருக்கிறது. குஹ்யேசுவரி சந்நிதியில் நேபாலிகள் பூஜை செய்து வருகிறார்கள். இங்கே எருமை, ஆடு, கோழி முதலியவை பலியிடுவதும் உண்டு.

குஹ்யேசுவரியின் அருகில் பயிரவர் பிரதிஷ்டை இருக்கிறது. பயிரவர் அருவநிலையில் இருக்கிறார். ஸ்ரீசக்ர மேரு ப்ரஸ்தாரமாக ஸ்ரீதேவி விளங்குகிறாள். சக்கரத்தின் நடுவில் அஷ்டதள பத்மமாக மூர்த்தம் அமைந்திருக்கிறது. (முக்கோண வரைவுப் பகுதியில்) ஒரு கை நுழையக்கூடியதான துளை இருக்கிறது. அதன்மேலே தாமரை அரும்பு போன்ற ஒன்று செய்துவைத்து அந்தத் துளையை மூடியிருக்கிறார்கள். தாமரையரும்பின் தலைப்பக்கத்தில் முக்கோணம் அமைந்திருக்கிறது. இங்கே எல்லாரும் தேவியின் பிரதிஷ்டையைத் தொட்டுப் பூஜை செய்யலாம். பலரும் அப்படி வழிபட்ட பிறகு நடுவிலுள்ள அரும்புப் பகுதியில் தலை தாழ்த்தி அதில் வைத்து வணங்குகிறார்கள். பிறகு துளையை மூடியிருக்கும் பகுதியை எடுத்துவிட்டுத் துளையில் கையை விட்டு அதிலுள்ள தீர்த்தத்தை எடுத்துத் தலையில் தெளித்துக் கொள்ளுகிறார்கள். சிறிது உட்கொள்ளவும் உட்கொள்ளுகிறார்கள். இதுதான் முக்கியமான பிரசாதம். அந்தச் சந்நிதியில் ஏதாவதொன்றை விரும்பிப் பிரார்த்தனை செய்துகொண்டு அம்பிகையின் தோத்திரங்களான லலிதா திரிசதி, ஸப்தசதி போன்றவற்றுள் ஏதாவதொன்றைப் பக்தி சிரத்தையோடு பாராயணம் செய்துவந்தால் நினைத்த காரியம் குறிப்பிட்ட சில நாட்களில் கைகூடிவிடும் என்று நம்புகிறார்கள். அப்படியே பலரும் அந்த மேடைகளில் உட்கார்ந்து பாராயணம் செய்துகொண் டிருப்பதையும் கண்டோம். இந்த ஆலயத்தைப் போலவே பசுபதிநாதராலயத்துக்கு மிக அருகில் வத்ஸலேசுவரி ஆலயமும், காட்மண்டு நகருக்கு அருகில் ஜயவாஹேசுவரி ஆலயமும் விளங்குகின்றன. இந்தத் தரிசனத்தை

முடித்துக்கொண்டு மீண்டும் பசுபதிநாதத்துக்குச் சென்றோம்.

நாங்கள் சென்ற சமயத்தில் ராவல் சுப்ரமண்ய சாஸ்திரியும் மற்ற நால்வரும் ஆக ஐந்து பூஜகர்கள் ஐந்து முகத்துக்கும் நின்று வழிபாடாற்றிக்கொண்டிருந்தார்கள். அது அபிஷேக நேரம். ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தைக் கண்டவுடன் ராவல் சுப்ரமண்ய சாஸ்திரிக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. அன்று காலையில் பசுபதிநாதர் தரிசனம் முடிந்ததும் அவருடைய வேண்டுகோளின்படி ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானமே ராவல் வீட்டில் அவருடைய மகனைப் பார்ப்பதற்கு எழுந்தருளினார்கள். ராவலும் மிக்க மலர்ச்சியோடு வரவேற்றுத் தம்முடைய பூஜையறைக்கு அவரை அழைத்துச் சென்றார். அவருடைய பூஜையறையும் பசுபதிநாதம்போலவே அமைந்திருக்கிறது. வெள்ளியில் நல்ல விமானம் அமைத்து அதில் பெருமானை வீற்றிருக்கச் செய்து பரவி வருகிறார். நோய்வாய்ப்பட்டிருந்த தம் புதல்வரைப்பற்றி ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்திடம் விண்ணப்பித்துக்கொண்டார். தம் வீட்டில் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தின் திருவடி பட்ட மாத்திரத்தில் மகனின் காய்ச்சல் குறைந்துவிட்டதாகக் கூறி, ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தின் அருளாற்றலைப் போற்றிய சாஸ்திரியார், ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தின் திருக்கண் பார்வைக்கும் தம் புதல்வன் ஆளாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்திலும் அப்படியே இசைந்து அவருடைய புதல்வர் படுத்திருக்கும் அறைக்கு எழுந்தருளினார்கள். படுக்கையிலிருந்து எழ முடியாத நிலையிலே கை கூப்பி வணங்கினார் சாஸ்திரியாரின் பிள்ளை. ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தில் ஸ்ரீ சொக்கநாதர் சேவடி நினைந்து திருநீற்றையெடுத்து அவர் நெற்றியிலிட்டு அருள் பாலித்தார்கள். இருப்பிடத்துக்கு மீண்ட பின், ராவலுடைய புதல்வரின் உடல்நிலையில் இன்னும் சிறிது குணம் ஏற்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது.

அபிஷேக ஆராதனைக்காக இரண்டாம் முறையாகப் பசுபதிநாதர் சந்நிதிக்குச் சென்றதும் ராவல் முன்னைவிட அதிக மலர்ச்சியோடு அபிஷேக ஆராதனைகளைச் செய்து முடித்து ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தில் கொடுத்த பொன்னுடையையும் சார்த்தி வழிபாடாற்றினார். பிரசாதம் கொடுக்கும்போது, பெருமான்மீது சார்த்திய திருவாபரணங்களில் முக்கியமானவற்றை எங்களுக்கு எடுத்துக் காட்டினார். எல்லாவற்றையும் விட ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைக் கவர்ந்தது ஏகமுக ருத்ராட்சமே. அது வேப்பங்கொட்டையளவுக்குச் சுமார் ஓர் அங்குலம் நீண்டிருக்கிறது. ஒரே ஒரு கோடு அதில் இருக்கிறது. உருவில் அது மிகச் சிறியதாக இருந்தாலும் கிடைப்பது அருமையிலும் அருமை. அது சிவபரம்பொருள் ஏகனாகி நிற்கும் தத்துவத்தை உணர்த்துவதாகவும், சர்வ மங்களத்தையும் பெருமான் திருவடிப் பேற்றையும் அளிக்கவல்லதென்றும், அந்த ஒரு ருத்ராட்சம் எந்த இடத்தில் இருக்கிறதோ அங்கே குறைவேதும் இல்லாது நிறைவுற்று விளங்கும் என்றும் ராவல் சொன்னார். அதன் மதிப்புச் சுமார் 14 லட்சம் இந்திய ரூபாய் என்றும், அந்த அளவு பணம் கொடுப்பதாக இருந்தாலும் அத்தகைய ஏகமுக ருத்ராட்சம் கிடைப்பது அரிதென்றும், பெருமானுக்கு இங்கே இருப்பதுபோல இந்த நாட்டு மன்னனிடமும் ஒன்று இருப்பதாகவும், அரச நகைகளில் அது முக்கியமானதென்றும், அரசன் அதை அகலாது அணிந்துகொண்டிருப்பானென்றும் எங்களுக்கு எடுத்துச் சொன்னார்.

அன்று உணவுக்குப்பின் காட்மண்டு நகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். காட்மண்டுவில் அரசன் அரண்மனை, பல ராணாக்களின் அரண்மனைகள், பாலகண்டீர பாலாஜி, 21 நீருற்றுக்கள், ராணி திருக்குளம், காட்மண்டு என்ற

பெயருக்குக் காரணமான காஷ்ட மண்டபம், அங்கே உள்ள விநாயகர் ஆலயம் முதலிய எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு, ராணு ஜங் பகதூரின் சிலை முதலியவற்றையும் பார்த்துவிட்டு, தேவபட்டம் வந்து சேர்ந்தோம். காட்மண்டு நகரில் நாங்கள் சுற்றி வரும்போது விமானக் காரியாலயத்துக்கும் சென்று எங்களுக்கு விரைவில் பாரதம் திரும்பப் பிரயாணவசதி எந்தத் தேதியில் அமையக்கூடும் என்று கேட்டுத் தெரிந்துகொண்டோம். மறு நாளே வசதி இருப்பதாகவும், அது தவறினால் பிறகு மேற்கொண்டு சில நாட்கள் செல்லுமென்றும் செய்தி கிடைத்தது. மறு நாளே திரும்புவதென்றும் முடிவுக்கு வந்து பதிவும் செய்துகொண்டோம். பாட்னாவிலிருந்து ஸ்ரீ காசிக்கு அப்படியே செல்வதற்கு வசதி செய்து தரவேண்டுமென்றும் இங்கே சொல்லிப் பதிவு செய்யச் செய்தோம். பிரயாணச் சீட்டுத் தாங்கள் கொடுப்பதற்கில்லையென்றும், ஆனால் பாட்னாவிலிருந்து ஸ்ரீ காசி செல்லுவதற்கு இடம் இருந்தால் வசதி செய்து கொடுக்கும்படி பாட்னாவுக்குச் செய்தி அனுப்புவதாகவும் சொன்னார்கள். இந்த ஏற்பாடுகளைச் செய்துகொண்டு தேவபட்டம் திரும்பினோம். மாலைக்கடன்களை முடித்துவிட்டுப் பசுபதிநாதரைக் தரிசனம் செய்துகொண்டு ராவல் வீட்டுக்கு நானும் பிள்ளையவர்களும் மீண்டும் சென்றோம். அவருடைய குமாரரின் உடல்நிலை குறித்து விசாரித்துவிட்டு, க்ஷேத்திர மகிமை, ஸ்தல மகிமைகள் தெரியச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். ராவல் மகிழ்ச்சியோடு எங்களுக்கு 'நேபால மகாத்மியம்' என்ற புத்தகத்தை அளித்துச் சில விளக்கங்களும் கூறினார்.

''புத்தர் திருவவதாரம் செய்த பிறகு இந்த நாட்டு மக்களின் வைதிக மத உணர்வு கெட்டு எல்லாரும் பௌத்தர்கள் ஆனார்கள். சைவ வைணவ சக்திப் பிரபாவம் உள்ள ஆலயங்களிலும் கூடப் பௌத்த மதாசாரப்படி வழிபாடு நடைபெறுவதாயிற்று. சாக்கியம் மிக மேலோங்கி நின்றது. ஆனால் பௌத்தர்களின் காலத்துக்குப் பிறகு அதன் அஹிம்சா தத்துவங்கள் மறைந்து, பூட்டானியருடைய மது மாமிச வெறி நிறைந்த பூஜைகள், வழிபாடுகள் மிகுதி ஆயின. நரபலி முதலிய எல்லாக் கொடுமைகளும் நிறைந்து நின்றன. சைவமும் கெட்டுச் சாக்கியமும் கெட்டது.

''சங்கரர் திருவவதாரம் செய்து திக்விஜயம் பண்ணிக்கொண்டு இந்த நேபால நாட்டுக்கு வந்து சேர்ந்தார். அவர் சென்ற இடத்திலெல்லாம் சைவமத நிர்த்தாரணம் செய்து மக்களை நல்வழிப்படுத்தி அத்வைத சித்தாந்தம் உலகில் சிறக்கப் பிரசாரம் செய்து வந்தார். அங்கங்கே மூடிக் கிடந்த பல ஆலயங்களுக்கும் சென்று வழிபட்டு, பழைய வைதிக சமயத்தைப் பின்பற்றி நடந்து வரும்படி மக்களைப் பணித்து வந்தார்.

''இங்கும் பசுபதிநாதரின் தரிசனத்துக்காக இந்த ஆலயத்துக்கு எழுந்தருளினார். அதுவரையில் பாரஸ்நாதராக எழுந்தருளியிருந்த மூர்த்தி தரையில் மிக ஆழத்தில் அமைந்திருந்தபடியால், அதை அப்படியே வைத்து மூடி போட்டு ஆலயம் கட்டி இப்போதுள்ள பஞ்சமுக பசுபதிநாதரைச் சக்தி ஆகமத்தின்படி பிரதிஷ்டை செய்து, சிறப்பு வழிபாடுகள் நடத்தி, மக்களையும் நன்னெறிப்படுத்தி, சிவ விஷ்ணு ஆலயங்களில் பலியையும் மது மாமிசப் படைப்பையும் அறவே நிறுத்தும்படி பணித்தார். அதோடு பூஜை முறைகளையும் திருத்தி வைதிக சம்பிரதாயமாக அமைத்தார். அன்று தொட்டு இன்றுவரைக்கும் அப்படியே நடந்து வருகிறது'' என்று கூறி முடித்தார்.

பூஜை செய்யும் காலத்தில் பூஜகர்கள் இடுப்பில் பட்டுடுத்தி மேலே கம்பளிச் சட்டை போட்டு அதற்குமேல் குறுக்காக மேல் வேட்டி போட்டு இடுப்பில் சுற்றிக் கட்டிக்கொள்வார்கள். இடுப்பிலே ஒரு சுற்று வேட்டி; தலையிலே ஒரு குல்லா. மேலே போட்டிருக்கும்

கம்பளி ரத்தச் சிவப்பாக இருக்கும். குல்லா காவி நிறத்தில் இருக்கும். பூஜகர்களுக்கு வேண்டிய ருத்திராட்சம், விபூதி, சந்தனம் முதலியவையும் அணிந்து பார்ப்பதற்குச் சந்நியாசக் கோலமாகக் காட்சியளிப்பார்கள். அபிஷேகம் செய்யும்போது ஒரு சிறு கைக் குழந்தைக்கு நீராட்டுவது போலச் சிறு கெண்டியில் அபிஷேக திரவியங்களை எடுத்துக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாக ஆர அமர நிறுத்தி நிறுத்திச் செய்கிறார்கள். அலங்கார காலத்தில் பெருமானைக் காண்பதைவிட அபிஷேக காலத்தில் பெருமானுடைய கோலம் ஆபரணங்கள் இல்லாத நிலையிலேயே மிக அழகாகக் காட்சி அளிக்கிறது.

காலை 4 மணிக்கு மேற்கு வாசல் திறக்கும். 9 மணிக்கு ஸ்நான பூஜாரம்பம். மணி 9-30 இலிருந்து 11-30 வரை ருத்ராபிஷேகம், பஞ்சாமிர்தாபிஷேகம். 12 மணிக்குப் பூர்ணகலசாபிஷேகம். மணி 12-இலிருந்து 2 மணி வரையில் சிரசில் (ஊர்த்துவமுகத்தில்) சந்தனம் அப்பி ஸ்ரீ சக்ரமிட்டுக் கடுக ஸஹஸ்ர நாமார்ச்சனை, 2 மணிக்கு நைவேத்தியம் - தூத்பேடா, கேசர்பாத், அவல், வாழைப்பழம். 2-30 மணிக்குச் சாதம், பருப்பு, பாயசம், கறி நைவேத்தியம். 3 மணிக்கு ஷோடசோபசாரம், தீபாராதனை, கதவு அடைப்பு. மாலை 6 மணிக்குக் கதவு திறந்து ஆரத்தி. காலை 4 மணி முதல் 9 மணிவரையில் நேபாலப் பிராமணர்கள் கதவு திறந்து வைத்துப் பூஜா உபகரணங்களைச் சேகரம் செய்வார்கள்.

அன்பர்கள் அப்போதிருந்தே ஏராளமாக வந்து தரிசனம் முடித்துக்கொண்டு அவரவருடைய வேலைக்கு விரைந்து செல்வார்கள். பெருமானுடைய கால தரிசனம் விரும்புவோரும் பிரார்த்தனைக்காரர்களும் 8-30 மணியிலிருந்தே வந்து கூடுவார்கள். 9 மணிக்கு நான்கு திருவாயில்களும் திறக்கும். அந்த நேரத்தில் ஐந்து பூஜகர்களும் வந்து சேருவார்கள். நேபாலப் பிராமணர்களே அப்போதும் அவர்களுக்கு உதவியாகத் தொலைவில் நிற்பார்கள். பிற்பகலில் திருக்காப்பிட்டு மாலைத் தரிசனத்துக்குக் கதவு திறக்கும்போது, பூஜகர் ஐவரில் ஒருவர் ஆரத்தி (தீபாராதனை) செய்ய வருவார். அந்த நேரத்திலும் நான்கு வாயில்களும் திறந்திருக்கும். இரவு 8 மணிக்கு மறுபடியும் காப்பிடல் நடக்கும்.

மாத பௌர்ணமி, சிவராத்திரி, தநுர்மாத பூஜை, ஆவணி விசேஷ பௌர்ணமி, பவித்திரோற்சவம் முதலிய ஏறுபடிகளும் உண்டு. பௌர்ணமி யன்று இரவு 9 மணி முதல் 12 மணி வரை வழிபாடுகள் நடைபெறும். நெய், பால், சர்க்கரை, பஞ்சாமிர்தம் - ஐந்தைந்து மணு. நம் நாட்டு அளவுக்கு 5 கல அரிசி வடியல். தெற்கு நோக்கிய திருமுகத்துக் கெதிரே இட்டிருக்கும் தாமிரப் பதிவில் அன்னம் கொட்டி நிவேதனம். பஞ்சபட்ச பரமான்னமும் (பாவாடை) உண்டு. இரவு 1 மணிக்குப் பூஜை முடியும். மகா சிவராத்திரிக் காலத்தில் 4 காலமும் பௌர்ணமி பூஜைத் திட்டத்தில் வழிபாடுகள் நடைபெறும். தநுர் மாதத்தில் இரவு 12 மணிக்கு வழிபாடுகள் தொடங்கிச் சூரியோதய காலத்துக்கு முன்னே முடியும்.

வாங்மதி நதிக்கரையில் நூற்றுக் கணக்கான சிறுசிறு ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. பல அரசர்கள் அவரவர் நினைவாகப் பல பிரதிஷ்டைகள் செய்திருக்கிறார்கள். பசுபதிநாதரின் ஆலயத்துக்கு முன்புறம் வாங்மதி நதிக்கரையில் ராஜராஜேசுவரி கோயில் வரைக்கும் நீள இரு கரைகளிலும் படிகள் கட்டியிருக்கிறார்கள். மேல் கரையில் சிறு சிறு மேடைகள்.

பசுபதிநாதரின் சந்நிதியில் இரண்டு மேடைகள் இருக்கின்றன. ஒன்று அரச பதவியிலுள்ளவர் இறந்துவிட்டால் தகனம் செய்வதற்கு; மற்றது மந்திரி (ராணு) பதவியிலுள்ளவரின் தகனத்துக்கு. தெற்கே இரண்டு பாலங்கள். இவற்றைத் தாண்டி இவை போலவே வேறு பல தகன மேடைகளும் இருக்கின்றன. காசி

யைப் போலவே இங்கேயும் பிணங்கள் எரிந்துகொண்டே இருக்கும். ஒன்று எரிந்து சாம்பலாகும் போதே மற்றொன்று அந்த இடத்துக்குக் காத்து நிற்கும். காசி முத்தி நகரம்; அங்கே இறப்பது முத்தி கொடுக்கும் என்று பலரும் நம்புவது போல, இங்கே பக்தர்கள் தாங்கள் இறக்கும் தறுவாயில் தங்கள் பாதங்கள் வாங்மதி நதியில் தோயும்படி இடச் சொல்கிறார்கள். பிறகு அவர்கள் கூட்டை விட்டு உயிர் பறந்ததும், அவர்களை அங்கே கரையிலுள்ள மேடையிலிட்டுத் தகனம் செய்கிறார்கள். இதனால் தங்களுடைய பாவங்கள் வாங்மதி நதி ஸ்பரிசத்தால் கழுவப்பெற்று ஆன்மா முத்தி அடையும் என்று நம்புகிறார்கள்.

சுற்றிலும் அடர்ந்த காடும் நடுவில் ஆறும் இரு கரைகளிலும் பெரிய சிறிய ஆலயங்களுமாக அமைந்து விளங்கும் அந்த இடத்தில் சுடலை அமைந்திருப்பதையும், எப்போதும் அங்கே தகனகாரியம் நடந்துகொண் டிருப்பதையும் கண்டால்,

கோயில் சுடுகாடு
கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி
தான்தனியன் காணேடி

என்ற திருவாசகப் பகுதி நமக்கு நினைவு வருகிறது.

அனந்த பத்மநாப அடிகளிடம் இரண்டாம் நாள் இரவு பேசிக் கொண் டிருக்கும்போது, "நேபால நாட்டிலுள்ள இந்தக் கோயிலுக்குத் தாங்கள் எப்படிப் பூஜகராக வந்து சேர்ந்தீர்கள்? வட கன்னட நாட்டுத் திருக்கோகர்ணத்திலிருந்து இங்கே வரக் காரணம் என்ன? அங்கே உங்களுக்குப் பூஜை முறை இருப்பதாகத் தெரிகிறதே" என்று பொழுதுபோக்காகச் சில கேள்விகளைக் கேட்டு வைத்தேன்.

அடிகள் சொன்னார்: "உண்மை தான். வட கன்னட நாட்டில் பிராமண வகுப்பில் எங்களுக்கு நல்ல மதிப்பு உண்டு. நாங்கள் தமிழில் வழங்கும் 'அடிகள்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்று வாழ்கிறோம். 'பட்,' 'சாஸ்திரிகள்' என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. எங்கள் குடும்பம் படித்த குடும்பம். சங்கரர் இந்த நாட்டுக்கு வருமுன்பு பசுபதிநாதருக்கு நரபலி, மது மாமிசம் முதலியவை படைத்து வழிபாடுகள் செய்து வந்தார்கள்.

"சங்கரர் வருவதற்கு முன்பு, இந்த நாட்டில் சந்நியாசிகள் பெருமானைப் பூசித்து வந்தார்கள். இங்கே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சாதிப் பிரிவினைகள் இருந்து வருகின்றன. ஆயினும் எல்லாரும் மது மாமிசம் அருந்தக் கூடியவர்கள். பெருமானுக்குப் பலியிடுவதோ மது மாமிச நிவேதனமோ கூடாது என்று சங்கரர் நிறுத்திவிட்டார். அந்தப் பழக்க வழக்கங்களுடைய இந்த நாட்டுப் பிராமணர்கள் பெருமானைத் தொட்டுப் பூஜிப்பது அநுசிதம் என்று அப்போதிருந்த அரசனிடம் எடுத்துச் சொல்லிச் சுத்த சைவர்களாக உள்ள பிராமணர்கள்தான் பூஜை செய்ய யோக்கியதை உடையவர்கள் என்பதையும் அரசனுக்குத் தெரிவித்தார்.

"அப்படிச் சுத்த சைவர்களாக உள்ளவர்கள் எங்கே யிருந்து கிடைப்பார்கள் என்று கேட்ட அரசனுக்கு, "விந்தியப் பிரதேசத்தின் தெற்குப் பகுதியில் உள்ள பிராமண வகுப்பார் நெறியில் சிறந்தவராகவும் (ஸ்மார்த்த வைஷ்ணவர்கள்) சைவர்களாகவும் இருப்பார்கள். அங்கே இருந்து ஒழுக்கத்தில் சிறந்த நல்ல அறிஞர்களைப் பொறுக்கி யெடுத்துப் பூஜைக்கு வைத்துக்கொள்ளலாம்" என்று அவர் ஒரு திட்டமும் வகுத்துக் கொடுத்தார். முதலில் கன்னடப் பிரதேசத்தில் உள்ளவர்களில் தேர்ந்தெடுக்கலாம். அங்கே கிடைக்கா விட்டால் அடுத்துத் தமிழ் நாட்டில் உள்ளவர்களில் தேர்ந்தெடுக்கலாம். அதுவும் பொருந்தா விட்டால், ஆந்திர நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கலாம். இந்த மூன்றிலும் பொருத்தமாக யாரும் கிடைக்காவிட்டால், விந்தியத்துக்குத் தெற்குப் பகுதி

லுள்ள எந்த நாட்டு வைதிகப் பிராமண குலத்திலுள்ளவர்களி லிருந்தாவது பொருத்தமானவரை எடுக்கலாம்.

''அதற்கு ஒரு தேர்வு வைத்து அவர்களுடைய அறிவின் திறத் தைச் சோதிக்க வேண்டும். இந்த நாட்டு ராஜகுருவின் முன்னிலை யில் அந்தத் தேர்வு நடைபெற வேண்டும். அதில் தேர்வோருக் குப் பாசுபதாஸ்திர மந்திர உப தேசம் செய்யவேண்டும். அப்படி உபதேசம் செய்வதற்குமுன் மூன்று நாட்கள் அவர்களை உப வாசத்தில் இருத்தித் தீட்சாக் கிரமங்கள் எல்லாம் செய்து முடித் துப் பிறகு பாசுபதாஸ்திர மந்திர உபதேசம் செய்வித்துப் பூஜக ராக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

''இப்படிப் பசுபதிநாதருடைய ஐந்து முகத்துக்கும் முன் ஐவர் நின்று வழிபட வேண்டும். ஐவருள் ஒருவர் பிரதம ஆசாரியராக இருக்க வேண்டும். ராஜகுருவின் முன்னிலையில் நடக்கும் தேர்வில் அந்தப் பிரதம ஆசாரியரும் இருக்கவேண்டும். அவருடைய சொல்லுக்கு மதிப்பளிக்கவும் வேண்டும். வருகிற பூஜகர்களுக் குப் பரம்பரைப் பாத்தியம் எதுவும் இருக்கக்கூடாது.

''அப்படிப் பூஜை செய்து வருகிறவர்கள் நியமம் தவறாத வாழ்க்கை உடையவர்களாய் - நித்திய வழிபாடுகளுக்குத் தவறாது செல்லக் கூடியவர்களாய் - இருக்க வேண்டும். அவர்கள் ஏதாவது ஒரு நாள் ஏதோ ஒரு காரணத் தால் பூஜைக்குச் செல்லாமல் இருந்தால், மற்ற நால்வரும் பூஜையை முடிக்கலாம். பூஜைக் குச் செல்ல முடியாது தங்கியவர், மறு நாள் க்ஷவரம் செய்துகொண்டு ஆயிரத்தெட்டுக் காயத்திரி ஜபம் செய்து அன்று முழுவதும் உபவாசம் இருந்து பூஜைக்குச் செல்ல வேண்டும் என்று சங்கரர் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார்.

''அதன்படியே இதுவரைக்கும் நடந்துவருகிறது. நவீன காலத்தில் செய்தித்தாள்கள் வசதியாக இருப் பதால், பூஜகர் தேவைப்படும் போது அவற்றில் விளம்பரம் செய் வார்கள். அதன்படி மனுச் செய்து கொள்வோரை அழைத்து இப் போது தேர்வு நடத்துகிறார்கள். ஆசாரியரின் திட்டப்படி பூஜைக் குச் செல்லுவதில் ஏதாவது தவறு ஏற்பட்டு அதற்குச் செய்யவேண் டிய பரிகாரங்களைச் செய்து கொள்ளாமல் வழிபட வந்து விட்டால், அது நிகழ்ந்த ஒரு வாரத்துக்குள், அபசாரம் செய்த வர் உயிர் இழக்க நேரிடுகிறது; அல்லது வேறு ஏதாவது ஒரு பெரிய அசம்பாவிதமான துன்பம் ஏற்பட்டு இந்த நாட்டை விட்டே அவர் அகன்றுவிடும் நிலை ஏற்பட்டு விடுகிறது. இது கண்கூடு.

''இந்தக் காரணங்களால் நாங் கள் ஒழுக்கம் குன்றாது எல்லா வற்றையும் பயபக்தியோடு செய்து வருகிறோம். ஆண்டவனின் அருள் எங்களுக்கு நிறைய உண்டு. அருளியலில் அரசனும் வணங்கும் வாழ்வும், உலகியலில் நல்ல வரு வாய் உள்ள தொழிலுமாக இது அமைந்திருக்கிறது. எங்கள் பிரதம பூஜகருக்கு (ராவலுக்கு) ஒரு வருஷத்துக்கு 10 ஆயிரம் சேர் நெல் வரக்கூடிய நிலமும், நல்ல வீடும், ஆட்களும் எல்லாம் ஏற் பாடாகக் கிடைத்து வருகின்றன.''

''அவருக்கு அப்படியானால், தங் களைப் போன்றாருக்கு எப்படியோ?'' என்றேன்.

''எங்களுக்கும் நல்ல வசதி உண்டு. சாதாரணமாக ஆண் டொன்றுக்குப் பாரத ரூபாய் 5000 வருவாய் வரக்கூடிய நில மும், பிற சொத்துக்களும் விட் டிருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு உத்தேசமாக என்னுடைய எல் லாச் செலவுகளும் போக ரூ. 2000, 3000 என்னுடைய ஊரில் உள்ள வர்களுக்கு அனுப்பி வருகிறேன். நாங்கள் இப்படிப் பணம் அனுப்பு வதற்கு அரசாங்கமும் உதவுகிறது. நாணயமாற்றில் எங்களுக்குச் சில சலுகைகள் உண்டு. அங்கே அனுப் பும் தொகைகளை என்னுடைய மிக நெருங்கிய உறவினர் ஒருவர் எனக்காகச் சேமித்து வைக்கிறார்'' என்று அவர் விடை அளித்தார்.

நேபாலத்திலிருந்து ஸ்ரீ காசிக்கு விமான மூலம் திரும்பிவந்து சேர்ந்தோம். ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ காசியில் எழுந்தருளியிருக்கும் செய்தி கேட்டு வடநாட்டவர் சிலரும், தமிழ் நாட்டினர் பலரும் வந்து கண்டு வணங்கிச் சென்றார்கள். அவர்களில் ஒருவர் மாயூரத்துக்கு மிக அருகில் உள்ள ஊர்க்காரர். அவருடைய தந்தையாரின் காலத்தில் உத்தியோக நிலையில் வடநாடு சென்ற அவருடைய குடும்பம், இப்போது ஸ்ரீ காசியிலேயே தங்கிவிட்டது. அவர் லைஃப் இன்ஷியூரன்ஸ் கார்ப்பொரேஷனில் ஓர் அதிகாரி. தென்னாட்டிலிருந்து தங்கள் குடும்பம் இங்கே வந்து இரண்டு தலை முறைகள் ஆனபோதிலும், தங்கள் நாட்டுப் பழைய பழக்கவழக்கங்களைக் கைவிடாது பின்பற்றி வருவதாகச் சொன்னார். இடையே ஒரு சுவையான செய்தியும் சொன்னார்:

ஒரு கட்டிடம். விரைவில் முடித்துவிடத் திட்டம். வேகமாக நடந்து வந்து, பாதியில் நின்று விட்டது. அவசரமாக நடக்க வேண்டிய அந்த வேலை நின்ற காரணத்தைக் கேட்டு, மேலதிகாரி உத்தரவு பிறப்பித்தார். பதில் வந்தது. அதில், 'வஜ்ரசூர்ணம் இராததால் வேலையை நிறுத்த வேண்டிவந்த'தாக எழுதியிருந்தது.

'வஜ்ரசூர்ணம் என்றால் என்ன? அது எங்கே கிடைக்கும்?' என்ற பிரச்னை தலைமைக் காரியாலயத்தில் கிளம்பியது. ''அது நம் பண்டைய கட்டிடக் கலையில் சிறந்த மூலிகைகள் கலந்த ஒரு கலவைப் பொருளாக இருக்கலாம்'' என்று ஓர் அறிஞர் சொன்னார். உடனே வடமொழி வல்லுநர் ஒருவரிடம் விளக்கம் கேட்டார்கள். 'சூர்ணம் என்று வருவதால் பெரும்பாலும் அது மருந்துச் சரக்காக இருக்கும்; மருத்துவர்களைக் கேட்க வேண்டும்' என்று அவர் சொல்லி விட்டார். மருத்துவ வல்லுநர்கள், ''அது ஆயுர்வேத முறையில் அமைந்ததாக இருக்கும்'' என்றார்கள். அந்த முறை அறிந்தவர்களைக் கேட்டார்கள். ''பலர் பலவிதமான சூர்ணங்களைச் செய்து வைத்துக்கொண்டு அவரவர் மனங்கொண்டபடி பெயரிட்டு விடுகிறார்கள். ஆகவே, வியாதி இன்னது என்று தெரிந்தால் அதற்கேற்ற மருந்து இன்னதென்று கண்டு விளக்கம் தரலாம்'' என்று அவர்கள் சொன்னார்கள்.

இதற்குள் பல மாதகாலம் ஓடி விட்டது. அதிகாரி பொறுமை இழந்தார். ''அறிவு கெட்டவர்களே! அவசரம் புரியவில்லையா? யாருக்காவது நோய் கண்டிருந்தால், அவர்களை விலக்கிவிட்டு நல்லவர்களைக் கொண்டு வேலையை உடனே தொடங்க வேண்டியது தானே! அப்படிச் செய்து தெரிவித்துக் கொள்ளுங்கள். அவசரம்!'' என உத்தரவு போயிற்று. கீழதிகாரி மறுபடியும், ''வேலை நின்ற காரணம் வஜ்ரசூர்ணம் இல்லாததால் என்று எழுதியிருந்தேனே; அதற்குப் பரிகாரம் ஒன்றும் இல்லாமல் வேலையை எப்படித் தொடங்கிச் செய்வது?'' என்று பதில் எழுதிவிட்டார்.

''நீர் சொல்வது விளங்கவில்லை. புரியக்கூடிய வார்த்தைகளைக் கொண்டு எழுதும்'' என்று மறு உத்தரவு.

''சிமெண்ட் இல்லை. உடனே அனுப்புங்கள்'' என்று பதில் தந்தி. பிறகு சிமெண்ட் அவசரமாக அனுப்பப் பெற்று வேலை விரைவில் நடந்து முடிந்தது.

வழக்கத்தில் இல்லாத பழைய சொற்களையோ, தங்கள் மனம் போனவாறு சொற்களைப் புதிதாக ஆக்கியோ கையாளுவதால் கால தாமதமும் வீணான கலக்கமுமே விளைகின்றன என்ற உண்மையை, வஜ்ரசூர்ணம் என்ற இந்திச் சொல் எங்களுக்கு நினைவூட்டியது.

மீண்டும் சில நாள் ஸ்ரீ காசியில் தங்கி, விமான மூலம் கல்கத்தா வழியில் சென்னை திரும்பினோம்.

EDITED PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN

பத்திரமான பாதுகாப்பிற்கு
ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்

தீர்க்கதரிசி தன்
குடும்பத்தின் பாதுகாப்பிற்கு
ஏற்பாடு செய்வான். அதற்கு
ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்
உதவியாயிருக்கிறது.



LIC-41 TAMIL

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

டிவிஷனல் ஆபீஸ்:
பிருதிவி பில்டிங், 364/366, நேதாஜி ரோட், மதராஸ் - 1.
கிளைகள்: மதராஸ், சிதம்பரம், நெல்லூர், வேலூர்.

Manjari - November '58 **Regd. No. M. 497**

(Regd. as a Newspaper in Ceylon)

மஞ்சரி

பொருளடக்கம்

விளம்பி - கார்த்திகை **நவம்பர் 1958**

ஊரும் உலகமும்	..	..
எங்கள் கிருஷ்ணு	பேரெண்ட்ஸ் மகஸீன்	
இணையற்ற விசுவாசம்	பிறை	
என்னைக் கேளுங்கள்	காப்டன் சேஷாத்திரிநாதன்	
மலையாள இசை	மாத்ருபூமி	1
தீபாவளி	சுதேசமித்திரன்	1
சித்திரசேனனும் கௌரவர்களும்	..	2
சாஸன விசித்திரங்கள்	தினமணி சுடர்	2
கவி சந்திராவதி	ப்ரபாஸி	2
ஷா கண்ட சோஷலிஸம்	ரா. ஸ்ரீ. தேசிகன்	3
கலியாண விளம்பரங்கள்	கர்மவீர்	3
மரங்கொத்தி	அமிர்த பஜார் பத்திரிகை	3
உடனே பதில்	ஜீவன் ஸாஹித்ய	4
ஆச்சரியமான யந்திரங்கள்	பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன்	4
மந்தாடன் செட்டியார்	ஹிந்து	4
பிறர் காரியம்	ஆந்திர பத்திரிகா	4
ஆரோக்கிய உணவு	ஈஸ்டர்ன் ஸைக்கோகிராஃப்	5
நந்திகேசுவரனேதான்	எல்லார்வி	5
மாயக்காரி (கன்னடக் கதை)	'ஆனந்தா' - பாமா	5
நேபால யாத்திரை (தமிழ்ப் புத்தகம்)	கல்யாணசுந்தர தேசிகர்	6